முன்னிலா

ஸ்ரீமான் எம். அனந்தநாராயணன், ஐ. ஸி. எஸ்.,
,, எம். கிருஷ்ணன், எம். ஏ.,
ஸ்ரீமதி மீனாம்பாள்,
,, லக்ஷ்மி அம்மாள் எம். ஏ.,
,, விசாலாக்ஷி அம்மாள் (காசினி),
,, டாக்டர் ஸரஸ்வதி அம்மாள்

எழுதிய சிறு கதைகள்.

" இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை "

தினமணி காரியாலயம்
100, மவுண்டு ரோடு
சென்னை
1944

காபிரைட்] [விலை அணா 12

மறுமலர்ச்சித் திருவிழா

"புஸ்தகம் ஹஸ்த பூஷணம்" என்று சாதாரணமாய்ச் சொல்வதுண்டு. புஸ்தகம் கைக்கும் ஆபரணமாக இருக்க வேண்டியதுதான். "ஒவ்வொரு வீட்டுக்கும் அழகான நாற்காலி முதலான சாமான்கள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானவை அழகான புஸ்தகங்களும்" என்றார் ரஸிகரான ஒரு பேராசிரியர். இத்தகைய நன்னோக்கத்துடன் விதம் விதமான பொருள்களைப் புதிய புதிய புஸ்தக ரூபமாக வெளியிட்டு, நம் கண் முன்னே தமிழ் நாட்டில், இன்று நடைபெறும் மறுமலர்ச்சித் திருவிழாவைச் சிறப்பிக்க வேண்டுமென்பது எங்கள் நோக்கம்.

வாழ்க்கைச் சித்திரங்கள்

இந்த நோக்கத்தோடு முதல் முதல் மகாத்மா காந்திக்கு ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள் சூட்டிய 'நினைவு மாலை'யைத் தமிழர்களுக்கெல்லாம் ஹஸ்த பூஷணமாக அளித்து உதவியது 'தினமணி' வெளியீடு. அதை அடுத்து மஹா கவி ரவீந்திர நாத தாகூருக்கும் தமிழ்மாலை சூட்டினார் ஸ்ரீ. கி. சந்திரசேகரன் எம். ஏ. பி. எல். அன்னை கஸ்தூரிபாவின் வாழ்க்கையை ஸ்ரீ ருக்மிணி பி. ஏ. சித்திரிக்கிறார். மௌலானா அஜாத் என்ற பெரியாரது வாழ்க்கையைச் சித்திரித்து மிஸ்டர் எம். எம். இஸ்மாயில் எம். ஏ. என்ற முஸ்லிம் நண்பர் ஒரு புகழ் மாலை சூட்டுவார். இது பதினோராவது பிரசுரமாக வெளிவரும். இப்படியே நமது தேசபக்த ஆசு கவியான பாரதியார் முதலானவர்களின் வாழ்க்கைச் சித்திரங்களும் வெளியிட எண்ணியிருக்கிறோம்.

யாத்திரைப் புஸ்தகங்கள்

ஜீவிய சரித்திரங்களோடு யாத்திரைப் புஸ்தகங்களும் வெளியிட உத்தேசம். "கைலாஸம் மானஸரோவர்" உள்ளது உள்ளபடியே வர்ணித்து அந்த ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வோருக்கு, வழிகாட்டியாகவும் உதவக்கூடிய புஸ்தகம். இதை எழுதியவர், "வெள்ளிப் பனி மலையின் மீதுலவுவோம்" என்று பாரதியார் வர்ணித்திருக்கும் பிரதேசங்களிலே சஞ்சரித்து வந்த ஸ்ரீ. எஸ். வேதாந்தம்.

அரசியலும் சரித்திரமும்

இத்துறையில் "போலந்து—பின்லந்து" என்ற நூல் வெளி வந்திருக்கிறது. தளவாய்த் தாத்தா அல்லது அரியநாத முதலியார் என்ற சரித்திர நூல் பத்தாவது பிரசுரமாக விரைவில் வெளிவரும். தமிழர்கள் கிணற்றுத் தவளைபோல் இருந்து விடாமல், உலகமும் உலக சரித்திரமும் தெரிந்து வாழ வேண்டுமென்பது இத்தகைய பிரசுரங்களின் நோக்கம்.

சிறு கதைகள், நாவல்கள்

ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்திற்கும் நல்ல பொழுது போக்கிற்கு உரிய சிறு கதைகளும் நாவல்கள் முதலான பெரிய கதைகளும் வெளிவர வேண்டியதும் அவசியமாகும். இந்த நோக்கத்தோடு "சிறு கதை மஞ்சரி" என்ற தொகுதி யொன்று வெளி வந்திருக்கிறது. இக் கதைகளை எழுதிய தமிழ்ப் பேராசிரியரின் பெயர் தமிழ் நாடெங்கும் பிர சித்தமானது. 'பாலையா' என்ற புனைபெயருடன் இவரது கதைகள் வெளியிடப்படுகின்றன. "முன்னிலா" என்ற இச் சிறு கதைத் தொகுதியும் வாசகர்களுக்கு நல்ல பொழுது போக்கு, நல்ல விருந்து. இன்னும் இத்துறையில் நல்ல நல்ல புஸ்தகங்கள் வெளிவரும். "தில்லைக் கோவிந்தன்" பிரசித்தி பெற்ற ஸ்ரீ. அ. மாதவையா ஆங்கிலத்தில் எழுதிய நாவலின் மொழிபெயர்ப்பு. இவரது குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் எழுதிய சிறுகதைத் தொகுதிதான் 'முன்னிலா'. நாவல்களிலும் விதம் விதமான நவீனங்கள் வெளிவரும்.

நாடகம், ஹாஸ்யம் முதலியன

நாடகத் துறையிலும் புதுமை புதுமையான நூல்களை வெளியிட உத்தேசித்திருக்கிறோம். ஹாஸ்யத் துறையிலும் பல நூல்கள் வெளிவந்து தமிழ் மக்களுக்குக் களிப்பு ஊட்டவேண்டுமென்பது எங்கள் விருப்பம். "ஸ்ரீ வி. ஸி. கோபாலரத்தினம்" என்றால், "அவர் வக்கீல், பி. ஏ. பி. எல்." என்றெல்லாம் ஞாபகம் வராது; "பிரபல நாடக ஆசிரியர், தமிழ் நாட்டின் ஹாஸ்ய ராஜா" என்ற ஞாபகந்தான் பளிச்சென்று வரும். இவருடைய ஹாஸ்ய நாடகங்கள், கோர்ட்டு விநோதங்கள் முதலியன இப்போதுதான் முதல் முதலாகப் புஸ்தக உருவில் வருகின்றன.

இன்னும் பல வேறு துறைகளில் "தினமணி" வெளியீடு தமிழ் மக்களுக்குப் பணிசெய்ய முயன்றுகொண்டிருக்கிறது.

பொருள் அடக்கம்

1. முன்னிலா 9
அனந்தநாராயணன்

2. மாசி பிறந்த நாள் 19
கிருஷ்ணன்

3. தூரத்துப் பச்சை 26
விசாலாக்ஷியம்மாள்

4. கிராம வாசம் 31
லக்ஷ்மியம்மாள்

5. கெரஸொப்பா நீர்வீழ்ச்சி 35
ஸரஸ்வதியம்மாள்

6. மயிலாப்பூர் வக்கீல் 37
அனந்தநாராயணன்

7. மகராசாவின் வெள்ள நாக்குட்டி 47
கிருஷ்ணன்

8. அபஸ்வரம் .. 52
ஸரஸ்வதியம்மாள்

9. இராவணனின் தினசரிக் குறிப்புக்கள் 71
அனந்தநாராயணன்

10. சித்திராபௌர்ணமி 81
மீனும்பாள்

11. மலைப்பச்சிலை 88
லக்ஷ்மியம்மாள்

12. சிபார்சு 103
கிருஷ்ணன்

குறிப்பு:—இவற்றுள் 'முன்னிலா', 'கெரஸொப்பா நீர்வீழ்ச்சி', 'அபஸ்வரம்', 'மலைப்பச்சிலை' என்பவை இதுவரை அச்சேருதவை; மற்றவை, 'பஞ்சாமிருதம்', 'கலைமகள்', 'சில்பஸ்ரீ' பத்திரிகைகளில் வெளிவந்தவை.

பதிப்புரை

“புற்றீசல் போலப் புறப்படுகின்றன சிறுகதைகள் தமிழ்நாட்டிலே!” என்று வருந்தினார் ஒரு தமிழ்ப் பண்டிதர். “இந்தக் காலத்திலே அப்படிப் ‘புலபுலெனக் கலகலென’க் கதைகள் வருவதில்லை: காரணம், பிற நாட்டுக் கதைப் புஸ்தகங்களும் பத்திரிகைகளும் யுத்தத்தினால் ஒழுங்காகப் புறப்பட்டு வந்து சேராததுதான்!” என்று குறும்பாகச் சிரித்தார் தமிழ்ப் பற்றுள்ள ஆங்கிலப் புலவர். இந்தச் சிரிப்பிலும் அந்த வருத்தத்திலும் பொருள் இல்லையென்று சொல்லமுடியுமா?

தமிழ்ப் பத்திரிகைகள் வாயிலாகவும், புஸ்தக வடிவமாகவும் வந்த வண்ணமாயிருக்கும் சிறுகதைகளைத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் சிறப்பியல்பு என்று சொல்லலாம். ஆனால் மின்னுவதெல்லாம் பொன்னா? சிறு கதை யென்று சொல்லுவதெல்லாம், எழுதுவதெல்லாம், சிறுகதையாகுமா? இதுவரை நமது தாய்மொழியில் வெளிவந்திருக்கும் சிறுகதைகள் பலவும், ஆசிரியர்கள் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், மொழிபெயர்ப்புகள் அல்லது ‘தழுவல்’கள்தான். சிலர் சுவையான நிகழ்ச்சிகளைச் சுவையான முறையில் எழுதியும் இருக்கிறார்கள். சில ‘தழுவல்’கள், சிறுகதை-அமைப்பிற்கு இசைவாகவும் இருக்கின்றன. ஆனால் இப்புதுமை - ஆசிரியர்கள் பலருக்கும் தமிழ்நடை ‘ஜான் ஜில்பின் குதிரை’ போலவே நடக்கிறது! தமிழர்களின் வாழ்வோடு இசைந்து போகாத சிறுகதைகளின் போக்கும் கூட, ஆங்கில இலக்கியப் பிரசித்தி பெற்ற அந்தக் குதிரையைத்தான் ஞாபகப்படுத்துகிறது.

நமது புதுமை - எழுத்தாளர்களில் சிற்சிலரே ஜான் ஜில்பினைப் போல் முற்றும் குதிரை வசமாகிவிடாமல் நினைத்த இடத்திற்குக் குதிரையை நடத்தக் கூடியவர்கள். இவர்களே, தமிழ்ப் பொதுமக்களோடும் தமிழோடும் நன்றாகக் கலந்து உறவாடித் தக்க தமிழ் நடையில் தாம் கருதிய பொருளை அமைத்துக் காட்ட வல்லவர்கள். இவர்களிலும் மிகச் சிலரே தமிழர் வாழ்வையும், இதயத் துடிப்பையும் கதை - வடிவம் ஆக்கக் கூடியவர்கள்.

உணர்ச்சி-வேகங்களையும் மனோபாவனைகளையும் உள்ளபடி அமைத்துக் கதைகளை நடத்திக் காட்டும் வாக்கு-வடிவம் எவ்வளவு அபூர்வமான சரக்கு என்பது, ஆடம்பரமாக வெளிவந்து விளம்பரமாகும் கதைப் புஸ்தகங்களைக் கூர்ந்து வாசிக்கிறவர்களுக்கும், வாசித்து விமர்சனம் செய்கிறவர்களுக்கும் இனிது புலனாகும்.

தமிழ்ச் சமுதாயத்தோடு ஒட்டாமல், தமிழகத்தின் ஜீவநாடியைத் தொட்டுப் பாராமல், தமிழன் இதயத்தை எட்டியும் பாராமல், எத்தனையோ காதற் கதைகளும் துப்பறி கதைகளும் எழுதித் தள்ளும் ஸாஹஸங்களுக்கிடையே, அபூர்வமாகச் சில அசல்-சிறுகதைகளும் வெளிவருவது தமிழனுக்கு அதிர்ஷ்டம்தான்; புதுமைத் தமிழுக்கே ஒரு பாக்கியம்தான். இத்தகைய அபூர்வமான நூல்-வரிசைகளில் முன்னணியிலே வைத்து எண்ணத் தக்க சிறப்பு 'மூன்னிலா' முதலிய இக்கதைகளுக்கும் உண்டு என்பது திண்ணம்.

ஒரே குடும்பத்தினரான ஆறு தமிழர்கள் — ஒரு தாயின் வயிற்றில் பிறந்த அறுவர் — எழுதிய பன்னிரண்டு கதைகள் இப்புஸ்தகத்திலே தொகுக்கப் பெற்றுள்ளன. இவர்கள் தந்தையாரான ஸ்ரீ. அ. மாதவையா புதுமைத் தமிழ் இலக்கியத்திற்கே வழிகாட்டியவர்களில் ஒருவர். இந்த ஆசிரியர்களுக்கு இலக்கியச் சுவை ஊட்டிய அவர் தம் நூல்களிலே, பெரும்பாலும் சமூகத்திலுள்ள போலி-நடத்தை, பொய்-ஆசாரம் முதலியவற்றையெல்லாம் நகைச்சுவை கலந்த ஒருவகை இகழ்ச்சி-முறையிலே கண்டித்து ரஸமாக எழுதும் ஆற்றல் வாய்ந்தவர். அத்தகைய ஹாஸ்ய முறையும் பரம்பரைக் குணமோ என்று தோன்றும், இந்த நூலை வாசிப்பவர்களுக்கு.

எனினும் இந்த ஆசிரியர்கள் கேவலம் சீர்திருத்தப் பிரசாரமாகவோ, மனக்கசப்புடனோ, குணதோஷங்களைக் கூறவில்லை. இலக்கியச் சுவை ததும்பச் சிறுகதைகள், கட்டுரைகளின் எல்லைக்குள் நின்று பேசுகிறார்கள். புத்தப்புதிய முறைகளைக் கையாண்ட போதிலும் இவர்கள் சித்திரிக்கும் நிகழ்ச்சிகள் தமிழர்களின் ஹிருதய பாவத்தோடு ஒட்டியவைதான்.

இந்த ஆசிரியர்களில் ஒவ்வொருவரும் தனித் தனிப் பாணியில் எழுதியுள்ளார்கள். குரங்கையும், ராக்ஷஸனையும், யமதூதர்களையும் கொண்டு, மானிடர்க்குள்ள குறைகுணங்களை மெல்லப் பரிகசிக்கிறார் ஸ்ரீ அனந்த நாராயணன், ஐ. சி. எஸ். — முன்னிலா, இராவணனின் தினசரிக் குறிப்புகள், மயிலாப்பூர் வக்கீல் என்னும் கதைகளிலே. தூரத்துப் பச்சையும், சித்திரா பௌர்ணமியும் பேச்சுக்கும் நடத்தைக்கும் உள்ள மாறுபாட்டையும், லக்ஷ்யத்திற்கும் அனுஷ்டானத்திற்கும் உள்ள முரண்பாட்டையும் வற்புறுத்தி நம்மைச் சிந்தையில் ஆழ்த்துகின்றன. அருமந்த மலைப் பச்சிலையும் பிடுங்கி நட்ட இடத்திற்கு ஏற்றவாறு மாறிவிடுவது போல், லக்ஷ்ய மணப் பெண்ணும் புக்ககம் போய் மாறிவிடுகிறாள் — என்ற பரிதாபகரமான செய்தியைச் சொல்வது மலைப் பச்சிலை. இது போன்றே பரிதாபகரமாய், கிராமவாசத்தால் மூடநம்பிக்கைகளுக்கு இடங் கொடுக்க நேரிடுகிறது என்று காட்டுகிறது கிராமவாசம் என்ற கதை.

இப்படியெல்லாம் அறிவுறுத்தும் நோக்கம், இலக்கியச் சுவையோடு எவ்வளவு நன்றாய்க் கலந்து வருகிறது! மாசி பிறந்த நாள், சியார்சு என்னும் கதைகளில் இலக்கியச் சுவையே மேவிடுகிறது: கதைச் சுவையின் ஆழத்திலே புதைந்து கிடக்கிறது கதையின் நோக்கம். இந்த வகையில் அபஸ்வரம், மஹாராசாவின் வெள்ளி நாக்குட்டி, கோலேப்பா நீர்வீழ்ச்சி ஆகிய மூன்றும் விசேஷ வெற்றி அடைந்திருக்கின்றன என்று தோன்றுகிறது.

சுருங்கச் சொன்னால், இச்சிறுகதைகளைப் புதுமைத் தமிழ் இலக்கியத்திலும் 'புது வழிகள்' என்று சொல்ல வேண்டும். இன்னும் புதுப் புது முறைகளைத் தைரியமாகக் கையாண்டு சிறுகதைகளைத் தமிழிலே சிருஷ்டிக்க விரும்புகிறவர்களுக்கும் இவை வழிகாட்டும் என்று நம்புகிறேன்.

பி. ஸ்ரீ.
பதிப்பாசிரியர்,
"தினமணி வெளியீடு"

9—10—'44
சென்னை.

தினமணி வெளியீடு

இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்பேட்டை, சென்னை.

திரு. கே. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை.

திரு. ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்.

திரு. கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியர்,
ப்ரெஸிடென்ஸி காலேஜ், சென்னை.

திரு. டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை.

திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவெர்ஸிடி.

திரு. ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா.

திரு. ஏ.வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், பிரகதி பிக்சர்ஸ்,
சென்னை.

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்,
சென்னை யூனிவெர்ஸிடி.

முன்னிலா

[திரியக் சிருஷ்டியில் சேர்ந்த குரங்கினரைப் பற்றின இச் சிறு கதையில், உயர்திணை அஃறிணை வினை முடிவுகள் ஒரே ரீதியாயில்லாததற்கு ஆசிரியர் வருந்துகிறார். காரணம் யாதெனின், குரங்கினர் 'மக்க'ளுமாவர்!]

விந்திய மலைத் தொடரைச் சார்ந்த ஒரு வனத்தில், குரங்குச் சாதியார் மிகுதியாக வசிக்கும் சில பிரதேசங்கள் இருக்கின்றன. இந்த இடங்களில், மரங்களும் கிளைகளும் மர நிழலும் விசேஷம். தவிரவும், இவை இயற்கை வனப்பும், சிறு பாறைகள், தடாகம், நீர்வீழ்ச்சி முதலிய வசதிகளும் பொருந்தியவை. இங்கு அநேகமாய் அந்திக் காலத்திலும், நிலா மிகுந்த முன்னிரவுகளிலும், குரங்கினருள் புதுமணம் புரிந்தவரும் காதலருமாகிய ஆண் பெண்கள், கூட்டமாக மரக் கிளைகளில் வீற்றிருந்து, காம லீலைகளிலும் ஸல்லாபத்திலும் பொழுது போக்குவது வழக்கம். ஒரு ஸ்தலத்தில் அல்லிக் குளமொன்றும், பெரும் பாறைகளும், காற்றில் என்றும் மெதுவாய் அசையும் இலையடர்ந்த மரங்களுமுண்டு. இதுவே காதலர்க்கு மிகப் பிரீதியான சந்திப்பிடம். ஆனால் பகவத்பாதர் என்ற குருவின் பரம்பரையினரும் வேதாந்த மடத்தின் அதிபதியுமாகிய நித்யானந்தர் என்ற ஸந்யாஸிக் கருங்குரங்கு, இங்கு ஒரு பெரும் பாறையின் மேல், சிஷ்ய கோஷ்டி ஸஹிதமாய், இரவிரவாக உபந்யாஸங்கள், த்வைதாத்வைத தர்க்க விமர்சனை, யோகாஸனப் பயிற்சி, பஜனை முதலிய நடத்தி வரவே, காதலராகிய வாலிபக் குரங்கினர் மிக வெறுப்புற்று இங்கு வருவதை அடியோடு நிறுத்திவிட்டனர். முன்னிலும் மிகுந்த உத்ஸாகத்துடனும், பேரிரைச்சலுடனும் ஸந்யாஸிகளின் வியவஹாரங்கள் மாத்திரம் இங்கே நடைபெறலாயின.

ஒரு காலத்தில் ஸுமுகனென்ற வாலிபக் குரங்கு, ப்ரியம்வதை என்ற பெண் குரங்கின்மேல் அபாரமான

காதல்கொண்டு, பல யுக்திகளால் தன் காதலை அவளுக்குத் தெரிவித்து, தன் யௌவன வடிவழகினாலும் வீரச்செயல்களாலும் அவளுடைய ஸம்பூர்ணக் காதலை ஸம்பாதித்துக்கொண்டது. ப்ரியம்வதை அதி ஸுந்தரியாக இருந்ததாலும், அவளைக் காமுற்றோர் பலராதலாலும், அவளன்னைப் பெறுவது ஸுலபமாகவில்லை. பலர் அபஜயமடைந்த விஷயத்தில், தன் அபூர்வ பராக்கிரமத்தால், ஸுமுகன் வெற்றி பெற நேர்ந்தது. பிறகு, குரங்கினர் லோகாசாரப்படி, ஸுமுகன் ப்ரியம்வதையின் தாய் தந்தையரின் அனுமதி பெற்று, ஆஞ்சநேயர் ஸந்நிதியில் அவளுடன் கைகோத்து நடந்து, ஆறு மாஸம் கழிந்தபின் நடைபெற வேண்டிய விவாஹச் சடங்கையும் நிச்சயித்துக்கொண்டு, காதலியுடன் ஸல்லாபமாக அந்திப்பொழுது சந்திரிகை யிரவுகளைப் போக்க ஆவலாய் ஆரம்பித்தது. 'கைகோத்த நடை'க்கு மறுநாள் காதலரிருவரும் ஸந்தோஷமாய்த் தனித்துப் புறப்பட்டனர். அன்றிரவு பௌர்ணமியாதலால், அவர்களுக்கு வெகு உத்ஸாகமாக இருந்தது. நடுநிசியின் முன்பு திரும்பவும் அவசியமில்லை. ஸம்பிரதாயப்படி ஸுமுகன் தன் காதலியை, காதலர் மணந்தோர் அனையவர் சந்தித்துப் பொழுது போக்கும் ஸ்தலமொன்றுக்கு அழைத்துச் சென்றது.

அங்கே ஒரு அழகிய புனல்வீழ்ச்சியும் பாறைகளும் அடர்ந்த மரங்களுமிருந்தன. பூதேவியின் சுவாஸத்தைப் போல் மெல்லிய நறுமணக் காற்று வீசிக்கொண்டிருந்தது. ஸுமுகன், ப்ரியம்வதை, இவரையொத்த பல பல குரங்குகள், பாறைகளின்மீதும் மரக்கிளைகளிலும் வீற்று விளையாடிக்கொண்டிருந்தன. அவை, பரஸ்பர வாஞ்சையினால் ஆகர்ஷிக்கப்பட்டு, பரவச நிலையிலிருந்தன. ஒரு குரங்கும், தன் காதலனோ காதலியோ தவிர்த்து, அந்த ஸ்தலத்தின் அற்புத ஸௌந்தர்யத்தையாவது, மற்றக் குரங்குகளையாவது, ஒன்றையாவது கவனிக்கவில்லை. சில, புனல்வீழ்ச்சியருகில் பாறைகளின்மேலே குதித்து, கைகளால் நீரை ஏந்தி இறைப்பதும், நீரிலிறங்கி ஸ்நானம்

செய்வதுமாக, காலத்தை மறந்து, ஜலக்கிரீடையில் ஆழ்ந்திருந்தன. சில மரக் கிளைகளில் வால்களைப் பின்னி உட்கார்ந்து ஒன்றையொன்று தழுவித் தழுவி இன்புற்றிருந்தன. சில, எச்சில் பாராட்டாமல் பழங்களை மாறி மாறிக் கடித்துத் தின்றுகொண்டிருந்தன. சில, ஒன்றின்மேலொன்று சாய்ந்து அரைநித்திரையி லிருந்தன. சில, நகைப்புடன் முத்தங்களில் வியாபாரம் செய்துகொண்டிருந்தன. எங்கும் ஒரே களிப்பு, காதலரின் தடுமாற்றப் பேச்சு, இன்ப மயமான காதற்போர். திடீரென ஒரு செங்குத்துப் பாறையின் பின்னிருந்து, இவையெல்லாம் தானும் கண்டு ஆனந்திக்க வந்தவன்போல் பூர்ண சந்திரன் உதயமாகவே, பல குரங்குகள் வெறிகொண்டு பாறைகளின்மீது நர்த்தனம் செய்ய ஆரம்பித்தன. காற்று சிறிது பலக்கவே, இலை நிழல்கள் பின்-ஸதிர் புரியலாயின.

அந்த லாவண்யமான சந்திரிகையில், மோஹ வலையில் சிக்குண்டு பலர் கூடியிருப்பதையும், ஸ்வபாவ நாணத்தையும் மறந்து பெண் குரங்குகள் காதலர்க்குரிய லீலைகளில் ஆழ்ந்திருப்பதையும் பார்த்து, மதனகலையில் அநுபவமில்லாத ப்ரியம்வதை அதிக லஜ்ஜைப் பட்டு ஸுமுகனுடன் ஒரு க்ஷணமேனும் அங்கே தங்கியிருக்கக் கட்டாய் மறுத்துவிட்டது. ப்ரியம்வதையின் மனோபாவத்தை எளிதில் அறிந்த ஸுமுகன் சிறுநகை புரிந்து, காதலியின் கூச்சத்தைத் தவிர்க்கும் அன்புச் சொற்களைப் பின்வருமாறு கூறலாயிற்று :—

"ப்ரியே, எனக்கு இதைவிடப் பதின்மடங்கு மனோரம்யமான ஸ்தலமொன்று தெரியும். அது தனியிடம் அங்கே ஒருவரும் வரமாட்டார்கள். நாமிருவரும் அங்கே சென்று, மரக் கிளைகளில் நிழல்களில் தனித்து விளையாடி உல்லாஸமாகக் காலத்தைப் போக்கலாம். அங்குள்ள அழகிய அல்லித் தடாகத்தை உனக்குக் காட்டவேண்டுமென்று எனக்குப் பலநாளாக ஆசையுண்டு.

"அங்கே வேதாந்த மடத்தைச் சேர்ந்த சில ஸந்யாசிகள் மாத்திரம், இரவிரவாகப் பாறைகளின் மேல்

விற்றிருந்து ஏதேதோ கத்துகிறுர்கள். நமது மலைகளெல்லாம் பெரு மேகங்களால் மூடப்பெற்ற வர்ஷ காலத்தில் இரவில் அடவிக் குட்டைகளில் தவளைகள் ஒருங்கே சப்திப்பதை நீ கேட்டிருக்கலாம். இதுவும் அதுமாதிரியாகத் தான் இருக்கும். ஸந்யாசிகளாறுலும் பட்டுப்போல் மயிர் போர்த்த உன் மேனி அழகை நோக்கி, சித்தம் கலங்கி என்மீது பொருமை கொள்வார்களென்று நீ நியாயமாகப் பயப்படலாம். ஆனுல் நாம் நிழல் மிகுந்த உயர்ந்த மரக்கிளைகளில் இருக்கப் போவதால், கீழே அகன்ற பாறையின்மேலுள்ள அவர்களுக்கு நம்மைக் கண்டுகொள்ளச் சிறிதேனும் இடமிராது. நாமும் அவர்கள் நடவடிக்கைகளை, இஷ்டமிருந்தால் விநோதமாகக் கவனிக்கலாம். இல்லாவிடின், முற்றிலும் அலக்ஷ்யம் செய்து விடலாம்.

"ஏகாந்த மயமான அந்தப் பிரதேசத்தில், நான் உன்னை மனங்குளிர ஆயிரம் தரம் முத்தமிட்டபோதிலும், தடை சொல்வோருமில்லை, சாக்ஷியாக வருவோருமில்லை."

ப்ரியம்வதை காதலனின் கடைசிச் சொற்களைக் கேட்டு நாணத்தால் தலைகவிழ்ந்து, தன் மெல்லிய விரல்களால் ஸுமுகனின் வாயைப் பொத்திக்கொண்டது. விரல்களை முத்தமிட்டு நீக்கியபின், ஸுமுகன் மறுபடியும், "ப்ரியே, இந்த ஸ்தலம் உனக்குப் பிடிக்கவில்லை. நாம் இங்கு தாமதிப்பதால் என்ன பலன்? அங்கே போகலாம், வா" என்றழைத்தது, பிறகு இரண்டு குரங்குகளும் ஸந்தோஷமாய் வால்களைப் பின்னிக்கொண்டு அல்லிக் குளத்தை நோக்கிச் சென்றன.

ப்ரியம்வதையும் ஸுமுகனும் அல்லிக் குளத்தை அடைந்த காலத்தில், அங்கு வேதாந்த மடத்தினர் இன்னும் வராததால், ஒரே நிசப்தமாக இருந்தது. குளமும் நீர்நிலையின் மீதுள்ள புஷ்பங்களும் காற்றில் மெதுவாக அசைவுற்று, நிலவிலே கண்ணைப் பறிக்கும் அழகுடன் பிரகாசித்தன. அங்குள்ள மரங்கள் மிக உயர்ந்து, கிளைபாய்ந்து, இலையடர்ந்தவை. மரங்களின்

நடுவில் குளத்தைத் தாண்டி ஒரு காலி ஸ்தலம். இங்கே பல சிறு பாறைகளும், ஒரு மிகப் பெரும் பாறையும்; பின்பு புதர்கள், மறுபடியும் மரங்கள், மலைத் தொடர்ச்சி. இந்தப் பெரும் பாறையின்மீதுதான் வேதாந்த மடத்தின் காரியங்கள் நடைபெறுவது. ஸுமுகன் கூறியவாறே, மரக்கிளைகளில் இலைமறைவில் நூறு குரங்குகளிருந்த போதிலும், பாறையின்மீதுள்ளவர்க்குத் தென்படக் காரணமில்லை. பாறையின்மீதிருப்பவரைச் சந்திரிகை யிரவில் எங்கிருந்தும் ஸ்பஷ்டமாகக் காணலாம்.

ஸுமுகனும் ப்ரியம்வதையும் உன்னதமான கிளை யொன்றிலேறி இலைகளால் மூடப்பட்டு ஸல்லாபமாகக் காலத்தைப் போக்கத் தொடங்கினர். அவ்விருவருள் நடைபெற்ற சிறு விளையாட்டுகளும் பேச்சுக்களும் மோஹ விவரங்களும் நமது பிரபஞ்சத்தின் பழங்கதை; ஆனால் ஜீவர்களின் அநுபவத்தில் நாள்தோறும் புத்துயிர் பெறுவது. அந்தக் கதைக்கு ஆதியந்தமில்லை; காலதேசமு மில்லை; அதில் சலிப்புறுவதே மரணம். இவ்வாறு அந்தக் காதலர், ஒவ்வொரு க்ஷணத்தின் இன்ப ரஸத் தையும் வடித்துப் பிழிந்து குடிப்பதில் ஈடுபட்டு, மெய்ம் மறந்திருந்தனர்.

நீர்நிலையின்மீது ஏக காலத்தில் இரண்டு பக்ஷிகள் மீனைக் குத்தி எடுக்கப் பாய்ந்தன. வெகு தூரத்தி னின்று, காட்டு யானைகளின் முழக்கம் கேட்டது.

ஸுமுகன், தன் காதலியின் கரங்களைப்பற்றி, தாழ்வான குரலில் பாடத் தொடங்கியது:—

ராகம்: நாத நாமக்ரியை] [தாளம்: ஆதி

பல்லவி

நினைமறந்த நேரமுண்டோ?—வெண்ணிலவின்
விளைமுறுவல்
தனைமறந்தும் கனிமறந்த தருவெனவே
துயர்கூர்ந்து, (நினை)

சரணம்

செயல்மறந்தும், துயில்மறந்தும், செம்மை
மொழி பலமறந்தும்,
மயல்மறவா மனத்திடையே வளர்காதல்
மறவாது, (நினை)

(2) கனவெல்லாம் நின்கனவாய்க் கற்பனையெலாம்
நினதாய்,
நனவெல்லாம் இளைவந்தோர் நகைகூற
நின்நினைவாய், (நினை)

இந்தப் பாட்டு முடிவதற்குள், தெற்காகப் பாறைகளின் பின்னிருந்து நித்யானந்தரும் பத்திருபது சிஷ்யரும் மரங்களின் மத்தியில் பிரவேசித்தன. கடைசியான குரங்கு களிமண் பீடமொன்றையும் மான் தோலையும் கொணர்ந்தது. எல்லா ஸந்யாசிக் குரங்குகளும் காட்டிலே கிடைக்கும் ஒருவகைச் செங்கல்லைத் தூளி செய்து நீருடன் கலந்து, உடம்பெங்கும் அழுக்குச் சிவப்பு வர்ணமாகப் பூசிக்கொண்டிருந்தன. ஓரிரண்டு மௌன விரதம் கொண்டிருந்ததால், தம் தடித்த உதடுகளைத் துளைத்து, அந்தத் துவாரத்தில் பன்றியின் விலா எலும்பை முறித்துக் குத்திக்கொண்டிருந்தன. சில, காய்ந்த கடுக்காய் மாலைகளைக் கழுத்தில் அணிந்திருந்தன. இந்த விநோதக் காட்சியைக் கண்டதும், மரக்கிளையிலிருந்த ப்ரியம்வதைக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஸுமுகன் தன் காதலியை நோக்கி, சப்தம் செய்யாமலிருக்கும்படி சைகை செய்தது.

மான்தோல் விரித்த பீடத்தின்மீது பெரும் பாறையின் மத்தியில் நித்யாநந்தரும் சிறிது சாம்பல் நிறமாகக் காணப்பட்ட மற்றொரு கிழக்குரங்கும் "ராம் ராம்" என்று கூப்பாடுபோட, மௌனிகளைத் தவிர மற்றெல்லாக் குரங்குகளும் தமக்கியன்றவாறு உரத்த குரலில் "ராம் ராம்" என்று பேரிரைச்சலிட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தை நித்யானந்தர் தன் கையிலுள்ள சிறு கோலால் சைகை செய்து நிறுத்தி, ஸந்யாசிக் குரங்குகளனைவரும் அங்கு

மிங்கும் பாறைகளின்மீது தாவி உட்கார்ந்தபின், வாலை நிமிர்த்திக்கொண்டு எழுந்து பின்வருமாறு பேசலாயிற்று:

"சிஷ்ய வானரங்களே, இன்றைக்கு நமது அதிதியாக வந்திருப்பவர் நமது வகுப்பினரில்லை, ஹிமய மலைச்சாரலில் வசிக்கும் குரங்கினரைச் சார்ந்தவரென்று நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால், இவரைக் குறித்து ஓரிரண்டு முக்கிய விவரங்கள் உங்களுக்குத் தெரியாதிருக்கலாம். அந்த விவரங்களை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இவர் நமது குல தெய்வமாகிய ஆஞ்சநேயரின் சிஷ்ய பரம்பரையில் வந்த தக்ஷிண குருக்களின் அனுக்ரஹத்தைப் பெற்றவர். இவர் பெயர் முக்தானந்த உபாத்யாயர். இவர் பரிபூரண ஆத்ம ஞானத்தை அடைந்திருப்பவர். இம்மட்டுமன்று, இவர் ஸகல கலைகளிலும் மஹா நிபுணர். இவரை வித்யாஸாகர மென்பது தகும். இத்துணை க்யாதி பெற்றவர் நமது மடத்தில் சிலகாலம் தங்கியிருப்பது நம் பூர்வ புண்ய பலனென்றே சொல்லவேண்டும்.

"இவர் வாழ்க்கையில் நடைபெற்ற ஓர் ஆச்சர்யமான ஸம்பவத்தை வெளியிட எனக்கு ஆவலாயிருக்கிறது. இவர் அதிபால்யத்திலேயே ஸந்யாசி விரதம் பூண்டார். ஒருநாள் வனத்தில் தியானம் செய்துகொண்டிருந்த வேளையில், வேட்டையின் நிமித்தம் வனத்தில் புகுந்த கௌஸாம்பீ ராஜனின் பரிவாரங்கள் இவரைச் சிறையெடுத்துச் சென்றனர். இரண்டு மூன்று வருஷங்கள் இவரை அரண்மனையில் இரும்புக் கழிகளால் அமைக்கப் பெற்ற கூடு ஒன்றில் அடைத்திருந்தார்கள். பிறகு இவரின் அதிஸாத்விக குணத்தைக் கண்டு இவரைச் சுயேச்சையாக ராஜ மாளிகைகளிலும் தோட்டங்களிலும் உலாவ விட்டனர். இந்த ஹேதுக்களால், நம்மிலும் நாகரிகத்தில் மிகுந்த மனுஷ்ய ஜாதியரின் ஆசார அனுஷ்டானங்களை இவர் அதிநுட்பமாக அறிந்துகொண்டார். அகஸ்மாத்தாக இவர் சிறையின்றும் தப்பியதால், இவரது இணையற்ற அனுபவ முதிர்ச்சியும் விவேகமும் நமது ஜாதியர்க்குப் பயன்படும் நல்ல தருணம் ஏற்பட்டிருக்கிறது.

இன்று நீங்கள், துறவறம் பூண்ட நமக்குப் பயன்தரக் கூடிய கேள்விகள் எதுவாகிலும், இவரைக் கேட்கலாம், தகுந்த விடை யளிப்பார் என்பதில் ஸந்தேகமில்லை."

நித்யானந்தரின் பிரதம சிஷ்யனுகிய மாருதிதாஸன் என்ற குரங்கு எழுந்து, நித்யாநந்தரையும் உபாத்தியாயர் என்ற சாம்பல் நிறக் குரங்கையும் நமஸ்கரித்துவிட்டுச் கூறலாயிற்று :—

"ஆசார்யரின் அமுத மொழிகளைக் கேட்டுப் பரவச மானேம். அதிதிக்கு நல்வரவாகுக.

"ஆத்ம ஞானத்தை நாடுவோர் எவர்க்கும் மானஸீக மான சில விக்னங்கள் ஏற்படுகின்றன. இவைதாம் காமக் குரோதாதிகள் எனப்படுவன. இவைதாம் மஹா சத்ருவென்று உபதேசிக்கப்படுகின்றன. யோக ஸித்திகள் பெற்ற போதிலும், வேருென்றச் சிறிதும் இடமின்றி இவற்றை வெல்வதரிது. முக்கியமாக, ஸ்திரீ புருஷ மோஹம் அல்லது காதலென்ற குணம், தெளிந்த நீரைப் பாசி மூடுதல் போலும், ஸூர்யனை மேகங்கள் மறைப்பது போலும், விவேகத்தையும் சித்தத் திடனையும் கெடுத்து விடுகின்றது. மனுஷ்ய ஜாதியை நன்கறிந்தவர், அந்த ஸமூகத்திலும் 'காமமே நாசத்திற்கு முக்கிய ஹேது' என்று அபிப்பிராயப் படுகின்றனர்.

"இந்தக் காதலென்ற குணம் யாது? இதன் இயற்கை என்ன? இதை வெல்லும் மார்க்கம் யாது? இந்த ஸந்தே கங்களை நிவிர்த்திப்பவன் லோகோபகாரியாவான். நமது அதிதியாகிய உபாத்தியாயரை, இந்த விஷயத்தைக் குறித்து, வாய்மலர்ந்தருளும் வண்ணம் நான் பவ்வியமாகப் பிரார்த்திக்கிறேன்."

மேல்மரக் கிளையிலிருந்து கேட்டுவந்த ப்ரியம்வதை ஸூமுகனை நோக்கி, — "இந்தக் கிழ ஸந்யாசி உண்மை யாகவே காதலுக்குப் பரிஹாரம் சொன்னுல், நானும் நன்றி பாராட்டுவேன். வரவர, எனக்கு உன்னைக்

கல்யாணம் செய்துகொள்ளப் பிடிக்கவில்லை" என்றது. இதைக் கேட்டுப் பின்கிளையிலிருந்த ஸுமுகன் தன் காதலியை ஆலிங்கனம் செய்து முத்தமிட்டது.

உபாத்தியாயர் என்ற சாம்பல்நிறக் கிழக் குரங்கு ஒரு தடியை ஊன்றிக்கொண்டு மெதுவாக எழுந்து, சில நிமிஷங்கள் இருமி, ஒரு பச்சிலையைத் தின்றுவிட்டு, கம்மிய குரலில் பின் வருமாறு உபந்யாஸம் புரிந்தது :—

"கேட்ட கேள்வியின் திறத்தை மெச்சுகிறேன். 'இந்த வேதாந்த மடத்தில் துறவறம் பூண்டொழுகுபவர் வெறும் ஏட்டுச் சுரைக்காய்ப் பண்டிதரில்லை, ஆத்ம ஞானத்தை நாடுபவர்' என்பது சங்கையினால் விளங்குகிறது. நமது ஆசார்யர்கள் ஒருவரும் இந்தக் கேள்விக்குத் தக்க விடையை ஸூத்ர பாஷ்ய கிரந்தங்களில் எழுதிவைக்க வில்லை. காரணம் குறிப்பிடத் தக்கது. கிருஹஸ்தாச்ரம அனுபவத்தால் மாத்திரம் காதலின் அதிநுட்ப இயலைக் கிரஹிக்க முடியாது. இதற்கு மனுஷ்யருள் நடைபெறும் வியவஹாரங்களை நன்கறிதல் வேண்டும். பிறகு காதலின் உற்பத்தி, வளர்ச்சி இவை நற்போதத்தால் நன்கு புலப் படும். நமது ஆசார்யர்களுக்குத் தம் ஜீவ காலத்தில் மனுஷ்ய ஸஹவாஸம் ஏற்பட அனுகூலமில்லாமற் போய் விட்டது.

"இனிச் சங்கையை விசாரிப்போம். மனுஷ்ய ஜாதியைக் குறித்தமட்டில், காதலென்பது ஏகதேசமாகப் பதினைந்து வயதுக்கு மேலும், அறுபது வயதுக்குள்ளும் ஸ்திரீ புருஷருள் நிகழும் ஒருவகையான சித்தசலனம். 'எந்த விதிக்கும் விலக்குகளுண்டு' என்பதை நான்கூற வேண்டியதில்லை. எண்பது தொண்ணூறு வயதுகளிலும் இளமங்கையரைக் காதலிப்போரும், பத்துப் பன்னிரண்டு வயதில் விரகதாபத்தால் வருந்தும் ஸ்திரீகளும் அந்த மனுஷ்ய ஜாதியில் இருந்ததும், இருப்பதும், மறுக்க முடியாதது. இந்தச் சித்த சலனத்தின் மூலகாரணம் யாது ? அதுதான் 'காதல்' என்ற கொடிய வியாதி ; அதிலும், தீவிரமான தொத்து வியாதி.

"நீங்கள் ஆச்சரியப்படலாம், ஸந்தேஹித்து மறுக்கலாம். பலர் வால்களை அசைத்தும், கர்ஜனை செய்தும் அவ்வாறு மறுப்பதை அறிகிறேன். 'இது மானஸீகமாயல்லவா நிகழ்கின்றது?' என்று ஆக்ஷேபனை செய்யலாம். விஷயத்தில் தீர்க்க ஆலோசனை புரிய வேண்டும். உள்ளதை உள்ளபடி காணவேண்டுமல்லவா? 'ஸத்யாத் நாஸ்தி பரோ தர்ம:'

"இந்த வியாதிக்கும் ஸ்பஷ்டமான ஸ்தூல ரூபமுண்டு. இது மஞ்சள் - காமாலையை யொத்து, பித்த மேலிட்டால் ஏற்படும் நோய். மஞ்சள் - காமாலையால் வருந்தும் சிசுவிற்குப் பிரபஞ்சமே மஞ்சளாகத் தோன்றுகிறது. அதுபோல், காதல்நோய் கண்டவன், தன் கைகளால் காதலியின் நடுமேனியை ஆலிங்கனம் செய்வது கஷ்ட சாத்தியமானாலும், 'மின்னலிடையாளே!' என்று பிதற்றுவான். அவள் நடையிலும் சரீர வாய்ப்பிலும் பாலைவன ஒட்டகங்களை ஒத்திருந்த போதிலும், "ஹம்ஸகமனே" என்று சுலோக மெழுதுவான். அவள் பாடும் அபஸ்வர மெல்லாம் நாரத கானமாகக் காதில் விழும். தவிரவும், மற்ற நீடித்த ரோகங்களைப் போல், இதன் சின்னங்களும் சேஷ்டைகளும் அளவற்றன. ஒருவன் இளைப்பான், அகாரணமாகச் சிரிப்பான்; மற்றொருவன், உடல் பருத்து, ஸதா ஸ்நேகிதர் செவிகளில் நாராசத்தைப் போல் தன் காதல் - புராணத்தை ஊற்றிக்கொண்டிருப்பான், ஒருத்திக்குக் கைவளையல் தானுகக் கழலும். ஒருத்தி சேடியரைக் கண்டதும் ஸர்ப்பம்போல் சீறுவாள். ஒருத்தி எல்லா ஜீவராசிகளும் விரும்பும் அமுதமயமான சந்திர மண்டலத்தையும் வீணில் பழிப்பாள். தவிரவும், இது தொத்துவியாதி. தூது சென்ற தோழி, நாயகனின் நண்பன் மேல் மோஹமாகிவிடுவாள்; அவனையும் ரோகம் பிடிக்கும். பிரயாணங்களில் ஒரு சுமை-மாடு படுத்தால், எல்லா மாடுகளும் விரைவில் படுத்துவிடுவது போல், யுவதியுவர் கூட்டங்களை இது ரோகசாலையாக்கிவிடுகிறது.

"இதற்குப் பரிஹாரம் என்னவென்றால் —"

இந்தத் தருணத்தில் உபந்யாஸகர் இருமலால் பெரிதும் பீடிக்கப்பட்டு மேலே பேச முடியாத நிலையை அடைந்தார். அவருக்குக் காசநோய் பூட்டிக்கொண்டு இழுப்பு ஆரம்பித்து விட்டது. பச்சிலைகளைக் கைகையாய் அள்ளிச் சாப்பிட்டும் பயன்படவில்லை. இறுதியில், உபந்யாஸத்தை மறு நாள் இரவு ஒத்திப் போட்டுக் கொள்வதென்று ஸந்யாசிக் குரங்கினருள் அரை மனதாய்த் தீர்மானம் செய்யப் பட்டது. பிறகு இருமல் - கர்ஜனைகளால் உடல் ஆடிக் கொண்டிருந்த முக்தானந்தரை, நித்யானந்தரும் மாருதி தாஸரும் மெதுவாக அழைத்துச் செல்ல, எல்லா ஸந்யாசிக் குரங்குகளும் "ராம் ராம்" என்று ஓலமிட்டுக் கொண்டே அந்த ஸ்தலத்தை விட்டுச் சென்றன.

"நிச்சயம் நாமிங்கு நாளையிரவு வரவேண்டும். இந்தக் காதல்-தொல்லைக்குப் பரிஹாரம் அறிந்துகொள்ள வேண்டாமா?..." என்று ப்ரியம்வதை சிரித்தது. பிறகு அந்த வாலிபக் குரங்குகளும், நடுநிசி நெருங்கினபடியால், மரத்தினின்று குதித்துக் களிப்பாய்த் தம் குகைகளை அடைந்தன.

சந்திரிகையில், காதலுக்கும் மேலான ஒரு சாந்தியில், அல்லிக்குளம் ஜ்வலித்தது. பேச்சுக்களிலும் நிசப்தம் இன்பமல்லவா?

மாசி பிறந்த நாள்

சமீபத்தில் மூன்று கருவேலமரங்கள் நெருங்கி அடர்ந்து வளர்ந்திருந்தன; வானமும் தரையும் கூடு மெல்லையில், தொலைவினால் மங்கிய ஒரு பனந்தோப்பு. ஒரு புல் பூண்டுகூடக் கிடையாது—எங்கும் ஒரே மணல்; மத்தியான வெயில் தீயாய் விழுந்து கொண்டிருந்தது. ஒருவனும் ஒருத்தியும் கருவேல மரங்களை நோக்கி விரைவாக நடந்து கொண்டிருந்தனர். அவன் இரைத்துக் கொண்டே, வியர்வை பொழிய, அவள்பின் தட்டுத் தடுமாறி நடந்தான். வெயில் தாங்கமாட்டாமல் தன்

அங்கவஸ்திரத்தைத் தலைமேல் போர்த்திருந்தான். அவளோ, சுடும் மணலில், கால் பதியாது, ஏதோ காற்றில் செல்லுபவள் போல் நடந்தாள்.

மரநிழலை அடைந்ததும், இருவரும் நின்றுவிட்டனர்.

'மாசி, நாம் இங்கயே தங்கலாம்' என்று அவன் சொன்னான்.

'இன்னும் சத்தே நடந்தால் பனங்காட்டுக்குப் போய் விடலாம், அங்க வேற யாரு—'

'இங்க மட்டும் எவன் வரப்போறான், இந்தப்பாழும் வெய்யிலிலே. பனங்காடு கிட்டவா இருக்கு—இப்படி உட்காரு.' தன் மேல்வஸ்திரத்தைக் கீழே பரப்பி, அவன் உட்கார்ந்து விட்டான்.

'மாசி, உனக்குத் தெரியுமா? பழைய காலத்தில் காதலர்கள் இப்படித் தான் பாலைவனத்தில் போவார்களாம். காதலன் பின்னால், அவன் சுவடுகளிலேயே அடி வைத்து அவள் நடப்பளாம், முள் தைக்காமலிருக்க. வரும் வழியெல்லாம் எனக்கிந்த அடிகள் ஞாபகம். பாட்டைக் கவனமாய்க் கேளு—'

அவள் கொல்லென்று சிரிக்கவே, தான் சொல்லவந்த பாட்டை நிறுத்தி விட்டான்.

'என்ன சிரிக்கறயே? பாட்டைக் கேட்டாத்தானே அதன் அழகு—'

'இல்லை, நீயொரு காதலியாய் விட்டயே, அதுக்குத் தான் சிரித்தேன்.'

'நானு—காதலியா—என்ன உளறுாய்?'

'நீ தானே சொன்னாய், நடக்கமாட்டாமல் பின்னே தள்ளாடித் தள்ளாடி வந்தால், அது காதலின்னு!'

அவன் பதில் சொல்லவில்லை. தன்னருகில் விழுந்து கிடந்த ஒரு குச்சியை யெடுத்துத் துண்டு துண்டாக ஒடிக்க ஆரம்பித்தான். பிறகு,

'அடுத்த வெள்ளிக்கிழமை என் பிறந்த நாள். எனக்கு என்ன தரப்போகுய்?' என்று அவள் கேட்டாள்.

'என்ன வேணும்?'

'நீ என்ன தருவாய்?'

'மாசி, உனக்கு என்னதான் தரமாட்டேன்? எதுவா யிருந்தாலும் என்னுசைக்கு அது ஒரு குறிப்பா? இந்த பூலோகத்தயே—'

'ஆத்தாடி! அது எனக்கு வேண்டாம். சின்னதாய் ஒரு காரியம் செய், போதும். வெள்ளிக்கிழமை எனக் கொரு விருந்து போடுவயா?'

'ஓ அதுவா?—'

'அட, பூலோகத்தைக் கொடுத்தவனுக்கு இது கூடவா முடியாது?''

'மாசி, உனக்கொன்னும் தெரியவில்லே. ஆத்தில் எல்லாரும் சுத்தப் பஞ்சாங்கம்! ஒரு கிறிஸ்தவச்சி சாப் படவா?—நீ உள்ளே காலெடுத்து வைத்தாலே உயிரை விட்டுவிடுவாள்! சாத்தியமான விஷயமாச் சொல்லு, எதுவானுலும் சரி, செய்யறேனு இல்லையா பார்! உனக் கென்ன் வேணுமோ—.'

'ஐயரே, எனக்கெதுவும் வேண்டாம்.'

'மாசி, என்னுல் முடிந்ததைத்தானே நான் செய்ய லாம்? நடக்கற காரியமாச் சொல்லு, கட்டாயமா—'

'உன்னுல் முடிந்த தொன்னும் எனக்கு வேண்டாம்.'

'இப்படி யொரு பிடிவாதமா? இந்த விருந்து தவிர வேறெதுவு மில்லையா?'

'நான் தான் சொன்னேனே, எனக்கொன்னுமே—'

'சரி, உன்னைக் கேட்டுப் பிரயோஜனமில்லே. நானு, நீ எதிர்பாராதபடி, ஏதாவது தருவேன், பார்.'

சற்று நாழிகை இருவரும் பேசவில்லே. முடிவில்,

'அது என்ன அது?' என்று கேட்டாள்.

'நான் சொல்லமாட்டேன். இப்போது சொல்லு வானேன்? வெள்ளிக்கிழமை வந்தால், தானே தெரிய வரது.'

'முன்னால் ஒருநாள் சொன்னையே—மோதிரமா

'இல்லை.'

'ஏதாவது ஒரு நகையாத் தானிருக்கும்.'

'நகையுமில்லை, நாணயமுமில்லை. நீ என்னதான் நினைத்து நினைத்துப் பார்த்தாலும் உனக்குத் தெரியாது; நான் சொல்லவும் மாட்டேன்.'

'சரி, போனுப் போறது. வெள்ளிக்கிழமை உன்னை எங்க காணலாம்?' அவன் சிறிது யோசித்துவிட்டு,

'காலை எட்டு மணிக்கு ஆத்தங்கரை யோரமாகக் காத்திருக்கேன்' என்று சொன்னான்.

'ஹூம், ஆத்தங்கரை யோரமா யார் யாரோ வரு வாங்க. அதுவும் எட்டு மணிக்கெல்லாம் கட்டாயமாக வருவாங்க.'

'சரி, யாரும் வராத இடமாச் சொல்லறேன். இன் னிக்குத் தான் போகமுடியலை—அதோ அந்தப் பனந் தோப்பிலிருக்கேன்.'

'எட்டு மணின்னு, சீரா எட்டு மணிக்கே வருவேன்; பனங்காட்டில் தனியா என்னைக் காக்க வைக்காதே.'

'ஓ, அதெல்லாம் பயப்படாதே! ஏழரை மணிக்கே வந்துடுவேன்.'

'அது என்னதான் கொண்டு வருவயோ?'

'சொல்லுவேனு? முடியாத காரியத்துக்காக இப்படிப் பிரமாதமாய்க் கோபித்தயே, என்னால் என்ன முடியு மென்று உனக்குத்தானே தெரியவரும்.'

காலையிலிருந்து விட்டுவிட்டுத் தூற்றிக் கொண் டிருந்த மழை ஒன்பது மணிக்கெல்லாம் பலமாகப் பெய்ய ஆரம்பித்து விட்டது. சோவென்று மணல் மீது சீறி

விழுந்தது. இருள் மூடிவிட்டது. காற்றும் மழையும் பனங்காட்டைத் துளைத்து அடித்தன. கூனி வளைந்த ஒரு பனை மரத்தடியில் ஒருத்தி ஒதுங்கிக் கொண்டிருந்தாள். அவள் சேலையெல்லாம் நனைந்து உடம்போடு ஒட்டித் தொங்கிற்று. மழை ஒருவாறு ஓய்ந்து விட்டதும் அவள் எழுந்து பனங்காட்டின் எல்லையை நோக்கிச் சென்றாள். பனைகளின் நடுவாக அவளைப் பார்த்து ஒருவன் வேகமாக வருவது தெரிந்தது.

'நல்ல வேளை நீ இன்னும் இருக்கிறயே! வரும்பொழுதெல்லாம் நீ எங்க போய் விட்டயோன்னு சந்தேகம். அப்பா, என்ன மழை, என்ன மழை!' என்று சொல்லிக் கொண்டே அவன் வந்தான்.

'இனிமேல் உன்னோடு நான் பேசப்போவதில்லை. ஆனால் இதுமட்டும் சொல்லணம்—உனக்காக நான் காத்திருக்கலே; இந்த மழையில், வெட்ட வெளிக்கு இது தேவலேன்னுதான் இங்கிருக்கேன்.'

'இதென்ன மாசி, மழை பெஞ்சால் அதுக்கு நானென்ன செய்யறது? உனக்கிந்த முன்கோபம்—'

'தயவு செய்து என்னோட பேசாமலிரு.'

'அட, மழை கொட்டினால் அதுக்கு நான்—'

'ஏழரை மணிக்கு மழை பெஞ்சுதா? எட்டு மணிக்குத் தான் பெஞ்சுதா?'

'ஏன் பெய்யவில்லே — ஒரே மட்டாய்க் கொட்டித்து, உதயத்திலிருந்தே தான்—'

'இல்லவே யில்லே, லேசாய்த் தூறித்தே யொளிய—'

'அட, தூத்தல் வேறே, மழை வேறயா? அதுதான் நான் சொன்னேன், உதயத்திலிருந்து—'

'சீசீ, பொய் சொல்லாதே! தூத்தல்னு நீ சொல்லவே யில்லே. ஒரே மட்டாக் கொட்டித்துன்னு சொல்லி விட்டு இப்பம்—'

'நானா பொய் சொல்லறேன்? நீதான் ஏதோ தூத்தல், தூவானம், மழை, இப்படி—'

'அது மட்டுமா, இந்தத் தூத்தலுக்குப் பயந்து வீட்டில் பதுங்கி விட்டயே, நீயும் ஒரு ஆண்பிள்ளேயா ?'

'தூத்தல் பெருகிச் சரமாரி யாகும்னு எனக்குத் தெரியும். உனக்கு அவ்வளவு தூரம் ஊகிக்கப் புத்தி யில்லே.'

மறுபடியும் மழை முற்றவே, அவர்கள் மரமோரமாக ஒதுங்கினர். மின்னலும் இடியுமாக மழை வாரியடித்தது.

'மாசி, இந்த அல்ப விஷயத்துக் கெல்லாமா—'

'என்னோடே பேச வேண்டியதில்லே !'

'சரி, நான்தான் தப்புன்னு வைத்துக் கொள்ளேன். உன் பிறந்த நாளேக் கென்ன கொண்டு வந்திருக்கேன், தெரியுமா ? அதைக் கூட நீ கேட்கலேயே'

'அது எதுவாயிருந்தாலும் எனக்கு வேண்டாம்.'

'இன்ன துன்னு தெரிஞ்சா, நீ அப்படிப் பேசமாட்டாய்—சாதாரணமா எல்லாராலும் கொடுக்கக் கூடிய தில்லே அது.'

தன் சட்டைப்பையிலிருந்து ஒரு காகிதத் துண்டை அவன் மெல்ல எடுத்து விரித்தான். மழையில் நனேந்து, அதில் எழுதியிருந்த மையெழுத்துகள் ஊறி உமிழ்ந்து கண்ணுக்கு விளங்காமலிருந்தன.

'ஹூம், மழையிலே மை ஊறிவிட்டது—இருந்தாலும் பரவாயில்லே ; பாதிக்குமேல் எனக்குப் பாராமல் தெரியும் ; இதுதான் நான் கொண்டு வந்தது, உன் பிறந்த நாளுக்காக, உன்மேல் நான் பாடின கவி. என்ன, கவன மாய்க் கேட்கிறயா ?'

அவள் அவனிடமிருந்து திரும்பி, மழையையே உற்று நோக்கியவாறு இருந்தாள்.

'சரி, முதலில் ஒருமுறை படிக்கறேன். பிற்பாடு விளக்கிச் சொல்லறேன். உஹூம்—'

ஒருவிதமாகக் கமறிவிட்டு அவன் உரக்கப் படிக்க ஆரம்பித்தான்.

'தனக்கீடில்லாத மாசிலாமணியின் பிறந்த நாளுக்கெழுதிய வாழ்த்து—உஹூம்—

பாசற்ற இந்தப் படுமணற் பாலையின் பாழ்நடுவே,
மாசற்ற நின் தன் மதிமுகம் கண்டுயான்
மையலுற்றேன்.
காசற்ற என் தன் கடுமிடி——'

அவன் கையிலிருந்த காகிதத்தைத் திடீரென்று அவள் பிடுங்கி, தூள் தூளாகக் கிழித்தெறிந்து விட்டாள்.

'ஏய், உனக்கென்ன பைத்தியமா பிடித்து விட்டது?'

'பைத்தியமா? எனக்கா பைத்தியம்? இத்தனை அளாகாகப் பிறந்தநாள் கொண்டாடறயே, உனக்குத் தான்—'

'வாஸ்தவம் தான். எனக்குத் தான் பித்தம். இல்லா விட்டால், எவனுவது உன்னைப்பத்தி, இவ்வளவு மௌட்டியமானவளைப் பத்தி, கவி எழுதுவனு? உன்னைச் சொல்லுவானேன், கவி உனக்கென்ன தெரியும் — கழுதைக்குத் தெரியுமா கர்ப்பூரவாசனை?'

'யாரையடா, பாப்பான், கழுதை கிழுதைன்னு பேசுகிருய்?'

'அட, சும்மா இரையாதே.'

'மானங் கெட்டுப்போய் பேசாதே, பேசாதே; போய் விடுன்னு சொல்லியும் பேசிவிட்டு இப்பம்—சீ சீ, மானமில்லையே உனக்கு! நல்லவேளை உன் தனம் எனக்கு இப்பமாவது தெரிந்ததே! இனிமேல் தெருவிலே பாத்தாக்கூட உன்னைத் திரும்பிப் பாக்கமாட்டேன்.'

'நல்லதாச்சு! நீ பாத்தால் என்னைத்தான் எல்லாரும் ஏளனம் செய்வா.'

'மானங்கெட்டவனே, பேசாமல் சும்மா இருன்ன—'

'இல்லா விட்டால் இந்த முசுடோட எவன்—'

'சரி, சரி, உன் தொந்தரவக் காட்டிலும் இந்தப் பாழாப்போன மழையே தேவிலே.'

கொட்டும் மழையில் அவள் செல்லுவது ஏதோ ஒரு நிழல் போவதுபோ லிருந்தது. அவள் முற்றிலும்

மழையில் மறைந்தபின் அவன் பனைமரத்தடியில் பதுங்கி உட்கார்ந்து கொண்டான்.

'தரித்தரம், இது விட்டா நாமும் வீடு போய்ச் சேர லாம்' என்று அவன் முணுமுணுத்தான்.

தூரத்துப் பச்சை

கோடினம் என்பது தஞ்சாவூரின் அருகில் ஒரு சிறு கிராமம். அதில் மிராசுதார் சுப்பிரமணிய ஐயர் வீட்டிற்குத்தான் மாடி உண்டு. சுப்பிரமணிய ஐயர் கொழுத்த பணக்காரர். சுற்றுப்பக்கங்களில் செல்வாக் குடையவர். அவர் சர்வகலாசாலையிற் படித்து 'எப். ஏ.' பட்டம் பெற்றிருந்தார். வீட்டுப் பெண்கள் படித்து நாகரிகமாக இருக்கவேண்டும் என்பதில் மிகவும் ஊக்கம் உடையவர். அவருக்கு வெகுகாலம் ஆண் குழந்தை பிறக்காமலிருந்து, அநேக தருமங்கள் செய்து, வீட்டில் இராமாயணம், ஹாலாஸ்ய மகாத்மியம் முதலிய புரா ணங்களை வாசிக்கச் செய்து, ஒரு பிள்ளைக் குழந்தை பிறந்தது. அந்த அருமை மகனுக்கு ஒரு பணக்கார வீட்டுப் பெண்ணைச் சிறு வயதிலேயே கலியாணம் பண்ணி வைத்தார். அவர்களுக்கு வரிசையாக மூன்று பெண்கள் பிறக்கவே, தமக்கும் ஒரு பேரன் பிறக்குமோ என்று ஏங்கினார். அவர் நாட்டுப்பெண் நாலாவது பிரசவத் திற்காகப் பிறந்தகம் போயிருந்த தருணத்தில், அவர் மகன் திடீரென்று இறந்துவிட்டான். தம் அருமை மகனை இழந்தவுடன், 'வம்சமில்லாமற் போய்விடுமோ ?' என்று சுப்பிரமணிய ஐயர் துக்கித்தார். தம் நாட்டுப் பெண் வயிற்றிலிருக்கும் சிசு ஆண் பிரஜையாக இருக்க வேண்டும் என்று தெய்வங்களை வேண்டிக்கொண்டார். காலக்கிரமத்தில் அவருக்கு ஒரு பேரன் பிறந்தான். சில மாதங்கள் சென்றபிறகு, தம் பேரன் விளையாடுவதைப் பார்க்கவேண்டுமென்று நாட்டுப்பெண்ணைத் தம் வீட் டிற்கு அழைத்தார், அவளுக்குத் தன் கணவனில்லாத

புக்ககத்திற்குப் போக மனமேயில்லை. ஆனால் சுப்பிரமணிய ஐயர், தம் பெரிய மிராசுக்கெல்லாம் உரியவனான தம் பேரன் தம் வீட்டிலேதான் வளரவேண்டும் என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார்.

ஒரு நாள் சாயங்காலம், அந்திபழுக்கும் தருணத்தில் சுப்பிரமணிய ஐயர் வீட்டில் கலவரமாக இருந்தது. சுப்பிரமணிய ஐயருடைய செல்வப் பேரன், அவர் சிரமப் பட்டுப் பெருக்கி வைத்திருக்கும் மிராசுக்கெல்லாம் அதிபதி, அவரை 'புத்' என்னும் நரகத்தில் விழாமல் காக்கப் பிறந்தவன், மாந்தம் வந்து இழுத்துக்கொண்டிருந்தான். குத்துவிளக்கின்கீழே குழந்தையைக் கிடத்தி விட்டு, சுப்பிரமணிய ஐயர், அவர் மனைவி, பெண், சகோதரி, எல்லாரும் சூழ விற்றிருந்தார்கள். குழந்தையின் தாயார் ஒரு ஓரமாக நின்றுகொண்டிருந்தாள். அப்பொழுது ஒருவன் அந்த உள்ளுக்குள் வந்தான். அவன் உயரமாகவும், வெளேரென வெளுத்தும் இருந்தான். சுமார் நாற்பது வயதிருக்கலாம்; பார்வைக்கு அயல் தேசத்தான்போ லிருந்தது. குழந்தைக்குப் பிராணன் போகும் தறுவாயா யிருந்ததால், புதிதாய் வந்த மனிதனை யாரும் கவனிக்கவில்லை.

"ஐயோ! மூச்சில்லையே!" என்றாள் சுப்பிரமணிய ஐயரின் சகோதரி. எல்லாரும் 'ஓ!' என்று அழுதார்கள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சுப்பிரமணிய ஐயர் எழுந்து வெளியே சென்றார். உடனே அவர் தமக்கை, அருகில் அழுதுகொண்டு நின்ற தன் மருமகன் மனைவியை நோக்கி, "இவள் தான் அப்போதே இந்தக் குழந்தைக்கு வழி வைத்துவிட்டாளே; மார்கழி மாதத்துப் பனியிலே முற்றத்திலே குழந்தையை விளையாடவிட்டு வேடிக்கை பார்த்தாளே! பாவம் அது என்ன செய்யும்? இது ஒழிந்தால் சொஸ்தமாகப் பிறந்தகத்திலே போய் உட்காரலாமென்று செய்தாற்போலேதானே இருக்கு!" என்றாள்.

உடனே அவள் மருமகள்—"ஆமாம், அத்தே! அதற்குப் பால்கூடச் சரியாகக் கொடுக்காமல் கொன்று

விட்டாள். என் தாயார் முகத்திற்குமுன், வெட்க மில்லாமல் இப்படி வாய்விட்டுக் கத்துவதிலேயே ஸாஹஸம் தெரியவில்லையா ?'' என்ருள்.

இதுவரை ஒரு மூலையாக நின்று இவர்கள் பேசுவதைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்த அன்னியன், வெளியில் வந்து அடுத்தவீட்டு வாசல் - திண்ணையிலே போய் உட்கார்ந்துகொண்டான், அவன் முகம் திடீரென்று சகல சௌபாக்கியத்தையும் இழந்தவன் முகம் போலிருந்தது. அடுத்த வீட்டுப் பிள்ளை, கிருஷ்ணன், பட்டணத்தில் பி. ஏ. பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருப்பவன், 'கிறிஸ்ட்மஸ்' விடுமுறைக்காக ஊர்வந்திருந்தான். அவன் அன்னியனைப் பார்த்து—"நீ யார் ? நம்மூரானு ? நான் இதுவரை உன்னைப் பார்த்ததில்லையே! சுப்பிரமணிய ஐயருக்கு உறவா? ஏன் விசனப்படுகிருய்?'' என்று கேட்டான்.

அன்னியன் தன்னை ஒருவாறு சாந்தப்படுத்திக்கொண்டு, விடை அளித்தான் : "நீ உட்காரு ; நான் சொல்வதைச் சாவதானமாகக் கேள். நான் இந்த உங்கள் உலகத்தைச் சேர்ந்தவனே இல்லை ! இல்லை ; நான் பயித்தியக்காரனுமில்லை. நான் சொல்லச் சொல்ல, எல்லாம் விளங்கும். இதோ, நம்முன் ஆகாயத்தில் மின்னும் ஒரு நக்ஷத்திரத்திலிருந்து நான் வருகிறேன். வரும் வழியில், என் அருமையான கருவிகளை நான் இழந்துவிட்டதால், என் உலகம் இது என்று இப்பொழுது என்னால் நிர்ணயிக்க முடியவில்லை. நான் ஒரு ரசாயன சாஸ்திரி. அநேக வருஷங்களாக, 'தீயா' என்று எங்களால் அழைக்கப்படும் இந்த உங்கள் உலகத்திற்கு உயிருடன் செல்லவேண்டுமென்ற அவாவால் தூண்டப்பட்டு, வெகு சிரமப்பட்டு, அநேகம் தரம் தோல்வி அடைந்து, கடைசியில் ஒரு ஆகாய விமானத்தைச் செய்து முடித்தேன். இதை, என் உலகத்தவரிடம் சொல்லாமல், இரகசியமாக வைத்திருந்தேன். இப்பொழுது எங்கள் உலக மதவிஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன், கேள்.

எங்கள் பெரியவர்கள் வேதங்களில், ஒரு ஆத்மாவானது திரும்பித் திரும்பிப் பிறக்கிறதென்றும், ஒருவன் நல்ல கருமம் செய்தால், அவன் திரும்பி எங்கள் உலகத்தில் பிறவாமல், 'தீயா' என்று எங்களால் அழைக்கப்படும் இந்தப் பூமியிலே பிறப்பானென்றும், இங்கும் அவன் மேல்நோக்கிச் சென்றால், அவனுடைய ஆத்மா இன்னும் ஐந்து உலகங்களில் முறையே பிறந்து, கடைசியில், 'கோவனேர்ஜ்' என்ற சுவாமி இருக்கும் இடத்தில் சந்தோஷமாக என்றுமே வாழும் என்றும், சொல்லி யிருக்கிறார்கள். அதில், அவர்கள் 'தீயா'வை வர்ணிக்கும் பொழுது, 'அவ்விடம் பசுமையாக, தாமரைப் பூக்கள் உள்ள தடாகங்கள் நிரம்பி இருக்கும். அவ்வுலகத்து மனிதர்கள், நடை உடை பாவனை முதலியவைகளில், சுமாராக நம்மவர்களைப் போலவே இருப்பார்கள். ஆனால், அவ்வுலகத்து விசேஷ மென்னவென்றால், அம்மனிதர்கள் ஒருவரைத் துன்பப்படுத்தும் வார்த்தைகளைச் சொல்லு வதே இல்லை. இது ஒரு ஆத்மா முக்தி பெறுவதற்கு முதற்படி ஆகையால், நம்முலகில் அதற்கு அருகராகும்படி வாழ்ந்துவந்தவர்கள், 'தீயா'விற் பிறப்பார்கள்!' என்று எழுதி யிருக்கிறார்கள்.

"தீயைவிடக் கொடுமையான வார்த்தைகளால் தங்கள் சகோதரர் சகோதரிகளைப் புண் படுத்தாம லிருக்கும் உலகத்தை, உயிருடன், நாம் இவ்வுலகத்தவ னல்லன் என்ற உணர்வுடன், பார்க்கவேண்டுமென்ற ஆசையால், நான் ஒருவருடனும் சொல்லாமல், என் ஆகாய விமானத்தி லேறிக்கொண்டு புறப்பட்டேன். நான் தயாரித்திருந்த சில வெடிமருந்துகளின் வேகத்தினால் எங்கள் உலக வசிகர சக்தியின் எல்லைக்கப்பால் தள்ளப் பட்டு, உங்கள் உலக வசிகர சக்தியினால் இழுக்கப்பட்டு, சில மணி நேரங்களுக்கு முன்பு, இந்த ஊரின் அருகி லிருக்கும் தடாகத்திற்குள் விழுந்தேன். நல்ல வேளை, என் விமானம் நான் கரையேறும்வரை மிதந்து, பிற்பாடே என் அருமையான கருவிகளுடன் மூழ்கிவிட்டது. சுற்றிப்பார்த் தேன்; தடாகத்தில் செந்தாமரைப் பூக்கள் இருந்தன:

எங்கும் பசுமையாக இருந்தது. இதுதான் 'தீயா' என்று தீர்மானம் பண்ணிக்கொண்டேன். கொஞ்ச தூரத்தில் சில மனிதர்கள் கும்பலாக நின்றுகொண் டிருந்தார்கள். அவ்விடம் சென்று, இங்கு என்ன நடக்கிறதென்று ஒருவனைக் கேட்டேன். 'மிருதுவான சொற்கள்' என் பதைப் பற்றி, 'சர்வ சமய சகோதர சங்க'த்தைச் சார்ந்தவர் ஒருவர் பிரசங்கம் செய்கிறார்'' என்றான். எனக்கிருந்த அற்ப சந்தேகமும் நீங்கிவிட்டது. இந்தக் கிராமத்திற்கு வந்தேன். பக்கத்து வீட்டில் ஏதோ கலவரமா யிருந்ததால், அது என்ன என்று பார்க்கலாம் என்றெண்ணி உள்ளே சென்றேன். அங்கே, அப் பொழுதுதான் இறந்த தன் குழந்தைக்காகத் துக்கிக்கும் தாயை நோக்கிச் சில ஸ்திரீகள் சொன்ன சொற்களால், 'தீயா'விலும் கடுஞ் சொற்களுக்குப் பஞ்சமில்லை என்று தெரிந்துகொண்டேன். ஐயோ! என் விமானக் கருவிகள் எல்லாம் போய்விட்டனவே! என் உலகம் எது என்று கூடத் தெரியவில்லையே! எங்கள் வேதத்தில் சொன்னபடி யின்றி, இங்கும் எல்லாம் எங்கள் உலகைப்போல் கொடிய மனிதர்களாலேயே நிரம்பி யிருக்கின்றதே! நான் என்ன செய்வேன்? 'கோவனோர்ஜ்'ஜும் இப்படித்தானிருக் குமோ, என்னவோ?'' என்றான்.

"நீ சொல்லுவது நிஜமானால், வெகு அதிசயமானதே; நிஜம் என்றே வைத்துக்கொள்ளுவோம். இதிலும் உனக்கு ஆறுதல் கொடுக்கக்கூடிய இரண்டு விஷயங்கள் உள்ளன: உங்கள் உலகைவிட எங்கள் உலகு மிகக் கெடுதலாயில்லாததே முதலாவது நன்மை. நீ, உயிருடன், நினைவுடன் இருப்பதால். விசனப்படுகிறாய். இறந்த பிற்பாடு திரும்பிப் பிறக்கும்பொழுது, காருண்யமுள்ள கடவுளின் சட்டத்தால், நமக்குப் பூர்வஜன்ம ஞாபக மில்லாததே இரண்டாவது நன்மை. சுப்பிரமணிய ஐயர், அவர் மனைவி, மக்கள், சகோதரி, எல்லோரும் 'அன்பாகப் பேசு' என்னும் முதல் பிரமாணத்தையுடைய 'சர்வ சமய சகோதர சங்க'த்தைச் சார்ந்தவர்களே!'' என்றான் கிருஷ்ணன்.

கிராம வாசம்

சேந்தனூர் ஓர் அழகிய சிறு கிராமம். அதைச் சுற்றிலும் வயல்களும் தோப்புகளும். அந்த ஊர் வெற்றிலைக்கும் வாழையிலைக்கும் பேர் போனது; கலியாண மாதங்களில், அவைகளை மொத்தமாய் வெளியூரார் வாங்கிவிடுவதால், அவை ஊராருக்கு நல்லதாய்க் கிடைப்பது அருமை. அங்கே கரும்புத் தோட்டங்களும் ஆலைகளும் உண்டு. பூமி செழித்தது; ஆனால் வாய்க்கால் கிடையாது. நீர்ப்பாய்ச்சல் ஆழக்கிணறுகளிலிருந்து ஏற்ற மடித்து ஆகவேண்டும். அக்கிரகாரம் இரண்டே வீதிகள்; அப்பால் மற்றக் குடி ஜனங்கள் வசிக்கும் தெருக்கள்; வயல் நடுவில் பள்ளச்சேரி; ஜனசங்கியைப்படி, அந்த ஊரில் சுமார் இரண்டாயிரம் ஜனங்களே உண்டு; ஊரார் சொற்படி, பாழ்மனைகளிலும், வீட்டுக்கொல்லைகளிலும், வயல்வெளியிலுள்ள மரங்களிலும், அநேகப் பேய்பிசாசுகள் இருந்தன. இவைகளைப்பற்றிய கதைகள் குழந்தைகளுக்குக்கூடத் தெரியும். சகலரும் முழு நம்பிக்கையுடன், ஊரெங்கும் இத்தனை பேய்கள் இருப்பதைச் சகஜமாகப் பாவித்து, சமயத்துக்குத் தக்கபடி அவைகளிடமிருந்து ஒதுங்கித் தப்பிக்கொண்டு, தங்கள் காரியங்களை முடித்துக்கொள்வார்கள். மொத்தத்தில், ஊரார் நல்லவர்கள், உழைப்பாளிகள். அவ்வூர்ப் பிராம்மணப் பெண்கள், காய்கறித் தோட்டம் போடுவதிலும் சகுன பலன் சொல்வதிலும் பரம்பரை வழக்கப்படி பண்டிகைகள் கொண்டாடுவதிலும் கைதேர்ந்தவர்கள்.

ஊர் நடுவில் ஓர் அரச மரம் உண்டு. அதற்கெதிரில் ஒரு கிணறு; அதன் நீர் கருப்பஞ்சாறு கலந்தாற்போலத் தித்திக்கும் என்றும், பருப்பைச் சட்டென்று வேகவைக்கும் என்றும் பேர். கொல்லைக் கிணற்று நீரை மற்ற விஷயங்களுக்கு உபயோகப்படுத்திக் கொண்டு, தாகத்துக்கும் சமையலுக்கும் நாலு குடமாவது அங்கிருந்துதான் எல்லா ஸ்திரீகளும் மொண்டு போவார்கள். காலையில், உலை

காத்திருக்கும் என்று அவசரமாய்ப் போய்விடுவார்கள்; சாயங்காலம், ஒருவரையொருவர் எதிர்பார்த்து நின்று, சற்று நேரம் கிணற்றண்டை வம்பு பேசிவிட்டுப் போவார்கள்.

இந்த ஊருக்குப் புதிதாய்ப் பவானி என்பவள் வந்தாள். அவள் மாத்வப் பெண்; சுமங்கலி; ஆனால் சிறு வயதிலேயே அவள் கணவன் எங்கேயோ ஓடிப்போய் விட்டதால், வாழாப் பெண்ணாய்ப் பட்டணத்தில் தமையன் வீட்டில் இருந்து வந்தாள். அவன் ஒரு வக்கீல்; அவன் மனைவிக்குத் திடீரென்று இருமல் வியாதி வந்தவுடன், அவன் கோடை லீவில், நல்ல காற்றுள்ள கிராம வாசத்தைத் தேடிச் சேந்தனூருக்கு வந்தான். அங்கே எல்லோரும் சொந்த வீடுகளில் குடியிருந்ததால், அவன் தனி வீடு கிடைக்காமல் சொற்ப வாடகைக்கு ஒட்டுக்குடியிருந்தான். பட்டணத்தாரைப் போலன்றி, கிராம வாசிகள், அவன் மனைவியின் நோயைக் கண்டு, தொத்து வியாதி யென்று பயப்படவில்லை.

சுற்றுமுள்ள பயிர் பச்சையின் செழிப்பும், கிராம வழக்கங்களும், ஊர்ப் பெண்களுடைய சிநேக பாவமும் பவானிக்கு ஆனந்தமா யிருந்தன. இத்தனை நாள் சாரமற்றிருந்த அவள் வாழ்க்கையில் இப்பொழுதுதான் ஒரு புது மலர்ச்சியைக் கண்டாள்; வீட்டுக் காரியங்களை அவள் முணுமுணுக்காமல் செய்தாள்; மதனியைப் பரிவாய்ப் பேணினாள். பட்டணத்தில், ஒழிந்த நேரத்தில் ஒரு பொழுது போக்குமில்லாமல் வீட்டில் அடைத்துக் கிடந்த நாளில், அவள் சதா கோபமும் குறு குறுப்புமாய் இருந்ததுண்டு. இப்பொழுதோ, பேசத் தோழிகளும் காலை வீசி நடக்க ஓர் இலக்கும் கிடைத்த பின், அவள் தன் குறைகளைப் பாராட்டவில்லை. துளித் தேனை உண்டு களிக்கும் வண்டைப்போல, அவள் மனம் சிந்தனை யற்று இருந்தது.

பவானிக்குப் படிக்கத் தெரியாது. அவள் சுய பாஷையான கொங்கணியில் அக்ஷரமே கிடையாது.

தமிழும் தெலுங்கும் அவளுக்கு நன்ருய்ப் பேச வரும்; ஆனுல், ஒரு பாஷையிலும் எழுதத் தெரியாது. அவளுக்கு எவ்வித அநுபவமும் குறைச்சல்; பேதை மனத்துடன், கேட்டதை யெல்லாம் உண்மை என்று நம்பும் சுபாவ முடையவள்.

ஒரு நாள் மாலை, அவள் கிணற்றங்கரைக்குப் போன வுடன், மற்றப் பெண்கள் நில்லாமல் நீர் மொண்டு போவதைக் கண்டாள். கோடி வீட்டுச் செல்லம்மாள் மகன் கோபாலன் இரண்டே நாள் ஜ்வரத்துக்குப் பின் திடீரென்று அபாய நிலையிலிருப்பதாக, அவள் கேட்டறிந்தாள். இந்தச் செய்தியைச் சொன்ன அவள் தோழி ஜானகி, கோபாலனுடன் குழந்தைப் பருவம் முதல் பழகியவள். துக்கத்தை மீறிய பரபரப்புடன் அவள், "அவன் இன்னும் மூன்றே முக்கால் நாழிகைகூடப் பிழைத்திருக்க மாட்டானும். அதற்குள் எல்லா வீடுகளிலும் சாப்பிட்டாகவேண்டும். உனக்குக் கிராமாந்தர வாடிக்கை தெரியாது. ஒரு வீட்டில் சவம் கிடந்தால், தெருவிலேயே ஒருவரும் சாப்பிட முடியாது" என்ருள்.

'தாய்க்கு ஒரு மகன், பதினுறு வயதுப் பையன், சாகக் கிடக்கும் போது, மற்றவர்களுக்குச் சாப்பாட்டைப் பற்றி என்ன கவலை?' என்று ஒரு நிமிஷம் பவானியின் மனத்தில் இகழ்ச்சி தோன்றிற்று. பட்டண வாசத்தில், அயல் வீட்டுச் சாவுக்காக எவரும் பட்டினி கிடைப்பதில்லை என்றும், ஜானகிக்கு இல்லாத வருத்தம் தனக்கு இருக்கக் காரணமில்லை என்றும் நினைத்து, அவள் பேசாமல் வீடு திரும்பினுள். கோபாலன் இன்னுன் என்று மட்டும் அவளுக்குத் தெரியும். வீட்டுக்காரியிடம் அவனைப்பற்றி விசாரித்தாள். இந்தச் சந்தர்ப்பத்தில், யார் தான் அவனை நினைத்துப் பரிவாய்ப் பேசமாட்டார்கள்? 'அவன் விளையாட்டுப் பிள்ளை; குணசாலியும் கூட' என்பதைக் கேட்டுப் பவானி அவன் தாயை எண்ணித் துக்கித்தாள். அன்றிரவு அவளுக்குச் சாதம் பிடிக்கவில்லை; தூக்கம் வரவில்லை. பண்டிதன் இட்ட தவணையை மீறிக் கோபால

னுக்கு உயிர் துடித்துக் கொண்டிருக்கிறதென்றும் பாதி ராத்திரிக்குள் பிராணன் போய் விடுமென்றும் வீட்டுக்காரி பத்து மணிக்கு வந்து சொன்னாள். "நீ இந்த மாதிரிக் கதவைத் திறந்து திறந்து வாசலிலே போகாதே! நான் கண்டிப்பாய்ச் சொல்கிறேன், கேள்: உனக்குச் சொன்னாலும் தெரியவில்லையே. இதென்ன, பெரிய சாவா! உயிர் போரவேணு போரவேணு என்று தவிக்கிறது. செத்த பின்னும், அந்த உயிருக்குத் தனியே போக மனம் வராது; பயப்படும். தெரிந்த இடங்களில் வந்து, வீடு வீடாய்க் கதவைத் தட்டும். நீ கதவைத் திறந்தால், உள்ளே புகுந்து விடும்; உன்னைத் தொட்டுவிடும்" என்றாள்.

இதைக் கேட்டு நடுங்கி, பவானி அறைக்குள் போய்ப் படுத்துக்கொண்டாள். வெகு நேரம் அழுகைக் குரலை எதிர் பார்த்து உற்றுக் கேட்டாள். நாய் குரைத்தது. சில ஜனங்களின் பேச்சுக் குரல் கேட்டது. திரும்பவும் நிசப்தம். பிறகு நாய் குரைப்பதும் அழுகைக் குரலும் சேர்ந்து கேட்டன. பவானி அறையை விட்டு எழுந்து, வாசற் கதவண்டை போனாள். நான்கு வீடுகளுக்கப்பால் கதவு தட்டும் சப்தம் கேட்டது. கதவு திறந்த சப்தம் கேட்கவில்லை. யாரேனும் திறப்பார்களா? தனிமைக்குப் பயந்த அப்பிராணன் மேல், பவானிக்குத் தன்னை மீறிய பரிதாபம் தோன்றிற்று. அவள் கதவைத் திறந்தாள்; வாசலண்டை போய் இருட்டை உற்றுப் பார்த்தாள். குளிர் காற்று அவள்மேல் வீசிற்று; யாரோ அவளைத் தொடுவதுபோல் இருந்தது. 'பயப்படாதே' என்று காற்றை அணைத்துக்கொண்டு, அவள் கீழே விழுந்து மூர்ச்சித்தாள்.

அவளுக்குச் சுய புத்தி வர, மறுநாள்வரைச் சென்றது. அப்புறந்தான் 'கோபாலன் பிழைத்து விட்டான், தான் கேட்டதெல்லாம் ஏதோ இராச் சப்தங்கள்' என்று அவள் தெரிந்து கொண்டாள். அவளுடைய தீரமும் தியாகமும் வியர்த்தமாய் விட்டன; அதைப் பற்றிக்

கேட்டவர் சிரிப்பாரென்று, அவள் தான் மூர்ச்சித்ததின் காரணத்தைப் பொய் சொல்லி மறைத்து விட்டாள். அடுத்த மாதம் அவள் மறுபடியும் பட்டணம் போய் விட்டாள்.

கெரஸொப்பா நீர்வீழ்ச்சி

நாமிருவரும் குற்றாலம் போனதை நான் ஜன்மத்திலும் மறக்கமாட்டேன். சென்னையிலேயே பிறந்து வளர்ந்த உனக்கு அருவியைக் கண்டதும் மதிமயங்கி விட்டது. திடீரென்று கசத்துக்குள் இறங்கி விட்டாய். "ஐயோ, நீஞ்சத் தெரியாத பிள்ளை!" என்று கதறிக் கொண்டு நானும் குதித்து உன்னைப் பிடித்திழுத்துக் கரை சேர்த்தேன். அப்படியுங்கூட, உன் உற்சாகம் குறைந்தபாடில்லை.

அருவியின் அடிவாரத்திலிருந்து இதை எழுதுகிறேன். ஸதா உன் நினைவாகவே இருக்கிறது.

உன் நண்பன் உயிர்ப்பிச்சை பெற்றான் என்று கொண்டாடுவாயாக! நாளெல்லாம் சிந்தனையின்றி ஸரவதி நதியில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தேன். அதுதான் முதலைகளின் பிரதான இருப்பிடமாம்! இந்தச் சுப சமாசாரத்தைச் சற்றுமுன் இவ்வூர்க்காரன் ஒருவன் சொல்லிவிட்டுப் போனான்.

ஆனந்தபுரத்திலிருந்து பஸ் வண்டியில் ஆடியாடி இவ்வூர் வந்து சேர்ந்தோம். வழி யெல்லாம் தலை சுற்றல்; சுமார் ஒரு டப்பி பாக்கு சாப்பிட்டு விட்டேன். "ஏன் சும்மா பாக்கையே தின்றுகொண்டிருக்கிறாய்? பாக்குத் தின்றால் சோகை பிடிக்கும்" என்று என் பக்கத்திலிருந்த கிழவி சொன்னாள். அவள் முகம், வடுமாங்காய் போல் சுருங்கி யிருந்தது. ஆனால் குதூகலக்காரி; எனக்கும் இளையவள். "அப்பா, உன்னைப் பார்த்தால் என்

பேரனைப் போலவே இருக்கு. அவனுக்கும் இப்படித்தான் பாக்குமேல் கிறுக்கு, பாவம்! போன வருஷம் சோகை பிடித்துச் செத்துப்போய் விட்டான்" என்ருள்.

"ஆமாம். நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். பாக்கு தான் சோகைக்கு முக்கிய காரணமாம்" என்று எதிரி விருந்த ராவோஜி ஒத்துப் பாடினர். இதென்னடா இது, தர்ம சங்கடமாயிருக்கிறது என்று பாக்கு டப்பியை வீசி எறிந்து விட்டேன். பாக்கு விரோதிகள் இருவரும், "நல்ல பையன், பெரியோர் வார்த்தைக்கு என்ன மதிப்பு!" என்று மகிழ்ந்தார்கள். காதோடு இரகசியம், டப்பியில் ஒரு துண்டு பாக்குக்கூடக் கிடையாது.

அருவியின் உச்சியை அடைந்தோம். இது தான உலகமெல்லாம் பிரசித்தி பெற்ற நீர் வீழ்ச்சி என்று, கையில் தலை சாய்த்து, ஒரு பாறைமேல் உட்கார்ந்தேன்.

ராவோஜி "அருவி அடிவாரத்துக்குப் போகலாம், வா; எனக்கு வழி தெரியும்" என்று கூப்பிட்டார். ஓர் ஒற்றையடிப் பாதை வழியாய் மெல்ல மெல்லக் கீழே இறங்கினேம். பாதை திடீரென்று நின்று விட்டது. அது பாதையல்ல; வற்றிப்போன நீரோடை. ராவோஜியை மனதில் திட்டிக்கொண்டே மறுபடியும் மேலே ஏறினேன். ராவோஜிக்கு ஸ்தூல சரீரம்; ஏற முடியவில்லை; பாவம், சறுக்கி விழுந்து முட்டியைப் பேர்த்துக் கொண்டார். அதில் எனக்கு உள்ளூரக் கொஞ்சம் திருப்திதான்.

ஓடையின் பக்கத்திலேயே கீழிறங்கும் கற்படிகள்! ஐந்து நிமிஷத்திலே அருவியின் அடிவாரத்தை அடைந்து விட்டோம்.

எனக்கு வர்ணிக்கத் தெரியாது.

எனக்குச் சித்திரமெழுதவும் தெரியாது.

அந்தக் காட்சியைக் கண்டதும் எனக்குச் சித்தப் பிரமை பிடித்து விட்டது.

"ராவ்! ராவ்! இங்கே வாருங்கள். இந்த நண்டைப் பார்த்தீர்களா? என்ன வேடிக்கையாய் நடக்கிறது!"

என்றேன். "ஹா, ஹா, அருவியின் அருமையே அருமை!" என்றார்.

"சில மனுஷர்கள்கூட இப்படித்தான் நடப்பார்கள். நண்டைப்போல் மனுஷர் நடப்பதைப் பார்த்திருக்கிறீர்களா?"

ராவ் வெறித்துப் பார்த்துவிட்டு மௌனம் சாதித்தார்.

"ராவ், நீங்கள்கூட மலையேறும்போது நண்டுபோல நடக்கிறீர்கள்."

"அந்த டப்பியிலிருந்தது பாக்கா, கஞ்சாவா?" என்று கேட்டார் ராவோஜி.

கஞ்சா ஒன்றுதானா மதியை மயக்கும்? உனக்குத் தெரியுமே.

மயிலாப்பூர் வக்கீல்

[குறிப்பு :—இது வெறும் கல்பனையென்றும், உயிருடனிருக்கும் எவரையாவது, உயிருடன் வாழ்ந்த எவரையாவது குறித்ததில்லையென்றும் ஆசிரியர் அறிவிக்கிறார்.]

பொன்னினால் ஆக்கப்பட்டுக் கற்களிழைத்த ஸிம்மாஸனத்தின்மீது யமதர்மராஜன் கொலு வீற்றிருந்தான். நீலகிரி போன்ற பிரமாண்டமான அவனது சரீரத்தில், ஸூர்யாஸ்தமனத்தில் அக் கிரிமீது படர்ந்த பொன்னொளிப் பெருக்கைப்போல், பட்டாடைகள் பிரகாசித்தன. அந்த ஸபாமண்டபம் மூவாயிரம் தூண்கள் கொண்டது. ஒவ்வொரு தூணும் அற்புதச் சிற்பவேலை கொண்ட கருங்கல்லிற் செய்யப்பட்டு, நக்ஷத்திர மண்டலத்தைத் தொட்டு நின்றது. ஆஹா, இந்தக் கூரை பூவுலகில் காணப்படும் வானமோ வெனில், அன்று. நீலக் கல்லில் அதிவிசாலமான மேகங்களும், வானமும் சித்திரிக்கப்பட்டிருந்தன. கண்ணைப் பறிக்கும் பெரும்

பெரும் வைரங்களே, நக்ஷத்ரங்கள். யம தூதர்களும் ஸேவகர்களும், காம்பீர்ய வதனமும் பயங்கரமான புஜங் களும் மார்புகளும் உடையவராய், ஆயுதபாணியராய் நின்றனர்.

மண்டபத்தின் தென்புறமாக இரண்டு தங்கத் தூண்கள்; இவை வெள்ளிச் சங்கிலிகளால் பிணைக்கப் பட்டிருந்தன. நடுவில், சங்கிலிகளிலிருந்து வைடூர்யங்கள் இழைத்த ஒரு பெரும் பொன்தட்டு தொங்கிக் கொண் டிருந்தது. யமதூதன் ஒருவன் ஓடிவந்து, யமராஜனைப் பணிந்து, நிமிர்ந்து, கையிலேந்திய வேலாயுதத்தால் பொன்தட்டை மோதினான். உடனே, மலைப் பிரதேசத்தில் தேவதாரு மரங்களின்மீது இடி விழுவது போன்ற ஒரு சப்தம் கிளம்பி, அலையலைகளாக எங்கும் பர வியது. அதைக்கேட்டு அக்னி ஜ்வாலையிலும், கொதிக்கும் எண்ணெய்க் குளங்களிலும், எஃகு மூக்குக் கொண்ட கழுகுகளிடையிலும் வேதனையிலாழ்ந்திருந்த பாபாத் மாக்கள், அறியாமல் நடுங்கி மயிர்க்கூச்சல் மிகுந்தனர். இதுவே இன்னுமொரு ஆத்மா யம ஸந்நிதியை அடையப் போவதற்கு அறிகுறி. அடுத்த கணத்திற்குள் பத்துப் பன்னிரண்டு யமதூதர், புதிதாகக் கிரஹிக்கப்பட்ட ஒரு ஜீவனைத் தர்மராஜன் முன்னிலையிலே கொண்டு நிறுத்தினர்.

ஜீவனுக்கு வடிவமேது, ஆடையேது? ஆனால் லோகமே சித்தமயமென்பதை யொட்டி, அந்த ஜீவனும் பலகால மாகப்பற்றியிருந்த ஸ்தூல தேஹத்தின் தோற்றத்தைப் பிரதிபிம்பித்தது. ஜீவர்களும் இவ்வாறான உருவங்கள் கொண்டுதான் தங்களுக்கு நியமிக்கப்பட்ட கர்ம பலன் களை நரகத்தில் புஜிக்கிறார்கள். ஆள், சுமார் ஐந்தரை அடி உயரம், பஞ்சகச்சமாய்த் தரித்த பட்டு வேஷ்டி, உறுமால், கறுப்புத் துணி மேலங்கி, சரிகைத் தலைப்பாகை; கடிகாரத்தின் பொன் சங்கிலியும் வெளியில் தெரிந்தது. பூவுலகில் நிச்சயமாய் ஓரளவு அந்தஸ்துள்ளவரென்பதில் ஸந்தேகமில்லை. யமராஜனின் முன்னிலையாதலால், மனம்

குழம்பி, கை கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. வெளிறின முகம், மருண்டு விழிக்கும் கண்கள்.

'ஓ, பரதகண்டத்தில் கிரஹிக்கப்பட்ட ஜீவனு?' என்ருன் யமதர்மராஜன். அவன் பேசுவது பூகம்பத்தின் எதிரொலியைப் போலிருந்தது. வந்த யமதூதரில் முதன்மையானவன் பணிந்து—'ஆம், மஹாப் பிரபோ, சென்னை, மயிலாப்பூர், உண்ணுமுலையம்மன் தெருவு, பெயர் வாமனுவதாரமையர், தொழில் வக்கீல்." இதைக் கேட்டதும் அந்த ஜீவனுக்கு அவஸ்தையும் நடுக்கமும் பதின்மடங்கு அதிகரித்தன.

யமதர்மராஜனின் தேவ களை கூடிய முகத்தில் புன்னகை தவழ்ந்தது. "ஸரிதான், உமது ஸஹாக்களை இங்கு நிச்சயமாய்க் காண்பீர். பணம் பறிக்கும் அஸத்ய வக்கீல், முரட்டு ஜமீன்தார், கபட பூஜாரி—இவர்கள் தங்கள் தொழிலுக்கே அபக்கியாதி விளைவிக்கின்றனர். ஆனுல் இவரெல்லாம் இல்லாமற் போனுல் நம் பாடு ஸங்கடம் தான்" என்ருன். இதைக் கேட்டு யமதூதரில் பலர் இடிமுழக்கம்போல் சிரித்தார்கள். அவ்வளவு ஹாஸ்யம் நிறைந்த பேச்சில்லை யென்ருலும், நரகத்திலும் ராஜாவுடன் ஒத்துப் பாடுவது தான் முதல் விதி. தவிரவும், நரக வேதனைக்குப் பாத்திரமாக மற்ருெரு ஜீவன் கிடைத்த தென்பதைப்பற்றி இவர்களுக்குப் பரம ஸந்தோஷம்.

இதற்குள் ஸிம்ஹாஸனத்தின் பின்புறமிருந்து ஒருவர் எழுந்திருந்தார். யமராஜனையும் ஏனைய ஸபையோரையும் போல் தசை மிகுந்த சியாமளவர்ண தேஹமில்லாமல், இவர் வடிவம் வயது முதிர்ந்த பிராமணனைப் போன்று சந்தனக் கட்டை நிறமாக இருந்தது. காதில் எழுத்தாணி சொருகி யிருந்தது. கையில் ஒரு பெரிய ஏட்டுத் தொகுதி ஏந்தி யிருந்தார். மூக்கில், எஃகுச் சட்டத்தாலாகிய கண்ணுடிகள். 'சித்ரகுப்தரே! தொடங்கலாம்' என்று யமன் ஆக்ஞை யிட்டபின், இவர்

ராஜனைப் பணிந்து, ஏடுகளைக் கட்டியிருந்த பட்டு நூலை அவிழ்த்து முதல் ஏட்டைப் புரட்டினார். அதில், கரிய மையில், மிகப்பெரிய அக்ஷரங்களில், ஸபையோர் அனைவருக்கும் கண்படும் விதமாக:—"வாமனாவதாரமையர் சரித்திரம் (ஆதியோடந்தம்), ஏட்டுக்கு வரிகள் முந்நூறு; மொத்தம் ஏடுகள் ஆயிரத்து முப்பத்து மூன்று. இங்ஙனம் சித்திரகுப்தன்" என்று எழுதியிருத்தது. இதைப் பார்த்ததும், வாமனாவதாரமையர் என்ற ஜீவன் உடம்பெல்லாம் வியர்த்து, நாக் குழறி மெலிந்த சொற்களில்—

"மஹாப் பிரபோ, அடைக்கலம், அடைக்கலம்! என் மாதா மேல் ஸத்தியமாக, இவ்வளவு எழுத என் வாழ்க்கையில் ஒன்றும் கிடையாது. ஏதோ வேறு ஆஸாமியின் ஸமாசாரத்தையும் சேர்த்தெழுதிவிட்டார்!" என்றது. யமராஜனும் ஸபையோர்களும் இதைக் கேட்டு 'கொல்' என்று சிரித்தார்கள், அந்த அட்டஹாஸம் ரௌரவம் என்ற கோர நரகத்தில் ஒரு புயலை உண்டுபண்ணி விட்டது. சித்திரகுப்தர் கூடச் சிறிது வாய் திறந்து தமக்குள் நகைத்தார். அவருக்கு இரண்டு பல்லில்லாமலிருப்பது, அப்பொழுது தெரியவந்தது.

யமதர்மராஜன் சொல்கிறான்: "வாமனாவதாரமையரே, பயம் வேண்டாம். இது நீதி ஸ்தலம். இங்கே தர்மம் மயிரிழையும் பிசகாது. உமது பாவங்களை ஒன்றும் மிகைப்படாமல், புராண விதிமுறையில் சீர் தூக்கிப் பார்த்த பின்புதான், உமது விஷயத்தில் தீர்ப்புச் சொல்லப்படும். நீரும் மறுத்துப் பேசலாம். பிரபஞ்சம் சிருஷ்டித்த முதல், ஒரு ஜீவனைப் பற்றியும் சித்ரகுப்தர் தவறி எழுதியது கிடையாது.

"ஏட்டுக் கட்டைப் பார்த்தால். நீர் பல நாள் நமது அதிதியாகத் தங்கவேண்டுமென்று தோன்றுகிறது. ஏது, ஸப்த நரகங்களையும், அக்நி ஜ்வாலை, எண்ணெய்க் குளம், கழுகுமலை, இரும்புக் கூண்டு, சிலுவை—எல்லா வசதிகளையும் ஒருகை பார்த்து விடுவீர் போலிருக்கிறது!"

இந்தப் பேச்சைக் கேட்டு ஸபையிலுள்ள யமதூதர் யாவரும் சந்தோஷத்தினால் கரகோஷம் செய்தனர். வாமனவதாரமையரைப் பிடித்து நின்ற யமதூதர் இருவருள் ஒருவன்—'பலே பேஷ் பேர்வழி!' என்று அடக்க முடியாத உத்ஸாகத்துடன் கூறி, அவரை முதுகிலே தட்டிக் கொடுத்தான். ஏனென்றால், இந்த யமதூதர் யாவர்க்கும் நரகங்களில் வேறு வேறு ஸ்தானங்கள் ஏற்பட்டிருந்தன. இதனால் புதிதாக வந்த ஜீவர்களைப் பங்கிட்டுக் கொள்வதில் இவர்களுக்குள் போட்டி பொறாமை யதிகம். ஸாதாரணமாய், பாபாத்மாக்கள் நீடித்து வாசம் செய்வதுமில்லை, எல்லா ஸ்தாபனங்களையும் அநுபவிப்பதுமில்லை. முந்தின நாள் தான், வாழ்வெல்லாம் திருட்டுத் தொழிலில் ஈடுபட்ட மூன்று மறவர்களின் விஷயத்தில் — 'அக்நி ஜ்வாலை நூறு வருஷம்' என்று தீர்ப்புச் சொல்லப்பட்டது, இதுபற்றி எண்ணெய்க்குளம், காய்ச்சின ஈயக்கிணறு முதலிய சுகஸ்தலங்களை மேற்பார்வையிடும் யமதூதர்க்கு மனஸ்தாபம். தவிரவும், கலி பழுத்தது தான் பாக்கி, ஆயிரம் இரண்டாயிரமென்ற வருஷக் கணக்கெல்லாம் போய், நூறு ஐம்பதென்பது ஸஹஜமாய் விட்டது. யமதூதருள் முணுமுணுப்பும் அதிருப்தியும் நாள் நாளாக வளர்ந்தன.

வாமனவதாரமையர் இதற்குள்ளே சிறிது பயந் தெளிந்து மனதைத் திடப்படுத்திக்கொண்டார். "எப்படியிருந்தாலும் நாம் வாதம் செய்யக்கூடும், எதிர்க்கேள்வி கேட்கக்கூடும்; நமது பழைய ஸாமர்த்தியத்தை முற்றிலும் இழந்துவிடவில்லை" என்றெண்ணித் தொண்டையைக் கனைத்துக்கொண்டு உரத்துப் பேசினார்: "மஹாப்ரபோ! இது நியாயஸ்தலமென்று, அச்சம் தவிர்ந்தேன்; உறுதி கொண்டேன். நியாயப்பிரகாரம் நான் குற்றவாளியானால் தண்டனை பெறச் சித்தமாயிருக்கிறேன். முதலில் நீதி முறையை அனுசரித்து, வாதியான சித்ரகுப்தரின் வழக்குப் பத்திரத்தின் பிரதி யொன்றை எனக்கு அளிக்குமாறு நியாயஸ்தலத்தை வேண்டுகிறேன். இரண்டாவது, தயவு செய்து மூன்று மாதம் தவணை கொடுத்தால், எனது

மறுப்பு 'ஸ்டேட்மெண்'டை தாக்கல் செய்து கொள்கிறேன். பிறகு விசாரணை தொடங்கலாம்.''

யமனுக்குக் கோபம் வந்துவிட்டது; புருவங்களை நெரித்தான், பற்களைக் கடித்தான். ஸபாமண்டபம் இருண்டு, யமராஜனின் வாயினின்றும் நெருப்புப் பொறிகள் வெளிக்கிளம்பின. ஸிம்ஹாஸனம் அதிர்ச்சியுற்றது. ஸபையோரனைவரும் பயந்து தலைகுனிந்து நின்றனர்.

வாமனுவதார மையரின் விசாரணைக்காகப் பெரும் ஸபை கூடியது. அவர் புகழ் எல்லா நரகங்களுக்கும் பரவிவிட்டதால், மேலதிகாரிகளிடமிருந்து பிரத்தியேக உத்திரவு பெற்றுக் கொண்டு யமதூதர் வந்து மொய்த்தனர். விசேஷமாகச் சித்ரகுப்தர் தமது 'குமஸ்தா'க்கள் மூவருடன் வந்திருந்தார். பழைய ஏட்டு 'ரிகார்டு'கள் பல ஒரு தந்தப் பலகையில் குவித்திருந்தன.

யமராஜனுக்கு, நிர்மலமான வேனிற்கால வானத்தில் இரண்டொரு சாம்பல் நிற மேகம் தங்குவதுபோல், கோபக்களை இன்னும் முற்றும் மாறுதிருந்தது. முறைப்படி விசாரணை ஸபை மந்திரங்களைச் சில வேதியர் கூறியபின், சித்ரகுப்தர் எழுந்து நமஸ்கரித்து, ஏடுகளைப் புரட்டிக் கொண்டே, பேசலானார்:

"இவர் பிறந்தது ஆந்தை யூரில். இவர் முன்னோர் அஷ்டஸஹஸ்ர பிராம்மண வகுப்பைச் சேர்ந்தவர். தாயாரில்லை, தகப்பனார் அத்யயனம் செய்தவர். சில நிலங்களுமுண்டு. ஒரே பிள்ளை. இவரைத் தகப்பனார் பிரயாசையுடன் 'இங்கிலீஷ்' பள்ளியிற் சேர்த்துப் படிப்பித்தார். இவர் குழந்தைப் பருவத்திலேயே சூது, வாது, வஞ்சகம், பொறுமை முதலிய துர்க்குணங்களை மிகுதியாகக் காட்டினார். ஸ்வபாவத்தில் அஸுரரென்றே சொல்லவேண்டும். எட்டு வயதில் வண்ணாரப் பூச்சிகளைப் பிடித்து, ஊசியால் குத்தி வருத்தியதுண்டு. வீட்டுப் பசுவின் மூக்கில் முள்ளை விட்டு மிரட்டுபவர். தம்மினும் மெலிந்த பையன்களை அடித்து, அட்டஹாஸம் செய்து, காலணு அரையணு

பிடுங்கிக்கொள்வார். 'மெட்ரிகுலேஷ'னில் இரண்டு முறை தவறினர். மூன்றும் முறை, வெகு ஸாமர்த்தியமாகத் திருட்டுத்தனமாய்ச் சில புத்தகங்களை வேஷ்டியுள் மறைத்து, அவற்றைப் பரீக்ஷயில் உபயோகித்து, 'பாஸ்' செய்தார். உபாத்தியாயரும் இவர் தந்திரங்களைக் கண்டு நடுங்கி, இவரைப் 'பெருச்சாளி' என்றழைப்பது வழக்கம்."

"மஹாப்பிரபோ! சில குறுக்குக் கேள்விகள் கேட்க விரும்புகிறேன்" என்ருர் வாமனுவதாரமையர், வெகு பவ்யமான குரலில். யமராஜன் 'ஸரி' யென்று தலையசைத்தான்.

வா. ஐ :—சித்ரகுப்தரே! உமக்கு வயதென்ன?

சி. கு :—(சிறிது நகைத்து) நாற்பதினயிரத்துக்கு மேலேதோ ஆகிறது; மறந்துவிட்டேன்.

வா. ஐ :—(உரத்த குரலில்) கேள்வி கேட்டால், உமது ஓட்டைப் பல்லைக் காட்டாமல், ஸரியாகப் பதில் சொல்லும். ஓய், உமது வயதென்ன?

சி. கு :—(சிறிது மிரண்டு தாழ்ந்த குரலில்) ஏகதேசமாகத்தான் தெரியும்; அளவாய்த் தெரியாது.

வா. ஐ :—அதிருக்கட்டும். நீர் எப்பொழுதாவது சிறு பிள்ளையாகப் பள்ளியில் படித்ததுண்டா?

சி. கு :—இல்லை; பிரம்மதேவன் என்னை இப்படித்தான் சிருஷ்டித்தான்!

வா. ஐ :—என்ன, இப்படிக் கிழப்பிணமாகவா? (ஸபையோர் நகைக்கிறார்கள்: யமராஜன் தலை குனிகிறன்.) அதிருக்கட்டும், நீர்தான் பள்ளிக்குப் போகவுமில்லை, சிறு பிள்ளையாக விளையாடவுமில்லையே! பையன்கள் சேஷ்டையில், எது உண்மையில் துஷ்கிருத்தியம், எது 'வெறும் பாலர் அஞ்ஞானம்' என்று உமக்கு எப்படித் தெரியும்?

சி. து :—சாஸ்திரப் பிரகாரம்....................

வா. ஐ :—ஓய், நான் சாஸ்திரம் கேட்கவில்லை. உமக்கு ஸ்வயமாகத் தெரியுமா என்று கேட்டேன்.

சி. து :—[பதிலில்லை]

வா. ஐ :—அதிருக்கட்டும், நான் எத்தனை வண்ணாரப் பூச்சிகளை ஊசி குத்தித் துன்புறுத்தினேன்?

சி. து :—ஆஹா, சொல்லிவிடுகிறேன். ஹிரண்யகர்ப்பா! அந்தப் பழைய ஏட்டுப்பிரதியைச் சற்றுப் பார்த்து...

வா. ஐ :—ஓய், உம்மைக் கேட்டேனா, உமது 'குமஸ்தா'வைக் கேட்டேனா? இப்பொழுது பழைய பிரதிகளையெல்லாம் புரட்ட அவகாசமில்லை. உம்மால் நேரே சொல்லமுடியுமா?

சி. து :—அதெப்படி முடியும்? முடியாது.

வா. ஐ :—இருக்கட்டும். நான் மெலிந்த பையன்களை அடித்துப் பணம் பிடுங்கினதாகச் சொன்னீரே, ஓர் உதாரணமாவது சொல்ல முடியுமா?

சி. து :—ஆஹா! 1897-ம் வருஷத்தில் நீர் நாகநாதையருடைய பையன் முத்துவைப் பலமாய் அடித்து அரை அணாவும் ஒரு பம்பரமும் பிடுங்கவில்லையா?

வா. ஐ :—நீர் என்னைக் கேள்வி கேட்க வேண்டாம், முத்து அப்படிச் சொன்னானாக்கும். நாகநாதையர் உமக்கென்ன உறவு?

சி. து :—(திடுக்கிட்டு) எனக்குப் பல்லாயிரம் ஜனங்கள் பல்லாயிரம் வகையில் உறவாயிருக்கலாம், அவர் கணக்கெல்லாம்கூட நான்தானே எழுதுகிறேன். அதற்கும் இதற்கும்.........

வா. ஐ :—(தன் முன்னிருந்த மரச் சட்டத்தை ஓங்கி அடித்து) கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்.

சி. து :—நாகநாதையர்—ஸபிண்ட முறையில்—தாயாதி

நான்

வா. ஐ :—நினைத்தேன்! நான் 'மெட்ரிகுலேஷன்' பரீக்ஷையில் திருட்டுத்தனமாய்ப் புஸ்தகத்தை ஒளித்துப் போய் உபயோகம் செய்ததாகச் சொன்னீரே. உமக்கு ஸ்வயமாய்த் தெரியுமா ?

சி. து :—இதெல்லாம் ஞானதிருஷ்டி.

வா. ஐ :—ஓஹோ! ஆனால் எங்கு மூக்குக் கண்ணாடி எதற்கு ? (சபையோர் சிரிக்கிறார்கள்.) நீர் எப்பொழுதாவது பரீக்ஷையில் விடையெழுதி யிருக்கிறீரா ?

சி, து :—நான்தான் எப்போதும் இம்மாதிரி.................

வா. ஐ :—ஓ, ஸரி, ஸரி. ஆனால் உமக்குப் பரீக்ஷை ஸமாசாரம் ஒன்றும் தெரியாதுபோலிருக்கிறது. பரீக்ஷையில் தேறுவதற்கு வேண்டிய குணங்கள் எவையெவை ?

சி. து :—முக்கியமாய் ஸாமர்த்தியமும், ஞாபகசக்தியும்.

வா. ஐ :—அப்படி வந்தீரா வழிக்கு ? நான் செய்த பிரகாரம், புத்தகத்தை வேஷ்டியுள் ஒளித்து மேற்பார்வை யிடுபவர் சிறிதேனும் சந்தேகப் படாமல் உபயோகிக்க ஸமார்த்தியம் வேண்டாமா? அவ்வப்போது அந்தந்தக் கேள்விகள் பிரகாரம் துரிதமாகவும் ஜாக்கிரதையாகவும் புஸ்தகத்தைப் புரட்டிப் பார்க்க ஞாபக சக்தி வேண்டுமா, வேண்டாமா ? ஒரே வார்த்தை.

சி. து :—வேண்டும். ஆனால், மஹா அதர்மமான முறையில்...........

வா. ஐ :—ஓ, அதர்மமோ ? ஸரி, பரத கண்டத்தில் பிராம்மண குலத்தில் பிறந்த என்னை, இங்கிலாந்தில் 1066-ம் வருஷத்தில் மது மாம்ஸங்களைப் புஜிக்கும் காட்டுப் பிராண்டியான 'வில்லியம்' என்ற 'அதம வெள்ளையனின் செயல்களைப்பற்றி நீசபாஷையான ஆங்கிலத்தில் எழுதும்படி வற்புறுத்தியது தர்மமோ, அதர்மமோ ? என்ன தர்மமையா ?

சி. த :—[பதிலில்லை.]

வா. ஐ :—போனால் போகிறது, நீர் நமக்கு எழுதிக் கொடுத்த 'சார்ஜ்' ஷீட்டில், "முப்பது நாற்பது வயதில், வீட்டில் சம்சாரம் குழந்தைகள் இருந்த போதும்கூட, இவர் தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு ஸ்நானத்திலிருந்து ஈரப் புடவையுடன் வீட்டிற்குச் செல்லும் குலஸ்திரீகளை உற்று நோக்கு வார், ஓரிரண்டு முறை கண்ணும் சிமிட்டினார்" என்று கண்டிருக்கிறதே! உண்மைதானா? உமக்குத் தெரியுமா?

சி. த :—ஆமாம், இது கேவலம் ஸத்தியம்; ஞானதிருஷ்டி யில் தெரிந்தது.

வா. ஐ :—சித்ரகுப்தரே, நான் நரகாவஸ்தையிலிருப் பவன்; ஸத்தியமாகச் சொல்லும். அவ்வாறு நடந்தது உமக்கு நன்றாகப் பிரத்தியக்ஷமா?

சி. த :—ஸந்தேஹமில்லை, பலமுறை, ஞான திருஷ்டியிலே தீர்க்கமாய்க் கவனித்திருக்கிறேன்.

வா. ஐ :—ஸபையோர்களே, ராஜனே, நீங்களே தீர்ப்புச் சொல்லவேண்டும். இவர் பிறவிக்கிழவர், காமக்குரோ தாதிகளைக் கடந்தவர். நான் கேவலம் மனுஷ்யன், சரீராபிமானமும் சபலபுத்தியுமுடையவன். பாருங் கள், இவரே அந்தக் குலஸ்திரீகளை ஞானதிருஷ்டியில் தீர்க்கமாகவும் ஸ்பஷ்டமாகவும் கவனித்திருக் கிறாராம்; ஒத்துக்கொள்கிறார். இல்லாமற் போனால், எப்படி அவர்கள் அணிந்த ஈரப்புடவைமுதல் விவர மாய்த் தெரிந்தது? நான் ஊனக்கண்ணாற் செய்த வேலைக்கு வந்துவிட்டதாம் பாவம்! (எல்லோரும் சிரிக்கிறார்கள்).

ரௌரவம் என்ற கோர நரகத்தின் தலைவனான ததி முகன் என்ற உத்யோகஸ்தன், வேலைக்கு விரைந்து வரும் ஒரு யமதூதனைக் கேட்டான் — "வாமனாவதாரமையர் விசாரணை என்னவாயிற்று? எத்தனை வருஷம், எங்கெந்த

நரகங்கள்? நான் வரவேண்டுமென்று மிகவும் ஆசைப் பட்டேன். ஆனால், இந்தப் பாழும் ஈயக்கிணறுகளில் இன்று வேலை யதிகம்."

யமதூதன்—"ஒன்றுமில்லை. விசாரணை முடிந்த பின், சித்ரகுப்தர் பல்வலியென்று ஆயிரம் வருஷத்துக்கு 'லீவு' எடுத்துக்கொண்டிருக்கிறார். வாமனாவதாரமையரை அவருக்குப் பதிலாக நியமித்திருக்கிறார்கள்!" என்றான்.

மகராசாவின் வெள்ள நாக்குட்டி

புலிவீரப்பட்டி ஜமீன்தாரின் தோட்டம் நீண்டு போதுமான அகலமற்று இருந்தாலும், செடிகள் அடர்ந்துள்ளது: அன்று ஜமீன்தாருடன் தோட்டத்தைச் சுற்றிவருகையில், "இதென்ன கத்தரிப்பாத்தி போல் நெடுகச் செடிகள் செறிந்திருக்கின்றனவே" என்று நான் எண்ணினேன். போகுமிடமெல்லாம் ஜிம்மி என்ற கறுப்புச் சடை நாயும் எங்கள் பின் வந்துகொண்டிருந்தது. ஜமீன்தாருக்கு நாய்களிடத்தில் அபார வாஞ்சை. தம் தகப்பனார் காலத்திலிருந்து கிழக்கு மூலையிலிருந்த குதிரை லாயங்களை அழித்து, சுமார் இருபது நாய்களுக்கு இடம் போதுமானபடி, நாய்க் கொட்டில்களாகக் கட்டியிருந்தார். தன்னிடம் ஏற்கெனவே மூன்று வேட்டை நாய்கள் இருப்பதாகவும், தினுஸு தினுஸாக நாய்கள் வாங்கிக் கொட்டில்களை நிரப்பப் போவதாகவும் அவர் என்னிடம் சொன்னார். புதுக்கொட்டில்களையும் வேட்டை நாய்களையும் பார்ப்பதற்காகவே, தோட்டத்தைக் கடந்து நாங்கள் காலைச் சூரியனை நோக்கி நடந்துகொண்டிருந்தோம்.

"இந்த சிம்மியை வாங்கி இப்பம் ரெண்டு வாரமாகலை, அதுக்குள்ள என்ன விஸ்வாஸமா நம்ம பின்னேடயே

வருது பாத்தீகளா! சாதி ஒஸ்ந்த சாதியில்லே? அது தான்......" எதிரிலொரு வேலையாள் கைகூப்பி நிற்பதைக் கண்டு, அவர் 'ஜிம்மி'யின் பிரஸ்தாபத்தை நிறுத்தி "என்னடா?" என்ருர்.

சேவகன் கூப்பிய கைகளை இன்னும் கூப்பினான். "மாமா வந்திருக்காக,—மகராசாவக் கண்டு போகணுமாம்" என்று தாழ்ந்த குரலில் அவன் பதில் மொழிந்தான்.

"இப்பம் ரொம்ப வேலையா இருக்கேன், நேர மில்லேன்ன தெரியலே? பின்ன ஏன் குண்டாங்களுதை யாட்டுமா வெளியிலே வந்து நிக்கறெ, களுதை" என்று ஜமீன்தார் சீறிவிழவே, அவன் இருக்குமிடம் தெரியாத படி மறைந்துவிட்டான்.

இதென்ன ஆச்சரியம் என்று நான் நினைத்தேன்: ஏனென்ருல், இந்த மாமாவை எனக்கு நன்ருகத் தெரியும். இவர் ஜமீன்தாருக்கு மிகவும் வேண்டியவர். எதோ ஓர் எட்டின முறையில் இவர் ஜமீன்தாருக்கு உறவு—ஆகை யினுலேதான் இவருக்கு 'மாமா' என்ற பட்டம். ஆனுல், நெருங்கிய பந்துக்களிடங்கூட, இவர்களுக்குள் இருந்த தோழமையைக் காணமுடியாது. மாமா பதினெட்டு மைல்களுக்கு அப்பாலிருந்த ஒரு கிராமத்திற் குடி யிருந்தார்; மாதத்திற் கொருமுறை ஜமீன்தாரைப் பார்ப்பதற்கு வருவார். அன்று புலிவீரப்பட்டியில் இருந்துவிட்டு, மறுநாள் சன்மானங்களுடன் ஊருக்குப் போவார். இவர் ஜமீன்தாருக்கு மூத்தவர்; அறுபது அறுபத்தைந்து வயதானவராயிருந்தும், நல்ல கம்பீரமான தோற்றமுடையவர். முறுக்கிய வெண் மீசை, பருத்துத் திரண்ட புயங்களுக்கேற்ற பொற்காப்புகள், அன்றுதான் தோய்த்து வெளுத்த தலைப்பாகை—இவைகளில்லாமல் இவரைக் காணமுடியாது. எழுதப் படிக்கத் தெரியா திருந்தும், உலக அனுபவத்திலே தேர்ச்சி பெற்றவர்; வெகு சாதுரியமாகப் பேச வல்லவர். இவர் ஜமீன்தாரிடத்தில் மிகப் பணிவுடனும் ஆதரவுடனும் நடந்துகொள்வார்; அவர் சந்நிதியில் உட்காரமாட்டார்; உரக்கப் பேச மாட்டார்; வாய்விட்டுச் சிரிக்கக்கூட மாட்டார். ஜமீன்

தாரும் இவரை மதிப்புடன் பாராட்டுவார். மறைவில் இவர் ஜமீன்தாரைத் தூற்றியதின் பயனாக, சில நாட்களாக இவர்களுக்குள் மனஸ்தாபம் என்றும், இனி புலிவீரப்பட்டிக்குள் மாமா காலெடுத்து வைக்கக்கூடாதென்று ஜமீன்தார் கட்டளையிட்டு விட்டாரென்றும் ஊரில் யாரோ சொன்னதைக் கேட்டிருந்தும், அதுமட்டும் நான் நம்பவில்லை. இத்தனை நாட்களாகத் தங்கள் நட்பிற்குப் புறமில்லாதபடி நடந்துகொண்ட மாமா திடீரென்று இதற்கு இடங் கொடுப்பாரென்று நான் எண்ணவில்லை. ஆனால் அப்பொழுது, ஜமீன்தாரின் வெறுப்பையும் அவர் உதடுகள் துடித்ததையும் கண்ட பொழுது, நான் கேள்விப்பட்டது உண்மைதான் என்று அறிந்தேன்.

தான் ஜிம்மியைப் பற்றிச் சொல்லவந்ததை ஜமீன்தார் சொல்லாதிருந்துவிடவே, நாங்கள் பேசாது வேட்டை நாய்களை நோக்கி நடந்தோம். கொட்டில்களினருகில் செடி மறைவாக யாரோ இருப்பதுபோல் தோன்றிற்று—கிட்டிய பின்புதான் இன்னாரென்று புலப்பட்டது. காப்புங் கையுமாகக் கும்பிட்டுக்கொண்டு, மாமா எங்கள் வழியில் நின்றார்.

“மகராசாவக் கும்பிடறேன்” என்று அவர் சொன்னதைக் கேட்காதவர்போல, ஜமீன்தார் மேல் நடந்தார்: “மகராசா புதுசா வாங்கின நாய் இதுதானே?” என்று ‘ஜிம்மி’யைச் சுட்டிக்காட்டி அவர் கேட்டதும் ஜமீன்தார் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. ‘ஜிம்மி’யுடன் மாமா எங்களைப் பின்தொடர்ந்ததையும், ஜமீன்தார் கவனிக்காதவர்போல் இருந்துவிட்டார்.

கொட்டில்களின் வெளியில் தங்கள் மெலிந்த உடல்களை எடுத்துக்காட்டும்படி கனத்துள்ள சங்கிலிகளால் மூன்று கோம்பை நாய்கள் கட்டியிருந்தன.

“அதோ நடுவில் குந்திக்கிட்டிருக்கிறதே, அதுதான் ரொம்ப சாதி — முந்தாநாள் ஒரு ஆட்டுக்குட்டியக் கிளிச்சுப் போட்டிடுச்சு” என்று ஜமீன்தார் என்னிடம்

சொன்னார். சிறிது நேரம் நாய்களை உற்றுப்பார்த்துக் கொண்டு நாங்கள் மௌனமாய் நின்றோம். முடிவில் மாமா மெல்லக் கமறிவிட்டு என்னை நோக்கித் திரும்பினார்.

“நம்ம மகராசாவுக்கு நாயின்னு என்ன கிறுக்குன்னு உங்களுக்குத்தான் தெரியுமே — இந்தத் தோட்டம் என்னென்ன நாயெல்லாமோ பாத்திருக்குது. ஆனாலும் அப்பம் அரண்மனையிலிருந்த ஒரு வெள்ள நாக்குட்டிக்கு ஜதை நான் கேட்டதுமில்லெ பாத்ததுமில்லெ” என்று அவர் ஆரம்பித்தார்.

“அந்த நாக்குட்டி நல்ல சுத்த வெள்ள நிறம்— சும்மா பால்போலிருக்கும். சீம நாய் சாதி: அதென்னமோ பேர் மறந்து போச்சுது அந்த சாதிக்கு—மகராசாவுக்கு ஒரு வேளை க்யாபகமிருக்கலாம்—”

ஜமீன்தார் சுளித்த புருவங்களுடன் பூமியை நோக்கியவண்ணமா யிருந்தார்; தம் கைப்பிரம்பால் ஒரு புல்மூட்டினைக் குத்திக்கொண் டிருந்தார். மாமா மேலும் பேசலானார்.

“அந்த நாக்குட்டி யிருந்திச்சே, அது காலெல்லாம் தூண்போ லிருக்கும். காது லேசாத் தூக்கிக்கிட்டிருக்கும், வால் கத்தி மாதிரி. அதை மகராசா ஆசப்பட்டு வாங்கி, அவுகளே பேர்வெச்சு எப்படிப் பிரியமா வளத்து வந்தாக! பாளாப்போன மறதி யெனக்கு அந்த நாக்குட்டி பேர்கூட மறந்துபோச்சுது. என்ன ‘டைகரா’? ஆமாம், ‘டைகர்’னுதான் பேர்.”

ஜமீன்தார் திடரென்று தலைநிமிர்ந்தார். ‘சாக்கி’ என்று கர்ஜித்துவிட்டு மறுபடியும் கீழிருக்கும் புல்லாந் தரையி லாழ்ந்துவிட்டார்.

‘ஆமாமாம்—சாக்கி, அதுக்கு சாக்கினு பேரில்ல’ சாக்கிதான். இந்த சாக்கிக்கு என்ன ரோசந் தெரியுமா? என்ன, நானு அரமனையில் எத்தனை நாயோ பாத்திருக்கேன், பெரிய பெரிய வேட்ட நாயெல்லாம் மகராசா கிட்ட யிருந்தில்லெ!—முயல் வேட்டை, மான் வேட்டை, பன்னி வேட்டைக்குக்கூடச் சரியான நாயில்லெ? ஆனு

எந்த நாயானலும் காக்காயப் பிடிச்சு நீங்க பாத்திருக்கிகளா ? இருக்காது. காக்காயெ குண்டு வெச்சுச் சுட்டாக்கூட விளாது—அம்மாஞ் சுருசுருப்பு காக்காய்க்கு. ஆனா, இந்த சாக்கி ஒருநாள் ஒரு காக்காயப் பிடிச்சுடிச்சு, மகராசாவே இதுக்கு சாக்கி! சாக்கி மகராசா காலுங்கிட்டப் படுத்துக்கிட்டு தூங்கருப்பல இருந்திச்சு—காக்கா அதோ அந்த மருதாணிச் செடியிருக்குதே, அம்மாந்தூரத்திலே மேஞ்சுக்கிட்டிருந்திச்சு. திடீரின்னு ஒரே தவ்வில தவ்வி, சாக்கி அந்தக் காக்காயலபக்கின்ன கவ்விப் பிடிச்சுடிச்சு—அவ்வளவுதான்.”

இந்த அதிசயத்தை எடுத்துரைத்துக்கொண்டே நாய் பாய்ந்த விதத்தை விளக்கும்பொருட்டு மருதாணிச் செடியை நோக்கிக் குதிப்பதுபோல் மாமா பாவித்தார். ‘ஜாக்கி’ காகத்தைப் பிடித்த வரலாறு முடிவதற்கு முன்பே, ஜமீன்தாரின் புருவச்சுளிப்பு மறைந்துவிட்டது. இந்தச் சம்பவத்தை நினைத்தோ, அல்லது மாமா தாவுவது போல் நடித்ததைக் கண்டோ, அவர் கொல்லென்று சிரித்துவிட்டார்.

“ஹோ, ஹோ, ஹோ! அந்த — ஹீம்—குடுகுடுப்பாண்டிய வெரட்டிச்சே—ஹோ, ஹோ—அது நெனவிருக்குதா ?” என்று ‘ஜாக்கி’யின் செயல்களை மேலும் விளக்கிக் கூறுமாறு ஜமீன்தார் மாமாவைத் தூண்டினார்.

“அதுக்கூடவா மறந்துட்டேன் — நல்லா நெனவிருக்குது. மகராசா, தோட்டத்தில சாக்கியோட, இப்படி லாத்திக்கொண்டிருந்தாக. அப்பம் ஒரு குடுகுடுப்பாண்டி—”

ஆனல் இந்தக் கதையைக் கேட்காமலே நான் வந்துவிட்டேன். அதற்குமேல் நான் அங்கு இருப்பது சரியல்ல என்று எனக்குத் தோன்றிற்று. மனஸ்தாபப்பட்டு, பிறகு ‘சாக்கி’யின் திருவிளையாடல்களை நினைத்து உற்சாகமடைந்து கூடும் இவர்களுடன் நானும் இருப்பது—

ஏதோ சாக்குச் சொல்லி அவசர விடை பெற்றுக்கொண்டு நான் வந்துவிட்டேன்.

அபஸ்வரம்

வக்கில் காசிநாதையருக்கு அவ்வளவாகச் சங்கீதத்திற் பாண்டித்திய முண்டென்று சொல்ல முடியாது. எனினும், இயற்கையில் அபூர்வ ஞானம் வாய்ந்தவர். நடக்கக் கற்கும் பருவத்திலேயே, யாராவது அஸ்பவரமாய்ப் பாடினல், குழந்தை பிரமாதமாக அழத் தொடங்கி விடுமாம். சிறுவன் காசியின் மனத்தில் சங்கீதம் பயில வேண்டுமென்ற பேரவா வேரூன்றி யிருந்தும், அதை நிறைவேற்ற முடியாமற் போனதற்குக் காரணம் ஒன்றே. காசிநாதனுடைய தந்தை விசுவேசுவர சர்மா என்பவர் பழையகாலத்து மனுஷ்யர்; ஆண்மக்கள் சங்கீதம் பழகினல் படிப்பு சூன்யமாகி விடும் என்ற திடமான கொள்கையை யுடையவர். தம்முடைய ஏக புத்திரனுக்கு அபார பாட்டுக் கிறுக்குண்டென்று அறிந்து, அவனை எவ்வித சங்கீதக் கச்சேரிக்கும் போகக்கூடாதென்று ஆக்ஞை செய்துவிட்டார்.

தாயில்லாக் குழந்தையாகிய காசிநாதன் தன் பிதாவைத் தெய்வம்போல் பாராட்டி வந்தான். அதாவது, அந்த பக்தி அன்பும் பயமும் கலந்துள்ளது; அன்பினும் பயமே மிக்கது. தந்தை சொல்லை மீறி நடப்பது அவனுக்கு எவ்விதத்திலும் அசாத்தியமான காரியமாகத் தோன்றிற்று.

ஒருநாள் கானேந்திரன் என்ற பட்டம்பெற்ற சங்கீத வித்வான் ஒருவர் அவ்வூருக்குக் கச்சேரி பண்ண வந்தார். அவருடைய சாரீரத்தின் மகிமையையும் பாட்டுத் திறனையும் பற்றிக் கேளாதவர் சிலரே. சங்கீதத்தின் மேலுள்ள பிரேமையாலும் சகாக்களின் தூண்டுதலாலும், கடைசியில் காசிநாதன் பிதாவின் கட்டளையைப் புறக்கணிக்கத் துணிந்துவிட்டான். சர்மாஜியிடம் தான் இயங்கும் படக்காட்சியைப் பார்க்கச் செல்லுவதாகப் பொய்யுரைத்துவிட்டு ஊர்க் கீழ்ப்புறத்தில் கச்சேரி நடக்குமிடம் போய்ச் சேர்ந்தான்.

அவன் உள்ளே போகும்பொழுது, கச்சேரி ஆரம்பமாய்விட்டது. அன்று பாகவதருக்குச் சற்று ஜலதோஷம்; பூர்விகல்யாணி ராகத்தைக் கீழ்ஸ்தாயியிலேயே சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்தார். இவ்வளவு மனோரம்யமான பாட்டைக் காசிநாதன் இதுவரையிலும் கேட்டதில்லை; மெய்ம்மறந்து ஆநந்த பரவசமானுன். ராகம் பாடி முடிந்ததும், பாகவதர் 'பரம பாவன' என்ற பூச்சி ஐயங்கார் கிருதியைத் தொடங்கினுர். அனுபல்லவியில் 'வாரிஜ லோசனு' என்று பாடும்பொழுது, மேல் ஸ்தாயி பஞ்சமம் எட்டாமல் பளிச்சென்று அபஸ்வரம் பேசி விட்டது.

காசிநாதனுக்கு உடம்பெல்லாம் மயிர்க்கூச்சலுண்டாயிற்று. "ஆனைக்கும் அடி சறுக்கும்; இம்மாதிரிச் சம்பவங்கள் பாடகர்களுக்குச் சகஜமானது" என்று அவனுக்குத் தெரியாது. இந்தத் தெய்விகமான கீதத்தில் இவ்வித மாசு ஏற்பட்டதைச் சகிக்கமுடியாமல், மெதுவாக எழுந்து வீடு திரும்பிவிட்டான். அவன் மனைவாயிலை அடையும்பொழுது, சர்மாஜி திண்ணைமேல் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார். அவனைக் கண்டதும், "ஏனப்பா, இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டாய்? கதை பிடிக்கவில்லையா, அல்லது நீ ஸினிமாவுக்கே போகவில்லையா?" என்று கேட்டார்.

காசி ஒன்றும் யோசிக்காமலே, கதை பிடிக்கவில்லை என்று விடையளித்தான்.

"இன்றைக்கு என்ன படம்?"

இனித் தப்பும் வழி இல்லை; சர்வநாசம் அடைந்தாய் விட்டது! அவன் கால்கள் உதறலெடுத்தன; மேனி வியர்த்தது; மேல் நோக்காமலே, தந்தை கண்கொட்டாமல் தன்னை உற்றுப் பார்ப்பதை உணர்ந்தான். ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாயிருந்தது. பிறகு, ஏதோ விளம்பரம் திடீரென்று அவன் ஞாபகத்திலெழ, பையன் தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "இன்று மாற்ருந்தாய் என்ற படம்" என்ருன்.

சர்மாஜி, " அந்தப் படம் ஓய்ந்து போய் ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டதே. கானேந்திரர் கச்சேரிக்கல்லவா நீ போயிருந்தாய் ? " என்று நிதானமாகவே கேட்டார். பிறகு, " சீ! என்னை ஏமாற்றப் பார்த்தாயா ? என்ன சாமர்த்தியசாலி ! " என்று ஓர் ஏளனச் சிரிப்புச் சிரித்து விட்டு, வீட்டினுள் போய்விட்டார்.

அந்த நகைப்பு காசியின் செவியில் நாராசம்போற் பாய்ந்தது. அப்பொழுதே தந்தையார் தன்னை வாளால் வெட்டி வீழ்த்தி யிருந்தால் அவனுக்கு முழுச் சம்மதமாக இருந்திருக்கும். கண்களினின்றும் நீர் தாரை தாரையாகப் பெருக, சிறுவன் திண்ணைமேல் குப்புறப் படுத்துக் கொண்டான்.

சென்னைக் கடற்கரை யருகில், மாமரங்களும் பூஞ்செடிகளும் நிறைந்த ஓர் அழகிய தோட்டத்தின் மத்தியிலமைந்த பெரிய பங்களாவில் வக்கீல் காசிநாதையர் வசித்துவந்தார். சங்கீதப் பயிற்சிக்கு இடையூறாக இருந்த அவர் தந்தையார் காலஞ்சென்று பல வருஷங்களாயின. ஆனால், இப்பொழுது அவருக்குச் சங்கீதம் படிப்பதற்கு வேண்டிய உற்சாகமுமில்லை, அவகாசமுமில்லை ; பொருள் தேடும் அரும்பெருங் காரியத்தில் அவர் ஈடுபட்டிருந்தார். எனினும் அவருடைய அபூர்வ ஞானத்தையும் உயர்ந்த பதவியையும், முக்கியமாக உயர்ந்த பதவியை, உத்தேசித்துச் சங்கீத வித்வான்கள் அவரைத் தம் சபைக்குத் தலைவராக அமர்த்திக் கொண்டனர்.

இவ்வாறு ஒரு முறை அவர் தலைமை வகிக்கும் பொழுது, பரம்பரைக் காயகர்களாக விளங்கும் பனையூர்ச் சகோதரர்களுக்கும், ஜீவ சாஸ்திரத்தில் எம். ஏ., படித்த பிறகு சங்கீதம் பயின்று முன்னுக்கு வந்த மற்றொரு வித்வானுக்கும், நாட்டைக்குறிஞ்சி ராகலக்ஷணத்தைப் பற்றி ஒரு பெரிய வாக்குவாதம் நடந்தது. தர்க்கம் மிதமிஞ்சிப் போய், பொதுப் பேச்சைவிட்டு வசை பேசும் ஸ்திதிக்கு வந்துவிட்டது. அப்பொழுது ' பனையூர்ச் சகோதரரில் ஒருவர் எழுந்து,

"கனவான்களே, எல்லாக் கலைகளிலும் சங்கீதமே மேன்மையானது. அவ்வகைப்பட்ட கலையில், ஏதோ நுனிப்புல் மேய்ந்து வித்வத்வம் அடைந்து விடலாமென்று எண்ணுவது முற்றிலும் பேதைமை. நான் இந்த ராக லக்ஷணத்தை எவ்வளவோ எளிதாக விளக்கிக் காட்டியும், நம் நண்பரான எம். ஏ. பண்டிதர் மேலும் மேலும் தாம் சொன்னதையே சொல்லுகிறார். இந்த அற்ப விஷயத்தின் நுட்பத்தைக் கிரகித்துக் கொள்ள அபாரமான சங்கீத தத்துவ ஞானம் அவசியமில்லை. என்றாலும், மிருக சாஸ்திரத்திற்கும் சங்கீத சாஸ்திரத்திற்கும் வெகுதூரமல்லவா ?" என்று சொன்னார்.

உடனே எம். ஏ. பண்டிதர் என்று குறிப்பிட்ட வித்வான் எழுந்து, தம் மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்தித் தொண்டையைச் சற்றுக் கமறிக்கொடுத்தபின், எங்கிருந்தோ ஒரு புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, பின்வருமாறு சொன்னார் :—

"சபையோர்களே, நான் ஏதோ எனக்குத் தெரிந்த சொற்ப வித்தையை ஆதாரமாகக் கொண்டு பிதற்றி விட்டதற்காக உங்களிடம் மனமார்ந்த மன்னிப்புக் கோருகிறேன். நான் ஜீவ சாஸ்திரத்தை விட்டு, சங்கீத சாஸ்திரத்தைக் கைக்கொண்டது வாஸ்தவம். ஆனால் படிப்பு ஒருநாளும் முற்றிலும் வீண் போகாது. நான் கைவிட்ட சாஸ்திர ஆராய்ச்சிதான் பனையூர்ச் சகோதரர்களின் மகிமையை அறிய இன்று எனக்கு ஹேதுவாக இருக்கிறது. அவர்கள் பரம்பரையாக வித்வான்கள் ; ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் போற்றின 'ரஸிக சிரோமணி'யின் வம்சத்தினர் என்று இப்பொழுதுதான் அறிந்தேன்.'

இதைக் கேட்டுச் சிலர் கொல்லென்று நகைத்தனர். 'ரஸிக சிரோமணி' என்ற கழுதை சங்கீதம் கற்கப்போன கதையைப் படிக்காத 'பனையூர்ச் சகோதரர்கள்' திறுதிறுவென்று விழித்தார்கள். அப்பொழுது காசிநாதையர் எழுந்து, சபையோர்களை அமர்த்திச் சொல்லுகிறார் :—

"நண்பர்களே, எல்லாக் கலைகளிலும் சங்கீதம் மேன்மையான தென்று இப்பொழுது 'பனையூர்ச் சகோதரர்' சொல்லக் கேட்டீர்கள். ஆனால், இம்மட்டுமோ? சங்கீதம் சிருஷ்டிக்கே ஆதாரம். 'ஓம்' என்னும் சப்தத்தினின்று பிரபஞ்சமெல்லாம் உற்பத்தியாயிற்று. ஸப்த ஸ்வரங்களை ஒழுங்குபடுத்திக் கச்சேரிகளில் பாடுவது, அல்லது வாத்தியங்களில் வாசிப்பது மட்டுமே சங்கீதமென்று நாம் கனவிலும் நினைக்கக்கூடாது. இயற்கையில் ஒளியும் இருளும், இன்பமும் துன்பமும், பிறப்பும் இறப்பும் அமைந்திருப்பது போல் ஜகத்திலெழும் நாதங்களெல்லாம் இருவகைத் தன்மை யுடையன. தொனிகள் ஒன்றோடொன்று கூடி இசைந்தால் சங்கீதம்; இசையாவிட்டால் அபஸ்வரம். இந்த நாதங்களிலே சிற்சிலவே நம் செவிக்கு எட்டக் கூடியவை. அவைகளின் இசையை நாம் காதினாற் கேட்பது மட்டுமல்லாமல், மனத்தினால் உணரவும் வேண்டும். இந்த இசை என்பதுதான் சிருஷ்டியில் எல்லாவற்றிலும் மனிதனுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது. இசையில்லாதது துன்பத்தை அளிக்கும்.

"நாம் இன்று மாலை நாட்டைக்குறிஞ்சிராக லக்ஷணத்தைப் பற்றி வாதியும் பிரதிவாதியும் தத்தம் கக்ஷிகளை எடுத்துரைக்கக் கேட்டோம் (சிரிப்பு). இந்த விசாரணைக்குத் தீர்ப்பளிக்கச் சக்தியற்றவனாக இருந்தும் நியாய சபையில் இதை விட ஸாராம்சமுள்ள வியாஜ்யம் நடைபெற நான் கேட்டதில்லை. ஆனால், இறுதியில் நடந்த சச்சரவு, நம் சபைக்கு இசைவில்லாமல் விகாரத்தையளிக்கிறது. அது ஓர் அபஸ்வரம். நண்பர்களே, நாம் சங்கீதப் பிரியர் என்பதற்கு அத்தாட்சியாக நம் பேச்சும், நடத்தையும், ஏன், எண்ணங்களும் கூட, இனிதாகவும் இசைவுள்ளதாகவும் இருக்கவேண்டும். இது உங்களுக்கு அசாத்தியமாகத் தோன்றினால், இனிமேல் நம் சபை மட்டிலாவது, கானத்துக்கு விபரீதமான இவ்விதச் சம்பவங்கள் நடக்கக்கூடாதென்று நான் உங்களைக் கைகூப்பி வேண்டிக்கொள்கிறேன்" என்று இரு கக்ஷியரும் வெட்கித் தலை குனியச் சொல்லி முடித்தார்.

நாகநாதையர் இந்தப் பிரசங்கத்தை முன்னுலோசனை யின்றித் தற்சமயம் பேசிவிடவில்லை. அவர் சங்கீதக் கூட்டங்களில் பேசும்பொழுது, இதே உபந்நியாசத்தைச் சில வேறுபாடுகளுடன் அடிக்கடி உபயோகித்திருந்தார். சொல்லிய வண்ணம் செய்யவும் சில வேளைகளில் முயற்சிப்பார். அவர் புதிதாக வீடு கட்டிய பொழுது, ஏராளமாகப் பணச் செலவு செய்து ஒரு ராகப் படம் வாங்கினுர். அது மொகலாய சக்கிரவர்த்திகள் காலத்தில் வரைந்த லலிதா ராகப் படத்தை ஒரு சிறந்த நவீன ஓவியர் நகல் செய்தது. படம், அளவிற் சிறியதாயிருந்தும், ஒளி நிறைந்து காண்போர் மனதைக் கவரக் கூடிய தன்மை யுடையது. ஒப்பற்ற எழில் வாய்ந்த ஒரு நங்கை, சர்வ பூஷண அலங்காரியாய், சிங்கார மஞ்சத்தின் மீது சாய்ந்து கொண்டிருந்தாள். சோர்ந்த அரைக் கண் பார்வை; பரிமளம் வீசும் அவளுடைய அழகிய கூந்தல் கார்மேகம் போல் ஒரு புறம் கிடந்தது. பல வர்ணங்கள் அமைந்த மெல்லிய திரை போன்ற ஆடை அவள் திவ்ய சரீரத்தின் வனப்பை எடுத்துக் காட்டியது. பக்கத்தில் வீணையும் மிருதங்கமும்; புஷ்பஹாரத்தை ஏந்தின தோழி அவளுடைய வதனத்தின் லாவண்யத்தைப் பருகினவளாய் அசைவற்று நின்றுள்.

காசிநாதையர் இல்லத்தின் முன்கூடத்தில் இப்படத்தை மாட்டினுர். நாற்காலி மேஜைகள் படத்திற்கேற்ற தல்லவென்று, முஸ்லீம் வீடுகளிலே போல், சித்திர வேலைப்பாடுகள் செய்த பட்டுத் திண்டுகள் வாங்கிப் போட்டார். மத்தியில் அழகிய இரத்தின கம்பளம் விரித்து, பாம்பு படமெடுத்தாடுவது போன்ற பீடத்தின் மீது ஒரு ஹுக்காவும் வாங்கி வைத்தார். ஹுக்கா உபயோகிப்பதற்கன்று, அலங்காரத்திற்கே. இப்படிச் செய்ததில், அக்பரோ, ஜெஹாங்கீரோ திரும்பி வந்து விட்டதாக அவருடைய எண்ணம்!

ஆனுல் இந்த மனையலங்கார மெல்லாம் அற்பாயுளோடு முடிந்து விட்டது. அவர் வீடு கட்டிக் கிருஹப்

பிரவேசம் நடத்திய பொழுது, கக்ஷிக்காரர்களும் உற்றார் உறவினரும் அவருக்கு அநேக பரிசுகள் அளித்தார்கள். அவற்றினுள் ராஜா ரவிவர்மா வரைந்த ஸ்ரீராம பட்டாபிஷேகத்தின் வர்ண அச்சுப் படம் ஒன்று. காசிநாதையர் பார்யை காமாக்ஷி அம்மாள் இந்தப் பிரம்மாண்டமான, ஓவியச் சிறப்பற்ற, படத்தைத் தன் கணவர் வெளியே போயிருந்த பொழுது லலிதாவுக்கு எதிரிடையாக மாட்டி வைத்தாள். மாலையில், அவர் வீடு வந்து சேர்ந்ததும், ஏதோ தவறுதல் ஏற்பட்டதை யுணர்ந்து, இன்னதென்று தெரியாமல், சில கணங்கள் தயங்கினார். பிறகு படத்தைப் பார்த்ததும் அருவருப்புற்று, உள்ளே விரைவாகச் சென்று மனைவியிடம் சினந்தேக்கிய குரலில்,

"காமு, நீ இன்று என்ன காரியம் செய்து விட்டாய்?" என்று கேட்டார்.

மனங்கொண்டது மாளிகை; காமாக்ஷி அம்மாள் மனதில் 'ஸ்ரீராம பட்டாபிஷேக'த்தை விட அழகுள்ள படம் இவ்வுலகிலே கிடையாது. தன் கணவர் படத்தைப் பற்றிப் பேசுகிறார் என்பதை அவள் அறிந்து கொள்ளாமல், திடுக்கிட்டு,

"என்ன, என்ன செய்துவிட்டேன்?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"நீ தானே அந்த 'ரவிவர்மா' படத்தைக் கூடத்தில் மாட்டி வைத்தாய்?"

"எந்த 'ரவிவர்மா' படம்? ஓ, அதுவா—ஆமாம். ஏன், கண்ணாடி உடைந்து விட்டதா, என்ன?"

"கண்ணாடி உடைந்து விட்டால் நன்றாயிருக்கும். காமு, அந்தப் படம் உனக்குப் பிடித்திருந்தால், பட்டகசாலையில் மாட்டிக்கொள்."

"முன் கட்டில் மாட்டக்கூடாதென்றா சொல்கள்?"

"ஆமாம். அப்படித்தான் சொல்லுகிறேன். இந்த 'ரவிவர்மா' படத்திற்கு அழகுமில்லை, அந்தமுமில்லை."

நான் வாங்கி யிருக்கும் லலிதா ராகப் படத்தோடு மாட்ட இதற்குத் தகுதியில்லை. நான் சொன்னபடி செய். இதை நாளெல்லாம் எடுத்துரைத்தாலும் உனக்குப் புரியாது.''

“ஆமாம்; நான் படிப்பில்லாத மூடம். உங்கள் நாகரிகங்களைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? ஆனால் இந்த நாட்டுப் புறத்துக்கும் கொஞ்சம் சுய புத்தி யுண்டு. வீட்டுள் நுழைந்ததும், மங்களகரமாக ஸ்ரீராமர் படமிருந்தால் நன்று யிருக்குமா, அரை உடையுடன் படுத்திருக்கும் ஒரு பெண்ணின் படமிருந்தால் நன்று யிருக்குமா? நீங்களே சொல்லுங்கள். உங்கள் சிநேகிதர்கள் தான் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? வேண்டுமென்றால், உங்கள் அருமை ‘லலிதா’வைப் படுக்கை யறையில் மாட்டி வையுங்கள். நன்றாக இசைந்திருக்கும்'' என்று சிரித்துக் கொண்டே அவள் சொன்னாள்.

அவள் சொல்லுவதிலும் கொஞ்சம் நியாயமிருக்கிறதென்று அவருக்குத் தோன்றிற்று. காமாக்ஷியைப் போல் தன் நண்பருள் அநேகருக்குப் படத்தின் அர்த்தம் விளங்காம லிருக்கலாம். அவர்கள் அப் புனிதமான மாதைத் துர் எண்ணத்துடன் பார்வை யிடுவது மன்றி, தன்னைப் பற்றியும் தாழ்மையாக நினைப்பார்கள். ‘இனிமேல் இந்தப் படம் அங்கிருப்பது உசித மில்லை’ யென்று அதைக் கழற்றி மாடிக்குக் கொண்டுபோய் விட்டார்.

காமாக்ஷி அம்மாள் வெகு சாமர்த்தியசாலி; தம்பதிகளுள் ஏதாவது அபிப்பிராய பேதம் ஏற்பட்டால், கேலியாகவும் விளையாட்டாகவும் தன் கக்ஷியைச் சாதித்துக் கொள்ளும் சக்தியுடையவள். நியாயஸ்தலத்தில் எவ்வளவோ கடினமான வியாஜ்யங்களைத் தம் திறத்தினால் வென்றிருந்தும், தாம் கொண்ட பெண்டாட்டியிடம் இவ்வாறு தோல்வியடைவது காசிநாதையருக்குத் திருப்தியை யளிக்கவில்லை. என்ன கற்றும், எவ்வளவு உன்னதப் பதவியை யடைந்தும், ஊரார் தம்மைக் கொண்டாடியும், தம் மனையாள் தம்மை மதிக்கவில்லை யென்ற எண்ணம் அவரை அடிக்கடி உபத்திரவப் படுத்தியது. இதற்

கெல்லாம் அவர் மனமே காரணம். தாம் உலக விவ காரங்களில் ஏட்டுச் சுரைக்காய் என்று அவருக்கு நன் ருகத் தெரியும். அவளோ, இயற்கையில் புத்திக் கூர்மை யும் விவேகமும் வாய்ந்தவள்; சர்மாஜி இறந்த நாள் முதல், குடும்ப பாரத்தை ஏற்றுக் கொண்டு, உற்சாகத் துடன் சம்சாரத்தை நிர்வகித்து வந்தாள். ஓரிரண்டு முறை, அவள் தன் சூக்ஷ்மத்திறுல் நண்பர்கள் முன்பு சிறுமைப் படுவதினின்றும் அவரைக் காப்பாற்றி யிருந் தாள். அவருக்கும் அவளிடத்தில் பரிபூரண விசுவாசம் உண்டு; தமக்கு என்ன அல்லல் ஏற்பட்டாலும், குழந்தை தாயிடம் சென்று தஞ்சமடைவது போல், அவளிடம் சென்று நிவிருத்தி தேடிக் கொள்வார். ஆனுல், அவர் அற்ப விஷயங்களில் அவளுடைய நகைச் சொல்லுக்கு அஞ்சினுர். ஒரு சிறு காரியஞ் செய்தாலும், காமாக்ஷி பரி கசிப்பாளோ என்று உள்ளூரப் பயம். இதற்குப் பரி காரமாக, வெளிப்படையாய் அவளிடம் அதிகாரத்துடன் பேசவும், தாமே வீட்டுக்கு எஜமானரென்று அடிக்கடி காட்டிக் கொள்ளவும் தலைப்பட்டார்.

காமாக்ஷி அம்மாள் இதையெல்லாம் பொருட்படுத்த வில்லை. "அவருக்கு வெளுத்ததெல்லாம் பால்; குழந்தை போன்ற சுபாவம். நாமே சொல்லிக் கொண்டால், நன்ரு யிராது. இவ்வளவு உச்ச ஸ்தானத்தை அடைந்தும், எள்ளளவேனும் கர்வத்தை அவரிடம் யாராலும் கண்ட துண்டோ?" என்று தன் சிநேகிதிகளிடம் பெருமை பாராட்டிக் கொள்வாள்.

அன்று காசிநாதையர் கிருகத்தில், பௌத்திரன் பிறந்து புண்யாக வசனம் வெகு விமரிசையாக நடந்தது. பிராமண போஜனம் முடிந்து வீட்டுக்காரர் சாப்பிடும் பொழுது, மணி இரண்டிற்கு மேலாகி விட்டது. பிறகு காசிநாதையர் சிரமபரிகாரம் புரியும் பொருட்டு மாடிக்குச் சென்ருர். ஒருமணிநேரம் படுக்கையிற் புரண் டாரே யொழிய, நித்திரை வரவில்லை. அவருக்கு இந்தப் பேரன் பிறந்ததிற் சந்தோஷமில்லை. நாம் பாட்டனுகி

விட்டோமென்ற எண்ணம் எவ்விதத்திலும் கசப்பாகவே யிருந்தது. வயது நாற்பத்தைந்துக்கு மேலாகியும் ஹட யோகப் பயிற்சிகளிற் பழகினதால், மார்பு அகன்று, வயிறு படிந்து, மிக்க அழகுவாய்ந்த ஒரு வாலிபர் போலவே அவர் விளங்கினார். இந்த ஒரு விஷயத்தில்தான் அவருக்குக் கர்வமும் பெருமையுமுண்டு. இரண்டு வருஷங் களுக்குமுன், ஒருநாள் சட்ட கலாசாலைக்கு ஏதோ காரிய மாக அவர் சென்றிருந்த பொழுது, ஒரு மாணாக்கன் அவரை நோக்கி "உன்னை இக்கலாசாலையிற் பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லையே. நீ எந்த வகுப்பிற் படிக்கிறாய்?" என்று கேட்டான். இச் சம்பவத்தை அவர் நண்பர்களிடம் மிக்க மனமகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்வது வழக்கம்.

அவர் மனைவியோ, அவருக்கு ஐந்தாறு வயது இளை யவளாயிருந்தும், மயிர் நரைத்து மேனி பருத்துத் தேகக் கட்டையிழந்து, அவருக்கும் மூத்தவளாகத் தோன்றினாள். ஆனால், அதைப்பற்றிச் சிறிதேனும் கவலைப்படாமல் குதூகலமாய், "அழகு யாருக்கு வேண்டியிருக்கிறது? நம் காலமோ கழிந்தாய் விட்டது. இனிமேல், குழந்தைகள் நன்றாயிருந்தால் போதும்" என்று சொல்லும் பொழுது அவருக்கு அளவற்ற வெறுப்புண்டாகும்.

காசிநாதையர் படுக்கையை விட்டெழுந்து உடை தரிக்கலானார். சில நாட்களாக, நடுசிரஸில் ஒரு சிறு பொட்டல் தட்டுவதைக் கவனித்து, வெகு சிரமத்துடன் பின்மயிரை முன்கொணர்ந்து அதை மறைக்க முயன்றார். 'அது வெளியில் தென்படுகிறதோ?' என்று கண்ணாடியில் வெகு நேரம் உற்று நோக்கியபின், ஒருவாறு திருப்தி யடைந்து கீழே இறங்கி வந்தார். காமாக்ஷி அம்மாள் ஊஞ்சற் பலகைமேல் அமர்ந்தவளாய், பேரனை மடியில் வைத்துத் தாலாட்டிக் கொண்டிருந்தாள். அச் சிசு, தன்னைத் துவேஷிப்பாரை இயற்கை யுணர்ச்சியில் யறிந்து கொண்டது போல், அவர் நெருங்கியதும் வீறிட்டு அழத் தொடங்கிற்று. அவர், "இந்தக் குழந்தை என்ன, ஸதா அழுதுகொண்டே யிருக்கிறது, வயிற்றுவலியா?" என்று கேட்டார்.

அவர் மனைவி, "அப்படி யொன்றுமில்லை. உங்களை 'தாத்தா, தாத்தா' என்று கூப்பிடுகிறான். நீங்கள் தான் அவனை லட்சியம் பண்ணுகிறதில்லை" என்றாள்.

"என்னை யாரும் அப்படி அழைக்க வேண்டாம். எல்லாரும் உன்னையே பாட்டி யென்று கூப்பிடட்டும்."

காமாக்ஷி அம்மாள் சிரித்துக்கொண்டே, "இப்பொழுதுதான் வயது பதினாறு திரும்பி யிருக்கிறதென்று நினைவு; 'தாத்தா' என்றால் கோபம் வந்து விடுகிறது. பின்வகிடெடுத்து வழுக்கையை மறைத்து விட்டால், தாத்தா பால்யமாகி விடுவாரா?" என்று கேட்டாள்.

காசிநாதையர் திடுகிட்டுப் போனார். சிவ சிவா! இவளுக்குத் தெரியாததொன்றுமே உலகத்திற் கிடையாதா? சமையற்காரன் தேத் தண்ணீர் கொண்டு வந்ததை அவர் மறுத்துவிட்டு, "நான் ஸபாவிற்குப் போகிறேன். வர நேரம் பிடிக்கும்" என்று விரைவாக வாயிலை நோக்கிச் சென்றார். காமாக்ஷி அம்மாள், "சற்றுப் பொறுங்கள். 'நர்ஸு' பணம் வாங்க வந்தாள், திரும்பிப் போக வண்டியில்லை. அவள் வீடு உங்கள் வழியிலே தானிருக்கிறது" என்றாள்.

தாதி சண்பகமும் அவர் அனுமதிக்குக் காத்திருக்காமலே கையிற் பெட்டியை யேந்தினவளாய், அவரைப் பின் தொடர்ந்தாள்.

காசிநாதையருக்கு ஸ்திரீகளைக் கண்டால் கூச்சம் அதிகம். அவர்களை நேரில் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டார்; அனாவசியமாக அவர்களுடன் பேசவும் மாட்டார். அவர் போகும்பொழுது, இன்று நாம் காரின் முன்புறத்தில் ஏறிக்கொள்ள வேண்டுமென்று நினைத்தும், அப்பியாச வசத்தால் வழக்கம்போல் பின்புறத்தில் ஏறி விட்டார். சண்பகம் அவர் பக்கத்தில் அமர்ந்தாள். கார் புறப்பட்டது.

இதற்குமுன் சண்பகத்தை அவர் இரண்டொரு முறை கவனித்திருந்தார். அவள் ஒரு ஏழைப் பிராம்மண

விதவை. எத்தனையோ கட்டுப்பாடுகளினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு தானகவே படித்து முன்னுக்கு வந்தவளென்று மனைவி சொன்ன ஞாபகம். மெலிந்து சிவந்த மேனியுடையவள்; கட்டழகி; கண்ணில் நல்ல களையுண்டு, வயது சுமார் 25-க்கு மேலிராது. ஜோடு அணிந்து நாசுக்கான உடை உடுத்திருந்தாள். இதற்கு மேல் அவளைப் பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. தம் அருகில் அவள் இருப்பது அவருக்கு வெட்கத்தையும் ஒருவித இன்ப உணர்ச்சியையும் அளித்தது. அவளிடம் சம்பாஷிக்க உத்தேசித்தும், இன்ன சொல்லுவதென்று தெரியாமல் சும்மா இருந்துவிட்டார். அவர்கள் அவ ளிருப்பிடம் வந்து சேர்ந்தார்கள்.

சண்பகம் வெகு மதுரமான குரலில், "நீங்கள் இப் படிப் போகலாமா? என் வீட்டில் தயவு செய்து கொஞ்சம் தேத்தண்ணீர் சாப்பிட்டு விட்டுப் போகக் கூடாதா?" என்றாள்.

அவள் பான்மை, மன்னனிடம் ஓர் ஏழைப் பிரஜை 'தன் குடிசையில் சற்று நேரம் தங்கவேண்டும்' என்று பிரார்த்திப்பது போலிருந்தது. இதைத் திரஸ்கரிக்க முடியாமல், அவர் 'அப்படியே ஆகட்டும்' என்று கீழே இறங்கினர். அவருக்கு நல்வரவு கூறி முன்னறையில் ஒரு நாற் காலியை இழுத்துப் போட்ட பின், சிற்றுண்டி எடுத்துவர, அவள் உள்ளே சென்றாள்.

அந்த அறை சிறியது; நாகரிகமாய் ஜோடித்திருந்தது. நடு மேஜைமேல் பளபளப்பான வெண்கலத்தாழியில் வெண்ணிறமும் செந்நிறமும் கலந்த அலரிப் புஷ்பங்களும் அலரித் தாள்களும் நிரப்பி வைத்திருந்தன. நாற்காலி களுக்கு அழகிய பூவேலை செய்த உறை போட்டிருந்தது. பொழுது போக்கும் பொருட்டு அவர் சுவரில் மாட்டி யிருந்த படங்களைக் கவனித்தார். அவை அநேகமாய்ச் சாதாரண தேசக் காட்சிப் படங்கள்; ஒன்று மட்டும் 'மைலோ'வில் செய்த 'வீனஸ்' சிலையின் படம்; ஒரு பாரிச மாய்ப் படம் எடுத்துச்சிறந்த சட்டத்தில் அமைத்திருந்தது.

காசிநாதையர் யாத்ரிகராக ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தபொழுது, உலகத்துக்கே அழகுத் தாயென்று வர்ணிக்கப்பட்ட இந்தச் சிலையைக் காண்பதற்காக மூன்று முறை 'பாரிஸ்' நகரத்துக்குப் போயிருந்தார். அப்படியும் அவருடைய ஆர்வம் முற்றிலும் தீரவில்லை. தாதி வேலை செய்யும் இந்த ஏழைப் பெண்ணுக்கு இவ்வளவு கலைப் பயிற்சி எங்கிருந்து வந்ததென்று அவர் அதிசயித்தார். படத்தைச் சட்டத்தினின்றும் கழற்றிப் பின்புறம் பார்த்திருந்தால், 'வீனஸுக்கு நிகரான அழகையுடைய சண்பகத்துக்கு, உன் ஆசை சலீம் அளித்தது' என்று எழுதியிருந்ததைக் கண்டிருப்பார். அப்படிச் செய்யாததினால் இந்தப் பெண்ணுக்கும் நமக்கும் ஆத்ம பந்த முண்டென்று அவர் அப்பொழுதே நிச்சயித்து விட்டார்.

சண்பகம் ஒரு தட்டில் தேத்தண்ணீரும் பக்ஷணங்களும் கொண்டு வந்து வைத்தாள். இருவரும் சிற்றுண்டி உண்ணலாயினர். சற்று நேரம் ஏதோ பொதுவாகச் சம்பாஷித்தார்கள். முதல் முதல் குழந்தை பேசக் கற்கும்பொழுது, அதன் அற்ப வார்த்தைகள் பெருங் காவியத்தைக் காட்டிலும் விந்தையாய் நம் செவிக்கெட்டுவதுபோல், சண்பகத்தின் சாமான்யப் பேச்சு அவருக்கு அருமையாகவும் அற்புதமாகவும் தோன்றிற்று.

"உங்கள் சொந்த ஊர் எதுவோ?" என்று அவர் கேட்டார்.

"எங்கள் ஊர் காஞ்சீபுரம். என்னை 'நீங்கள்' என்று சொன்னால் எனக்கு வெட்கமாக இருக்கிறது. ஏக வசனத்திலேயே பேசுங்கள்."

"நீ இங்கே தனியாகவா இருக்கிறாய்?"

"இல்லை. என் தாயார் என் கூட இருக்கிறாள். இப்பொழுது அவள் வெளியே போயிருக்கிறாள்."

"புருஷத்துணை யில்லாமல் உங்களுக்குப் பயமாக இல்லையா?"

சண்பகம் சிரித்தாள்.

"பயமென்ன? வீதியிலேதானே குடி யிருக்கிறோம். வேண்டி யிருந்தால், அண்டை வீட்டுக் கிழவர் எங்களுக்கு ஒத்தாசை செய்வார்."

கிழவர் என்று சொன்னது அவருக்குச் சமாதானமாக இருந்தது.

"நீ தனியே படித்து முன்னுக்கு வந்தாயென்று கேள்விப்பட்டேன்."

"நான் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறேன். ஒரு காலத்தில் நாங்கள் நல்ல ஸ்திதியில் இருந்தோம். ஆனால் அதைப்பற்றி யெல்லாம் நினைப்பதில் லாபமில்லை. இப்பொழுது நான் சந்தோஷமாகவே இருக்கிறேன்."

சாதாரணப் பெண்கள் இந்த 'ஒரு காலத்தை'ப் பற்றி எவ்வளவு விவரித்திருப்பார்கள். "என்ன அடக்கம்! என்ன மனோதைர்யம் இவளுக்கு!" என்று அவர் வியப்புற்றார்.

"உனக்கு நல்ல வரும்படி வருகிறதா?"

"சொல்ல முடியாது. என் வேலை கடினமானது. கஷ்டநஷ்டம் தெரிந்தவர்கள் நல்ல கூலி கொடுப்பார்கள். சில வேளைகளில், ஏழைகளாயிருந்தால், கையிலிருந்தே செலவுபண்ண வேண்டியிருக்கும்."

இவளுடைய தயாளகுணத்தை அறிந்த அநேகர் இவளை ஏமாற்றி விடுவார்களென்பதிற் சந்தேகமில்லை; காமாக்ஷி தக்க சம்பளம் கொடுத்தாளோ என்று அவர் நடுங்கினார்.

பேச்சைத் திருப்புவதற்காக, "இந்தப் படம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது?" என்று வீனஸ் படத்தைச் சுட்டிக்காட்டினார்.

"ஓ, அதா—அதை—நான் ஒரு கடையில் வாங்கினேன். அது எனக்கு ரொம்பப் பிரியமான படம்."

"நான் பாரிஸ் நகரத்தில் அந்தச் சிலையை நேரில் பார்த்திருக்கிறேன், தெரியுமா?" இதைச் சற்று இறுமாப்புடன் சொன்னார் அவர்.

"நீங்கள் அதிர்ஷ்டசாலி."

உடனேயே அவர் வருத்தப்பட்டார். அவளைத் தக்ஷணமே பாரிஸுக்கு அழைத்துப்போய், அச்சிலை அளிக்கும் காட்சியை இருவரும் அனுபவிக்கவேண்டுமென்று தோன்றிற்று.

"நேற்று உன்னை எனக்குத் தெரியாது; என்னை உனக்குத் தெரியாது. இதற்குள் நாம் எவ்வளவு சிநேகமாய்விட்டோம்!"

"உங்களைப் பற்றி நான் எவ்வளவோ கேட்டிருக்கிறேன்; அடிக்கடி பார்த்தும் இருக்கிறேன்; பேசத் தான் இல்லை."

வெகு நாட்களாக, இவள் நம்மை இரகசியமாக நேசித்திருக்கவேண்டுமென்று அவர் நிச்சயித்தார்.

பிறகு ஒரு அசட்டுச் சிரிப்புடன்,

"எனக்கு இதைச் சொல்லவே வெட்கமாயிருக்கிறது. உன் பெயர் என்னவென்று மறந்துவிட்டேன்" என்றார்.

"என் பெயர் சண்பகம். 'சண்பூ' என்று கூப்பிடுவார்கள்."

"நான் உன்னை லலிதா என்று கூப்பிடட்டுமா?"

"லலிதாவா—எதற்காக லலிதா?"

"அதுதான் உனக்குத் தகுந்த பெயர்—லலிதா"

வாயுவேகம் மனோவேகம் என்று சொல்லுவார்கள். மனத்தைவிட வேகம் ஏது?

"உன்னைப் போன்ற படம் என் வீட்டிலிருக்கிறது; அதை ஒருநாள் உனக்குக் காண்பிப்பேன்."

"லலிதா, என்னை நீ மணப்பாயா?" என்று கேட்டால், அவள் மறுக்க மாட்டாள். இக்காலத்தில் இரண்டு மனைவிகளைக்கொண்டு குடும்ப சம்ரக்ஷணை செய்வது சகஜமாய் விட்டது. சில நண்பர்களே இப்படிச் செய்திருக்கிறார்கள். இதனால் அவர்களை உலகம் நிந்திக்கவில்லை; அவர்கள் முன்னிலும் கண்ணிய பதவியில்தான் இருக்கிறார்கள்.

காமாக்ஷியோ — காமாக்ஷிக்கு என்ன நிகழ்ந்தாலும் சமாளித்துக் கொள்ளும் சுபாவம் உண்டு. லலிதா காமாக்ஷியின் கர்வத்தை அடக்கிவிடுவாள். 'தாத்தா' என்று அழைத்தாளல்லவா? செருக்கி!' இப்படியெல்லாம் காசிநாதையர் எண்ணினார்.

சண்பகம் "என்ன யோசனை செய்கிறீர்கள்?" என்று வினவினாள். அவர் தூங்கிவிழித்தவர்போல் திடுக்கிட்டு "ஒன்றுமில்லை. நான்பத்து நாட்களாகத் தாத்தாவாகி விட்டேன்" என்றார்.

"நீங்கள் தாத்தாவா! உங்களைப் பார்த்தால் என் 'சின்ன அண்ணா' போலவே இருக்கிறது. அவன் இன்னும் கலாசாலையில்தான் படிக்கிறான்."

அவர் மனம் பூரித்துவிட்டது.

"அம்மா தான் கிழவி மாதிரி இருக்கிறார். அவருக்கும் உங்களுக்கும் கொஞ்சங்கூடப் பொருத்தமில்லை."

இன்று கானத்தில் அபஸ்வரம் தட்டிவிட்டது!

சண்பகம் அதை அறியாமலே, அவர் மௌனத்தைத் தப்பர்த்தம் பண்ணிக்கொண்டு, மேலும் "நீங்கள் இவ்வளவு படித்து நாகரிகமாக இருக்கிறீர்கள். அந்தம்மாள் சுத்த நாட்டுப்புறம். ஒன்றுமே தெரியவில்லை. நேற்று நான்—" என்று சொல்லும்பொழுது, அவர் விடைபெற்றுக் கொள்ளாமலே பளிச்சென்றெழுந்து, காரில் ஏறி, "மணி, பீச்சுக்கு ஓட்டு, சீக்கிரம் ஓட்டு" என்றார். கடற்கரையை அடைந்ததும், "அம்மாவிடம் நான் மெதுவாக நடந்து வருகிறேன் என்று சொல்லு. காரை வீட்டுக்குக் கொண்டு போகலாம்" என்று அவனை அனுப்பிவிட்டார்.

கடற்கரையில் ஏகாந்தமாய் அன்று நடந்த சம்பவங்களைப் பற்றி அவர் சிந்திக்கலானார். பெரிய விபத்தினின்றும் தப்பினோம் என்ற உணர்ச்சி அவர் சரீரம் முற்றிலும் பரவியது. சூழ்ச்சிக்காரி, ஓர் ஆடவனைத் தனிமையில் அழைத்து உபசரணை புரிந்தாள். பிறர் தன்னை உத்தமியென்று நினைக்கும்படித் தன் மருட்சியால்

மதியை மயக்க வல்லவள்; தர்மதேவதை போன்ற காமாக்ஷியைக் கேவலமான முறையில் பேசவும் துணிந்தாள். இன்று தாழ்மை அடையாமல் தப்பினது தெய்வ சங்கற்பம் என்று அவர் எண்ணினார்.

மனைவியிடம் இதைத் தெரிவிப்பதா, வேண்டாமா என்று நிர்ணயிக்க முடியவில்லை. அன்றொரு நாள் உண்மையை மறைத்துத் தந்தையாரிடம் மானபங்கமடைந்தது அவர் ஞாபகத்துக்கு வந்தது. இறுதியில் அவள் என்ன துயரப்பட்டாலும், தாம் என்ன சிறுமையடைந்தாலும், தமக்கு அவள் என்ன தண்டனை விதித்தாலும், காமாக்ஷியிடம் நடந்ததை ஒப்புக் கொள்வதே நலம் என்று நிச்சயித்தார். அவர் சற்று மனச்சஞ்சலம் அகன்று சாந்தியடைந்தார்.

காரை எடுத்துக் கொண்டு சுப்பிரமணியன் வீடு வந்து சேர்ந்தான். "அம்மா, ஐயா பீச்சிலிருந்து நடந்து வருவதாகச் சொன்னார். காரை அனுப்பிவிட்டார்" என்று சொன்னான். காமாக்ஷி அம்மாள் "அவர் ஸபாவுக்குப் போகவில்லையா?" என்று கேட்டாள்.

"போகவில்லை. முதலில் நர்ஸு வீட்டில் டீ சாப்பிட்டார். அங்கே ஒருமணிக் கூறு இருந்தார். பிறகு பீச்சுக்குப் போனார்."

தன் கணவர் சண்பகம் வீட்டில் தேத்தண்ணீர் சாப்பிட்டாரா? அங்கு ஒருமணி நேரம் அவர் என்ன செய்தார்? காமாக்ஷி அம்மாள் திகிலடைந்தாள்.

'ஆலகால விஷத்தையும் நம்பலாம்' என்பது ஸ்திரீகளை மட்டும் அடுக்குமோ?

"சரி, சாவியை ஆணியில் மாட்டி விட்டு நீ வீட்டுக்குப் போ" என்று அவனை அனுப்பிவிட்டு, தனிமையில் தோட்டத்திலிருக்கும் ஓர் ஆசனத்தில் அவள் அமர்ந்தாள்.

கன்னிதன்னைப் புணர்ந்தாலும்
புலவாதொழிவாய், கயற்கண்ணாய்!
மன்னுமாதர் பெருங்கற்பென்(று)
அறிந்தேன், வாழி காவேரி!

என்று இளங்கோவடிகள் பாடியிருக்கிறார்.

காமாக்ஷி அம்மாள் கற்பரசி; அன்றியும் இயற்கையறிவுள்ளவள். புலவாது ஒழிதல் கற்புமட்டுமல்ல, உசிதமும் கூடத்தான். இச்சமயத்தில் ஊடல் புரிந்தால் அவரைப் பலவந்தமாய்ச் சண்பகத்தின் வீட்டினுள் தள்ளுவது போலாகும் என்று அவள் புத்திக் கெட்டியது. குழப்பத்துக் கிடங் கொடாமல் அவரிடம் சர்வ சாதாரணமாக நடந்து கொள்ள வேண்டு மென்று தீர்மானித்தாள். சோர்ந்த மனதும் வாடிய முகமுமாய் அவள் அவர் வரவிற்காகக் காத்திருந்தாள்.

வீட்டுள் நுழையும்பொழுதே காசிநாதையர், "காமு, காமு, உன்னிடம் ஒரு சமாசாரம் பேச வேண்டும்" என்று சொல்லிக் கொண்டு வந்தார். அவரைக் கண்டதும் காமாக்ஷி அம்மாளின் உறுதியெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் எங்கோ பறந்தோடி விட்டது. துக்கம் நெஞ்சை அடைத்தது. அவரை இறுகத் தழுவி ஓலமிட்டு அழுதால் ஆறுதலாயிருக்குமோ வென்று எண்ணினாள். உடனேயே, "என்ன புத்தி ஹீனம்! இக் கோழைத்தனம் மோசத்தில் ஆழ்த்திவிடும்" என்று ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டு மெதுவாக உள்ளே வந்தாள். அவர் மறுபடியும் "காமு, நீ எங்கே இருக்கிறாய்?" என்று கூப்பிட்டார். "இதோ வந்து விட்டேன், அப்படி என்ன அவசர சமாசாரம்? சாப்பிட்டு விட்டுச் சாவகாசமாய்ப் பேசக் கூடாதா?" என்று ஒன்றுமறியாதவள் போல் அவள் நடித்தாள்.

"எனக்குப் பசியில்லை. அப்புறம் சாப்பிடலாம். இப்பொழுது என்னுடன் மேடைக்கு வா."

இருவரும் மாடிக்குச் சென்று ஒரு சோபாவின் மீது அமர்ந்தார்கள்.

காசிநாதையருக்குக் கதையை எப்படித் தொடங்குவதென்று திகைப்பாய் இருந்தது. சற்று ஆலோசனை செய்து, பிறகு,

"நான் இன்று எங்கே டீ சாப்பிட்டேன், சொல்லு, பார்ப்போம்" என்றார்.

"அகத்தில் சாப்பிடவில்லை, அது நிச்சயம். பின் எங்கே, ஸபாவில் தானே?"

"இல்லை, நான் இன்று ஸபாவுக்குப் போகவேயில்லை. சண்பகம் வீட்டில் டீ சாப்பிட்டேன்" என்று அவசரப் படாமல் அழுத்தந் திருத்தமாக அவர் சொன்னார்.

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டம்தானே!

"டீ நன்றாக இருந்ததா? அவள் டீயுடன் என்ன பலகாரம் கொடுத்தாள்?"

காசிநாதையர் கோபத்திற்கும் வசவுக்கும் அழுகைக்கும் தயாராகவே இருந்தார். ஆனால் இந்தக் கேள்வியை அவர் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. சற்று நிதானித்து,

"லட்டுவும் காரப்பூந்தியும் கொடுத்தாள்" என்றார்.

"அது லகுவாகப் பண்ணும் பலகாரம். பூந்தியைப் பாகிற்போட்டால் லட்டு, காரம் சேர்த்தால் காரப்பூந்தி" என்று காமாக்ஷி அம்மாள் விளக்கினாள்.

கதையை மேல் நடத்த அவருக்கு வகை தெரியவில்லை. கடைசியில், "காமு, நான் உன்னிடம் இன்று நடந்ததையெல்லாம் ஒளியாமற் சொல்லப் போகிறேன்" என்றார்.

"இன்று என்ன நடந்தது?" இதை அவள் நடுக்கத்துடன் கேட்டாள்.

இன்று என்ன நடந்தது? யோசித்துப் பார்த்தால், ஒன்றும் நடக்கவில்லை! வியப்பும், விருப்பமும், வெறுப்பும் கலந்த அந்த மகா நாடகம் அவர் உள்ளத்திலேதான் நடைபெற்றது. அதை வெளியிட அவசியமில்லை.

அவர் சிரித்தார்.

"டீ சாப்பிட்டபிறகு நானும் சண்பகமும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அவள் என்ன சொன்னாள், தெரியுமா?"

"சண்பகம் என்ன சொன்னாள்?"

"நான் அவளுடைய இளைய தமையனைப் போலவே இருக்கிறேனென்று சொன்னாள். அவன் கலாசாலையில் படிக்கும் ஒரு மாணாக்கன்! நீ என்னை வழுக்கைத் தலைத் தாத்தா என்று அழைத்தாயல்லவா?"

"வாஸ்தவமாக இதுதானா நடந்த சமாசாரம்?"

"சத்தியமாக, இதுதான் நடந்தது. அப்புறம் அவள் உன்னைப் பற்றி அலக்ஷியமாகப் பேசினாள். என்னால் அதைப் பொறுக்க முடியவில்லை. அவளிடம் சொல்லிக் கொள்ளாமலே எழுந்து பீச்சுக்குப் போய் விட்டேன்."

காமாக்ஷி அம்மாளின் மனதினின்றும் தாங்க முடியாத பாரம் நீங்கிற்று. அவள் அவருடைய தோளின்மேல் தலைசாய்ந்த வண்ணமாய் மெதுவாகச் சிரித்தாள். பிறகு,

"குழந்தையின் அழுகைக் குரல் கேட்கிறது. அவன் உங்களை அண்ணாவென்று கூப்பிடுகிறான். கீழே போகலாம், வாருங்கள்" என்றாள்.

"காமாக்ஷி! நீ எப்பேர்ப்பட்ட குறும்புக்காரி யென்று எனக்கு இது மட்டிலும் தெரியாமற் போய் விட்டதே!"

இருவரும் நகைத்துக் கொண்டு கீழே இறங்கினார்கள்.

இராவணனின் தினசரிக் குறிப்புகள்

[ஸ்ரீராம லக்ஷ்மணர்களும், ஸுக்ரீவன் ஹனுமான் முதலிய வானரத் தலைவர்களும், வானர ஸைந்யங்களுடன், ஸீதையை மீட்பதற்காக இலங்காபுரியை முற்றுகை போட்ட நாட்களில், இலங்கேசனாகிய இராவணன், நாளுக்கு நாள் நிகழும் சம்பவங்களை ஒரு தினசரிப் புத்தகத்தில், அதாவது 'டைரி'யில், குறித்துக்கொண்டு வந்தான். ராக்ஷஸர் குலம் மாய்ப் புசித்துவிடும் மனுஷ்ய வர்க்கத்தைச் சேர்ந்த (ராஜ்யமிழந்த) இரண்டு ராஜகுமாரரும், கல்லைவிட் டெறிந் தால் மரக்கிளைகளிலே தாவி ஓடிவிடும் குரங்குக் கூட்டங்

களும் அதிபராக்கிரமசாலியான தன்னை எள்ளளவும் அசைக்க முடியாது என்பது இராவணனின் திடமான நம்பிக்கை. இருந்தபோதிலும், ஸகல சாஸ்திரங்களையும் கற்றுத் தெளிந்தவனுதலால், 'அசாத்தியம் என்று பிரபஞ்சத்தில் ஒன்று இல்லை. எது எப்படி நேரும் என்று சொல்ல ஒருவராலும் ஆகாது' என்பதை அறிந்து, தனக்குப் போர்க் களத்தில் மரணம் ஸம்பவித்தாலும், தன் மனுேபாவத்தையும் செய்கைகளையும் பிறருக்கு விளக்கிக் காட்டி, தன் புகழ் டம்பையேனும் காப்பாற்றும் வண்ணம் இந்தக் குறிப்புக் களைச் சிரத்தையுடன் ஏடுகளில் எழுதுவித்து வந்தான். ஸாயங்கால வேளைகளில் தனிமையாகத் தோட்டத்தில் உலவி வரும்போது, இராவணன் இந்தக் குறிப்புக்களை அப்படியே, பொருள் மயக்கம், இலக்கணவழு முதலியன இன்றி உச்சரிப்பது வழக்கம். அவன் அந்தரங்கக் காரிய தரிசியான வஜ்ரதான் என்ற இராக்ஷஸன், உடனே மை தீட்டிய வைர முனைக் கோலால் தந்த ஏடுகளின்மீது சொற்களை நறுக்கி எழுதுவான். ஆயிரம் ஏடுகள் எழுதியானதும், அவற்றை ஸ்வர்ணத் தகடுகளைக்கொண்டு கட்டுவித்துப் புத்தகமாக்கிவந்தார்கள். இவ்வாறு பல புத்தகங்கள் குவிந்து, இராவணனின் சயனக் கிருஹத்தில் சந்தன மர மேஜையொன்றின்மீது கிடந்தன. இராவண வதையின் பின், விபீஷணன் தன் பட்டாபிஷேகத்திற்கு மறுநாள் இவைகளைக் கண்டெடுத்துப் புரட்டிப் பார்த்தான். இவை வெளிப்பட்டால், உலகத்தில் தர்ம சிந்தனையே கலங்கிப் போய்விடுமென்று பயந்து, விபீஷணன், ஏட்டுப் புத்தகங் களைப் பெரிய வெள்ளிக்குடமொன்றில் போட்டு, தோட் டத்தில் ஒரு மூலையில், ஒரு ராக்ஷஸன் ஆழத்திற்குக் குழி வெட்டி, அதிற் புதைத்துவிட்டான். ஆயிரமாயிரம் நூற் றண்டுகள் கழிந்தபின்பு, ஸமீபத்தில் சரித்திர ஆராய்ச்சி நிபுணரான ப்ரொபெஸர் ஸத்யசீலா என்பவர், இலங்கைத் தீவில் 'அலுவிஹாரா' என்ற ஸ்தலத்தில், அகஸ்மாத்தாக இந்தக் குடத்தைக் கண்டெடுத்தார். பல ஏடுகளில் அக்ஷரங் கள் காலப் போக்கால் அழிந்துபோயினவாயினும், பிராகிருத பாஷையிலுள்ள இந்த நூலின் சில பகுதிகளை, ப்ரொ பெஸர் ஸத்யசீலா விடா முயற்சியால் கூட்டி வாசித்துப்

பொருளாராய்ந்து தம் ஆராய்ச்சிகளை, "இராவணனும் அவன் காலமும்" என்ற நூலின்முகமாக வெளியிட்டிருக்கிறார். இங்கே பின்வருவது 1002-ம் ஏட்டினின்று தொடர்ச்சியாகச் சில ஏடுகளிற் காணப்படும் விஷயம். இதைப் பிரசுரிப்பதற்கு, பொரபெஸர் ஸத்யசீலா அனுமதி யளித்ததற்கு நன்றி பாராட்டுகிறோம்.]

"இன்று காலையில் எழுந்ததும், ஸீதாவின் ஸ்திதியையும், ஸௌகர்யங்களையும் பற்றி விசாரித்தேன். காதம்பரியைக் கேட்டதில், தற்போது ஸீதா அவ்வளவு வியாகுலமாக இல்லை யென்றும், நேற்றுத் தன்னுடன் 'பல்லாங்குழி' விளையாடினாளென்றும், அசோக வனத்தில் இரவில் அவளுக்குக் காற்றுப் போதுமானபடி வருவதில்லை யென்பது தன் அபிப்பிராயம் என்றும் கூறினாள். உடனே புதிதாக ஸீதைக்கென்று கட்டப்பட்ட பளிங்கு மாளிகையின் பின்புறமாக அடர்ந்து வளர்ந்திருக்கும் சில மரங்களை வீழ்த்தி, காற்றுப் பிரவேசிக்கக்கூடிய வெளியை உண்டுபண்ணினேன். ஸீதையின் உபயோகத்திற்காகப் புதிதாக ஸ்நான உல்லாஸ மண்டபங்களும் வனத்தில் கட்டி முடிந்தன. அவள் காலப்போக்கான விளையாட்டுக்களில் மறுபடியும் புத்தியைச் செலுத்துவது எனக்கு பெருமகிழ்ச்சியென்றே கூறவேண்டும். 'என் விஷயத்தில் அவள் மனோ நிலை என்று மாறுமோ?' என்று நான் ஏங்குவது ஈசுவரனுக்குத் தெரியும்!

ஸீதையை இன்னும் வனத்தில் வைத்திருப்பது உசிதமில்லைத் தான். ஆனால் அரண்மனைக்குள் அழைக்கும் பக்ஷத்தில் பெருங்கலகமே நேரிடுவது நிச்சயம். ஏற்கெனவே, காதம்பரி, மாலதி, ஸுபத்ரா, மண்டோதரி எல்லாரும் அவள் சார்பாகப் பேசுகிறார்கள். தாதிமுதல் பட்டமஹிஷிவரை, ஸீதாவைப் புகழ்வது, அவளுக்குப் பரிந்து பேசுவது, இவைகளே இவர்கள் வேலை.

மண்டோதரி முந்தின நாள் என்னிடம் வந்து ராமனின் பிரிவாற்றுமையால் ஸீதா மிகவும் மெலிந்து விட்டதாகவும், இனி ஒருக்ஷணமேனும் அவளைச் சிறை

8—5

வைத்தால், நான் ஸ்திரீ ஹத்தி-பாவத்திற்கு உள்ளாகக் கூடுமென்றும், உடனே அவளை ஸர்வ மரியாதைகளுடனும் ராமனிடம் திருப்பி அனுப்பிவிட்டு, அவனோடு ஸமாதானஞ் செய்துகொள்ளும்படியும் புத்தி கூறலானாள்! அவள் பிரஸங்கத்தை அடக்குவது பெரும்பாடாகி விட்டது! என் குறைதிசயங்களைப் பற்றிச் சிறிதேனும் அவளிடம் பிரஸ்தாபம் செய்து, அவள் மனத்தை என் வசமாக்குவதற்கு, நான் நம்பத்தக்க பெண் ஒருத்திகூடக் கிடைக்கவில்லையே!

இன்று மாலையில், ஸேனைகளின் நியமனங்களெல்லாம் ஆன பின்பு, சிற்றுண்டி வேளை கழிந்ததும், ஸீதையைப் பார்த்துப் பத்து நிமிஷம் பேசலாமாவென்று கேட்டுவர ஸுமங்கலியை யனுப்பினேன். போனவள், அரைமணி ஒருமணி நேரமான பின்பும் திரும்பவில்லை. த்ரிலோகத்திலும் கியாதிபெற்ற மஹாராஜனாகிய நான், என் சிறையாளியாகிய ஒரு மானிடப் பெண்ணைப் பார்த்துப் பேச ஒருமணி நேரம் காத்திருப்பது என்ன அஸந்தர்ப்பம்! தேவர்கள், மஹரிஷிகள் கேட்டால் எப்படிச் சிரித்துக் கீழே விழுவார்கள்! தூது சென்ற ஸுமங்கலியை மீட்டு வரப் பணியாள் ஒருவனை அனுப்பினேன். இவ்வளவும் நடந்தபிறகு, ஸுமங்கலி வந்து நமஸ்காரம் செய்து தன்னை க்ஷமிக்கவேண்டுமென்றும், ராமர் சிவதனுஸை முறித்துத் தன்னை விவாஹம் செய்துகொண்ட பிரஸ்தாபத்தை ஸீதை தொடங்கியதாகவும், ஸுமங்கலி, ஸுஜாதை, காதம்பரி எல்லாரும் கதையில் ஈடுபட்டுக் கேட்டுக்கொண்டிருந்ததாகவும், கதை ஒருபாடாய் முடிந்தபின்புதான் தன் தூதே தனக்கு ஞாபகம் வந்ததாகவும் கூறினாள். "சரி, போனது போகட்டும், ஸீதா என்ன விடை யளித்தாள்?" என்று கேட்டதில், தனக்கு ஸ்வதந்திரமில்லாத விஷயத்தில் தன் அபிப்பிராயத்தை அறிவது அனுவசியமென்றும், தனக்கு ஓரளவேனும் ஸ்வதந்திர மிருப்பதாகப் பாவித்தால், உடனே தன் பர்த்தாவாகிய ஸ்ரீராமசந்திரனிடம் தன்னைச் சேர்ப்பித்து அந்த உரிமையை ருஜுப்படுத்த வேண்டுமென்றும்,

விடை பகர்ந்ததாகத் தெரிந்தது. இனிமேல் உபசாரங்களில் காலம் செலவழிப்பது வியர்த்தம். மேல் நடப்பதைக் கவனிப்போமென்று தீர்மானம் செய்துகொண்டு ஸுமங்கலியுடன் வனத்தை நோக்கிப் புறப்பட்டேன்.

நாங்கள் வஸந்த மாளிகையுள் பிரவேசித்தபொழுது, ஸீதா ஊஞ்சலின்மீது உட்கார்ந்து மெதுவாக ஆடியபடியே, மெல்லிய குரலில் தனக்குத்தானே பாடிக்கொண்டிருந்தாள். ராமரைப் பிரிந்த வாட்டத்திலும், அவள் ஸௌந்தர்யமானது மனத்தைப் பறிகொள்ளும் மஹாசக்தி ஸ்வரூபமாகச் சோபித்தது. அவளை நான் கண்டதும், என் நெஞ்சில் காமன் இட்ட கடுமையான நெருப்பு மீண்டும் தகிக்கலாயிற்று. சில வேளைகளில், 'நமக்கு அவள் அனுக்ரஹம் பெறுவதோ ஸாத்யமில்லை, அவளை அவள் மனோபீஷ்டப்படி ராமனிடம் ஒப்பிவித்து, எள்ளளவேனும், அவள் புன்சிரிப்பையும், ஆதரவையும், நன்றியையுங் கொள்வது பாக்கியமல்லவா?' என்ற புத்தியும் தட்டுகிறது. நான் அவளைச் சிறைகொண்டது அநீதியுமில்லை, அதர்மமுமில்லை; தவிரவும், அவளை நான் எவ்வாறேனும் துன்புறுத்தவாவது, நிர்ப்பந்திக்கவாவது இல்லை என்ற இவ்வுணர்ச்சிகள் என் மனத்தில் பதிந்திராவிடின், ஸமாதானத்திற்கென்று நாளுக்குநாள் காத்திருக்கும் ராமலக்ஷ்மணர்களிடம் அவளை அன்றே ஒப்புவித்திருக்கக்கூடும். இன்று அவளிடம் சில விஷயங்களை விவரிக்கப் போவதாகவும், கவனித்துக் கேட்கும்படி பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தேன். அவள் முன்போல் என்னிடம் உக்ரமாகப் பேசாமல், ஒருவாறு சாந்தமா யிருந்ததைப் பெரிய நற்குறியாகப் பாராட்டுகிறேன். முன்பு, அவளைச் சிறையெடுத்த மூன்றாம் நாள், வனத்தில் அவளுடன் பேசத் தொடங்கிய ஸந்தர்ப்பத்தில், ஜனகராஜனது அந்தப்புரத்தில் செல்வப் பெண்ணாக வளர்ந்த ராஜகுமாரிக்கு இத்தனை வசைச்சொற்கள் எவ்வாறு பழக்கமாயிருந்தன என்று திகைத்துப் போனதை ஒரு நாளும் மறவேன். அரண்ய வாஸத்தில் ஏதாவது அரக்கியர் ஸஹவாஸமுண்டோ என்றுகூடச்

சமுசயம் உண்டாயிற்று. அது நிற்க. என் வேண்டு கோளுக்கு உத்தரமாக ஸீதா தலையசைத்தபின், அவள் தேக ஸ்திதி ஸௌகர்யங்களைக் குறித்து, மிக அன்பாகவும், ஆதரவுடனும் விசாரித்தேன். பதிலொன்று மில்லை. ஒருவாறாக எண்ணங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டு, தாத்பர்ய நிலையை அவளிடம் பின்வருமாறு வெளியிடலானேன் :—

"ஸீதா, நான் சொல்லப் புகுவது கடினமான விஷயமன்று. ஆயினும், நீ, ஸ்திரீகளுக்கு ஸ்வபாவமான பரபரப்பு, அறிவதன் முன் ஏளனம், ஒன்றை விட்டொன்று பற்றல் முதலிய மனச்சேஷ்டைகளை விலக்கித் தயவு செய்து கவனிக்க வேண்டும். நீ யுவதியாக இருப்பதாலும், ஸந்தர்ப்ப காரணங்களாலும், அதிகமாகப் படித்தவளில்லை. தர்ம சாஸ்திரங்களைக் குறித்து ஏதோ அங்குமிங்கும் ரிஷிபத்னிகளிடமிருந்து அரைகுறையாக, பிழை மலிந்த, சிலவற்றைக் கேட்டிருக்கக்கூடும். நான் கர்வியல்லன் என்பது உனக்குத் தெரியும். ஆனால் கேவலம் ஸத்யமென்னவென்றால், த்ரிலோகங்களிலும் எனக்கு வசப்படாத வித்தை யில்லை; நான் கற்றுக் கரை காணாத சாஸ்திரமில்லை. கௌசிகர், வசிஷ்டர், கௌதமர் முதலிய ரிஷிகளுக்கு என்மீதுள்ள பொறாமைக்கு இதுதான் முக்கிய காரணம். உன் விஷயத்தில், என் நடத்தை, நல்ல ஹேதுக்களுடன் கூடியதாகவும் சாஸ்திரப் பிரமாண ரீதியாகவுமுள்ளது; அக்கிரம - அதர்ம - தோஷக் கலப்பு இல்லாதது.

"நீ க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்து, க்ஷத்திரிய ராஜ குமாரனுக்கு விவாஹமானவள். அதாவது, க்ஷத்திரிய தர்மத்திற்கு உட்பட்டவள். இதை உன்னால் மறுக்க முடியாது. க்ஷத்திரியருள் ஒரு வகுப்பினராகிய எங்களுக்கும், உங்களுக்கும் குல தர்மம் ஒன்றுதான். க்ஷத்திரிய வமிசங்களில், பட்டத்திற்கு வந்த ராஜாக்களுள் ஏகபத்தினி விரதமே அனுஸரிப்பது கிடையாதென்பது நீ நன்கறிந்த விஷயம். மஹா நிபுணரும் கீர்த்தி பெற்றவரு

மான உன் தந்தை, ஜனகர், பன்னிரண்டு பத்தினிகளுடன் இல்லறம் நடத்தி ராஜ்ய பரிபாலனம் செய்ததும், உன் மாமனாராகிய தசரதர் கௌசல்யா, கைகேயி, ஸுமித்திரை முதலியவர்களை மணந்ததும், உன்னுடைய அனுபவத்திலேயே தெரிந்தவை. உன் பர்த்தாவாகிய ராமசந்திரரும் பட்டம் சூட்டப் பெற்றிருந்தால், மோஹன புருஷராதலால், பல பல ராஜ கன்னியரை மணந்திருப்பாரென்பதில் ஸந்தேஹமில்லை: மகுடமிழந்து அரண்யவாஸம் ஸம்பவித்த பிறகு, வேறு பெண்களை மணம் செய்துகொள்ள அவருக்குச் சாஸ்திர உரிமையில்லாமல் போய்விட்டது. என் தங்கையாகிய சூர்ப்பணகை அவர் மீது மோஹித்ததை நீ நன்கறிவாய். அந்த ஸம்பவம் கடைசியில் மனஸ்தாபகரமாய் முடிந்தது. தொடக்கத்தில் தர்க்கம் நிகழ்ந்தபோது, அவளை விவாகம் செய்துகொள்ளத் தனக்கு ஸ்வதந்திரமில்லை யென்று, நான் மேற்கூறிய சாஸ்திர தத்துவத்தை, ராமரும் எடுத்துச் சொன்னதாக அவளே என்னிடம் தெரிவித்தாள்.

"சாவதானமாய்க் கேள். முழுவதும் எடுத்துக் காட்டுமுன் என்னிடம் கோபித்துக் கொள்ளக் கூடாது. சூர்ப்பணகை விஷயத்தை நிதர்சனமாகவே கூறினேன். முக்கிய மென்ன வென்றால், கன்னியரையே மணம் புரிவதென்ற ஏற்பாடு ஏக பத்தினி விரதங் கொண்ட பிராம்மணருள் அனுசாரம்: அது நமது குல விவாஹ சந்தர்ப்பங்களுக்கு ஒத்து வராது. இது பற்றியே, யுத்தத்தில் அபஜயமடைந்த ராஜரின் பத்தினியாரை அனுமதியுடன் மணம் செய்து கொள்ளலாமென்று நமது தர்மசாஸ்திரத்தில் பெரியோர் ஸ்பஷ்டமாக அதிகாரம் காட்டியிருக்கிறார்கள். ஸமீபத்தில் வாலி யென்ற வனராஜன், இவ்வாறே, அபஜயமடைந்த ஸுக்ரீவனின் பத்தினியை மணந்தான். வாலியைத் தங்கள் காரிய சித்தியின் பொருட்டுத் தர்ம விரோதமாகவும் கபடமாகவும் கொன்ற உன் பர்த்தாவும் ஸுக்ரீவனும், இந்த விஷயத்தில் அவன் மஹா பாபிஷ்டனென்று பிராம்மண குலாசாரத்தைப் பின்

பற்றிப் பொருத்தமின்றி ஓதுகிறுர்கள். தவிரவும், எவ் வித தோஷத்தினுலாவது, பராக்கிரமக் குறைவினுலாவது, ஒரு ராஜ குமாரன் பட்ட உரிமையையும், ராஜ்யத்தையும் இழந்து, க்ஷத்திரியத் தன்மையைக் கைவிட்டவனுனுல், அவன் பத்தினியை க்ஷத்திரிய தர்ம பரிபாலனம் செய்யும் அரசன் எவனும் மணக்கக்கூடும். அவள் நல்ல வமிசத்தில் பிறந்த உத்தமியாக இருந்தால், அவ்வாறு அவளை மணந்து, அவளை ரக்ஷிக்கும் ஸாமர்த்தியமில்லாத பர்த்தா விடமிருந்து காப்பாற்றுவது ராஜாவின் பெருங் கடமை யென்றே சொல்ல வேண்டும். உன்மீது நான் தெய்விக மான காதல் செலுத்துகிறேன் என்பது ஒரு புறம் இருக் கட்டும்; ஜனக ராஜனின் புத்திரியும் மஹா ஸுந்தரியு மான ஸீதா என்பவள், ராஜ்யமிழந்து பரதேசிக் கோலம் பூண்ட பர்த்தாவுடன் பரிதாபகரமாய் அரண்யவாஸம் புரிகிருள் என்பதை நான் கேட்ட தினமே, 'ஆஹா! மகிமை தங்கிய குலமன்ருே நாசமடைந்து விட்டது. இந்த விஷ யத்தில் சக்ரவர்த்தியான நாமே, கையாலாகாமல் நாடோடி யாய்த் திரியும் ராமனிடமிருந்து அந்தப் பெண்ணைக் காப் பாற்றி, மணந்து ரக்ஷிக்கவேண்டும்' என்று கங்கணங் கட்டிக்கொண்டேன். நான் உன்னைச் சிறை யெடுக்கா விட்டால், வாலியோ, ஸுக்ரீவனே, வேறு சிற்றரசன் எவனே, ஸமயம் பார்த்துச் சிறை யெடுத்திருப்பான் என் பதில் ஸந்தேகமில்லை. என் கியாதியையும், புருஷ லக்ஷணங்களையும் ஒரு புறம் தள்ளு. அவ்வாறு, உன்னைக் கைப்பற்றியவன், என்னைப்போல, பொறுமையுடனும், அன்புடனும், உன் இகழ்ச்சி - மொழிகளைப் பொருட் படுத்தாமலும், உன்னை நிர்ப்பந்திக்காமலும், காதல் வளர்ச்சியை எதிர் நோக்கி யிருப்பானென்று நம்பு கிருயா?..."

இதற்குள் ஸீதா, "தர்ம சாஸ்திரங்களில் எதுவும் எனக்குத் தெரியாது. பிராணனைவிடப் பதிவிரதம் மேலென்பதுதான் தெரியும். ஆனுல் என் பர்த்தாவை அசக்தனென்றும், மகுடமிழந்தவனென்றும் நிந்திக்கும் நீர், ஏன் கபட ஸந்யாஸி வேஷம் பூண்டு, என் பர்த்தாவும்,

லக்ஷ்மணரும் காவலில்லாத சமயத்தில் என்னை அபகரிக்க வேண்டும்?'' என்று கேட்டாள்.

விடை கூறலானேன்: "நீ கேட்ட கேள்வியின் ஸாமர்த்தியத்தை மெச்சுகிறேன். ஆனால், சில விவரங்கள் தெரிந்திருந்தால் நீ இவ்வாறு கேட்கமாட்டாய். கைலாஸ கிரியைத் துணிந்து மேலெடுத்த எனக்கு, ஏதோ அஸ்திர வித்தையில் ஓரிரண்டு பிரயோகங்கள் தெரிந்த உன் பர்த்தாவிடமாவது, இளம் பிள்ளையான லக்ஷ்மணனிடமாவது, பயமென்று நீ உண்மையில் நினைக்கலாமா? இன்றைக்கு அவ்விருவரும், ஸஹாயத்திற்கு இருபதினாயிரம் வெள்ளம் வானர ஸைந்யங்களுடன், என்னை எதிர்ப்பதைக் குறித்து என் முகத்தில் கவலைக்குறி ஒன்றேனுமுண்டோ? இந்திரஜித்தனே ஒரு கலக்குக் கலக்கிவிடும் ராம லக்ஷ்மணர்களை, நான் அஞ்சுவதென்பது ஹாஸ்ய விஷயமன்றோ? அன்று, அன்று; காரணங்கள் வேறு; நேர் யுத்தமாக உன்னை அபகரிக்க முயன்றால், ராம லக்ஷ்மணர் இருவருக்கும், அல்லது இருவருள் ஒருவருக்காவது திடமாய், என் வீர பராக்கிரமத்தால் மரணம் சம்பவிக்கும். லக்ஷ்மணனுக்கு ஸம்பவித்தாலும், இளகிய மனமுடைய ராமன் தற்கொலை புரிந்து கொள்வது நிச்சயம். எப்படி யோசித்தாலும் உனக்கு வைதவ்யம் ஏற்படக் கூடுமென்று பயந்தேன். அவ்வாறானால், அந்த ஸ்திதியில் உன்னைப் பட்டமஹிஷியாக என்னால் மணம் செய்துகொள்ள முடியாது. அது சாஸ்திரோக்தமில்லை. ஸகலமும் தீர்க்காலோசனையின் பின்பும், உன் நலத்தை உத்தேசித்துமே நடைபெற்றன.

"நேரமானபடியால் நான் விடை பெறுகிறேன். நீ இளம்பெண்ணாயிருப்பதனாலும், உன்னைவிட அனுபவத்திலும் ஞானத்திலும் நான் மிக்க முதிர்ந்தவனாதலாலும், இறுதியில் புத்திமதியாக ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இந்த ஸாஹஸம் உனக்கு அடாது.

"குணங்களிலும், வீரத்திலும், வடிவழகிலும், நான் ராமனுக்குத் தாழ்ந்தவனில்லை. புகழிலும், பதவியிலும்

இருவரையும் ஒப்பிடவே இடமில்லை. தவிரவும், உன்னை அநீதியாகவாவது அதர்மமாகவாவது ஒன்றுக்கும் நான் தூண்டவில்லை. உன் கௌரவத்தைக் குறைக்க என் மனம் துணியாது.—'ஸுமங்கலி, நீ இங்கேயே யிருந்து ஸீதாவின் ஸௌகர்யங்களைக் கவனித்து விட்டுப் பிறகு என்னை வந்து பார்க்க வேண்டும்.'—ஸீதா, நான் போய் வருகிறேன். விஷயங்களை நீ மெதுவாக ஆலோசனை செய்து கொள்ளலாம்." இவ்வாறு முடித்துவிட்டு, ஸபா மண்டபத்திற்குத் திரும்பினேன். சிறிது நேரமான பின் ஸுமங்கலி வந்து சேர்ந்தாள். "ஸீதா ஏதாவது அபிப்பிராயம் வெளியிட்டாளா?" என்று ஆவலாய் விசாரித்தேன்.

நான் போன பின்பு, ஸீதாவைப் பார்க்க மண்டோதரியும் வஸந்தஸேனையும் வந்ததாகவும், ஸீதா அவர்களிடம் என் பிரஸங்கத்தின் ஸாராம்சத்தை எடுத்துச் சொல்லி, நான் க்ஷத்ரிய தர்மம் என்று போதித்ததெல்லாம் சுத்த மோசமென்றும், ராமலக்ஷ்மணருக்குப் பயந்தே சந்யாஸிக் கோலம் தரித்து அவளை அபகரித்ததாகவும் அபிப்பிராயப் பட்டாளென்றும், மண்டோதரியும் வஸந்தஸேனையும் வழக்கம்போல் ஒத்துப் பாடியதாகவும் ஸுமங்கலி சமாசாரம் வெளியிட்டாள்.

ராமலக்ஷ்மணரை வென்று, கயிறுகளால் என் ரதத்திற் கட்டி, லங்கையை வலம் வரலாம். வானர ஸேனைகளை உருவழித்து, அப்படியே கடலில் அமிழ்த்தி விடலாம். அஸாத்யமானதை யெல்லாம் ஸாத்யமாக்கலாம். இந்த அசட்டுப் பெண்ணுக்குப் புத்தி புகட்டுவதோ, ஆகுங் காரியமாகத் தோன்றவில்லை!

சித்திரா பௌர்ணமி

அன்று சித்திரா பௌர்ணமி. எங்கள் அண்டை அயல் வீட்டுப் பாட்டிமார் எல்லோரும், எங்கள் வீட்டு முன்கட்டில் வந்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். என் நாத்தனார் 'சித்திரை புத்திரன்' பாட்டுச் சொல்வதைக் கேட்க, அவர்கள் வந்திருந்தார்கள். அது சொல்லி முடிந்ததும், பாகீரதிப்பாட்டி, பாவ புண்ணிய கர்மங்களைப் பற்றி பேச ஆரம்பித்தாள்.

பாகீரதி :—ஆமாம், குப்பம்மா! (அது தான் என் நாத்தனார் பெயர்) நாம் இந்த ஜன்மத்தில் செய்யும் தான தருமங்கள் தான் நமக்குப் பின்னால் பிரயோஜனப்படும். யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன், ஏதோ ஒரு பாட்டில் : 'செத்த பின், பெண்டுகளும் வாசல் மட்டே, பிள்ளையும் சுடுகாடு மட்டே. அதற்குப் பின்னால் நம் கூட யார் வருவார்கள்? நல்லதோ, கெட்டதோ, நாம் செய்த பாவ புண்ணியங்கள் தான் நம்மோடு கூட வரும்.'

என் நாத்தனார் :—ஆமாம், பாட்டி; ஆனால், கலி முற்றிப் போச்சு. இந்த நாளில் செத்த பிறகு இன்னொரு ஜன்மம் உண்டென்று யார் நினைக்கிறார்கள்? அவரவர் சக்திக்குத் தகுந்தபடி, ஏதோ தான தருமம் பண்ணி, புண்ணியம் சேர்க்கவேணும். ஏன் பாட்டி, நீர் நோன்புக்கு நவதானியம் எவ்வளவு கொடுத்தீர்? நான் ஒவ்வொன்றிலும் கால் படிக்கு மேலேயே கொடுத்தேன்.

பாகீரதி :—உனக்கென்னம்மா, மகராஜி! பிள்ளையில்லாமல் போனாலும், இன்று கண்டதற்கு, தம்பி சம்பாதிக்கிறான், வேண்டியது செய்யலாம். நான் என்னவோ, என் கையில் கிடைத்தது, ஒவ்வொரு வகையிலும் ஒரு பிடித்த பிடி வைத்துக் கொடுத்தேன். குப்பம்மா! நீ எல்லா விரதங்களும் எடுத்திருக்கிறாயே, தீப தானம் ஒன்று செய்யக் கூடாதா? அமாவாசைதோறும் ஒரு பிராம்மணனைக் கூப்பிட்டு, நெய்த் தீபம் போட்டு, தீப பூஜை செய்து, அந்தத் தீபத்தை தானம் செய்து விடுகிறது.

அப்படி ஒரு வருஷம் செய்தால், நாம் போகிறபோது, வழியில் இருட்டு இராதாம். அந்த விளக்கு நமக்கு அப்பொழுது வெளிச்சம் கொடுக்குமாம். இன்னும் ஒன்று; அக்ஷய திரிதியையன்றுமுதல் ஒரு மாஸம், தினமும், அக்ஷய திரிதியையன்றைக்குக் கொடுப்பது போல, ஒரு புதுத் துணியில் தயிர்ச் சாதம் பிசைந்து கட்டி, ஒரு குடை, ஒரு விசிறி, ஒரு பாதரக்ஷை, ஒரு தீர்த்த பாத்திரம், இவ்வளவும் ஒரு பிராம்மணனுக்கு வடை பாயஸத்துடன் சாதம் போட்டுத் தானம் பண்ணினால், நாம் பின்னால் போகும் வழியில், பசி, தாகம், வெயில் என்கிற ஒருவித பாதையும் இராது. நீ கட்டாயம் இந்த இரண்டு மட்டும் செய், எவ்வளவோ புண்ணியம்.

என் நாத்தனார் :—அதற்கென்ன, அப்படியே செய்கிறது; பார்த்துக் கொள்வோம். ஆனால், இந்த நாளில் இதொன்றையும் ஒருவரும் கவனிப்பதில்லை. என் தம்பியிடம் சொன்னால், ' உனக்கு வழியில் விளக்கு வந்து நிற்கும். தாகத்திற்குத் தண்ணீர் வரும்' என்று கேலி பண்ணுவான். நான் செய்துகொள்ள வேண்டுமென்றால் தடை சொல்லமாட்டான். என் தம்பி அகமுடையாளுக்கும் இதிலெல்லாம் அதிக நம்பிக்கை கிடையாது. ஏனடி காமாக்ஷி! அப்படித்தானே? நல்லதோ, கெட்டதோ, எதை செய்தாலும், அது நமக்கு ஒன்றும் பலனில்லையே?

என்னைக் கேட்கவே, நான் சொன்னதாவது :—" அப்படிக் கொன்றும் நான் சொல்லவில்லையே. நாம் செய்த பாவ புண்ணியத்தின் பலனைத்தான் நாம் இப்பொழுதும் அனுபவிக்கிறோம், மறு ஜன்மத்திலும் அனுபவிப்போம். கர்மம் உள்ள வரை ஜன்மமும் உண்டு. நம்மால் முடிந்த அளவு நாம் எப்பொழுதும் நல்லதே செய்ய வேண்டும். ' எது நல்லது, எது செய்தால் புண்ணியம்? என்பதுதான் விவாதம். பொழுது விடிந்தது முதல் சாயங்காலம் வரை பொய் சொல்லி, வைது, பர நிந்தனை செய்துவிட்டு, விளக்கேற்றினவுடன் ' சிவ சிவ ' என்று சொல்லி விட்டால், பாவம் போய்விடாது. உங்கள் தம்பி சொல்வதெல்லாம் அவ்வளவு தான். ' ஆங்கால மெல்லாம் அவிசாரி ஆடி

விட்டு, சாங்காலத்திலே சங்கரா! சங்கரா!' என்று விட்டால் புண்ணியம் உடனே வந்து விடாது. 'பாத்திர மறிந்து பிச்சை யிடு' என்றபடி, பசியோடிருக்கும் யாருக்குப் போட்டாலும், அமாவாஸையன்று பிராமணனுக்குப் போட்ட அளவு புண்ணியம் உண்டு. இதையெல்லாம் பற்றி ஒரு கதை கூட இருக்கிறது.''

'எங்கே கதை சொல்லு கேட்போம்' 'அது என்ன கதை?' என்று, அங்கே கூடியிருந்தவரில் இரண்டொருவர் கேட்டார்கள். பாகீரதிப் பாட்டியும் என் நாத்தனாரும் ஜன்மம், கர்மம், பாவ புண்ணியம் முதலியவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததாலும், சித்திரா பௌர்ணமி தான் புத்தர் பிறந்த தினமாதலாலும், நான் புத்த சரிதையைக் கொஞ்ச நாளைக்கு முன் தான் வாசித்து முடித்திருந்ததாலும், அன்று எனக்கு அச் சரிதை ஞாபகத்திற்கு வந்தது. புத்தர் கதையை அங்கிருந்தவர் ஒருவரும் கேட்டதில்லை. ஆகவே, எனக்குத் தெரிந்த வரை, நான் நன்றாகவே அதைச் சொல்லிக் கொண்டு வந்தேன். கடைசியாக, பௌத்த மதத்தின் முக்கிய கோட்பாடுகளைச் சொல்ல ஆரம்பித்தேன். ஓர் உயிரையும் ஒரு விதத்திலும் வருத்தாமலிருப்பதும், நம்மால் இயன்ற வரை எல்லாப் பிராணிகளிடத்திலும் இரக்கமும் அருளும் காட்டி நடப்பதும், முக்கிய மென்று நான் சொன்னேன். ஜாதி மதங்களைக் கவனியாமல் எல்லாரிடத்தும் ஒரே விதமாக இரக்கங் காட்டி, தருமம் செய்யவேண்டுமென்று நான் சொன்னபோது, 'சரி சரி' என்றாற் போல, பாகீரதிப் பாட்டி தலையசைத்தாள். நான் கதை சொல்லும்போது நடுவிலேயே அவர்கள் ஊர்வம்பை அளக்காமல் இருந்தால், கூடிய மட்டில் கவனத்தோடேயே கேட்பதாகத் தோன்றிற்று. அதனால் அது அவர்கள் மனத்திற்கு ஒப்பியிருக்கிற தென்று சந்தோஷப்பட்டேன். ஆனால், அது வீணான அல்ப சந்தோஷமாய்ப் போயிற்று. நான் குறைக் கதையையும் சொல்லி முடிக்கப் போகும் சமயத்தில், எவளோ ஒரு குறத்தி முதுகில் மூன்று வயதுள்ள பிள்ளையைக் கட்டிக்கொண்டு, பிச்சைக்கு வந்தாள்.

எங்கள் வீட்டு முன்கட்டிலே கூட்டமாய் இருந்ததைக் கண்டு, அவள் அங்கே வந்து நின்றுகொண்டு, 'அம்மா, கொஞ்சம் சோறு போடுங்கோ, ஏதாவது பழஞ் சோறு போடுங்கோ, தாயே, பசியா யிருக்குது தாயே!'' என்று கேட்டாள். பிச்சைக்காரர் பகலில் பிராம்மணர் தெருவில் வந்து சோறு கேட்பது வழக்க மில்லை. அதனால் இவள் ஏதோ அயலூர் வழிப் போக்கி யென்று நினைத்தேன். அவள் முதுகிலிருந்த குழந்தை பசியால் அழுதது. உடனே நான் அவசரமாய், முன்பின் யோசியாமல், கொஞ்சம் 'பழையது' கொண்டு வருவதற்காக உள்ளே போகப்போனேன். 'என்னடி செய்யப் போகிறாய், காமாக்ஷி?' என்று, உரத்த குரலில் என் நாத்தனார் கேட்கவே, நான் ஒன்றும் சொல்லத் தெரியாமல், உள்ளேயும் போகாமல், பிரமித்து நின்று விட்டு, 'ஏதாவது பிச்சை போடலாம் என்று போனேன்' என்று சொன்னேன். அதற்குப் பதில், என் நாத்தனார் :—'நன்றா யிருக்கு! பட்டப் பகலிலே, நடு மத்தியானத்திலே, பிச்சை போட்டவர்களை நான் கேட்டதுமில்லை, பார்த்ததுமில்லை' என்று சொல்லிவிட்டு, அந்தப் பிச்சைக்காரியைப் பார்த்து, 'போடி போ, போ' என்று சத்தமிட்டு அதட்டினாள். உடனே பாகீரதிப் பாட்டியும் :—'வெட்கமில்லை உனக்கு, பிராம்மணர் தெருவிலே மத்தியானத்தில் வந்து சோறு கேட்க? போ, போ' என்றாள். அந்தப் பிச்சைக் காரியோ போவதற்குப் பதிலாக, முதலில் நான் அவளுக்குப் பிச்சை போட எழுந்ததனால் என்னைப் பார்த்து :—'அம்மா, பசியா யிருக்குது, தாகம் தவிக்குது, அம்மா, கஞ்சித் தண்ணி ஊத்துங்கோ அம்மா! தாயே, நல்லாயிருப்பீக, பிள்ளை குட்டி நல்லாயிருக்க வேணும், தாயே! உங்க தங்கக் கையாலே கொஞ்சம் தண்ணி ஊத்துங்க, தாயே!' என்று கூவினாள். என் நாத்தனாருக்குக் கோபம் வந்து விட்டது.

அவள்:—'ஆமாம், அவளுக்கென்ன, நான் இல்லாவிட்டால், உனக்கு அந்தத் தங்கத்தாய் சோறு போடுவள். அவளுக்கு தோஷமுமில்லை, பாவமு மில்லை. போடி, போ!

இங்கே சோறு, கீறு ஒன்றும் கிடையாது. தண்ணீ வேணுமானால் வாய்க்காலில் இருக்கு, போ,' என்றாள். அங்கே யிருந்த பாட்டிமார் எல்லோரும் சேர்ந்து வைது, அந்தப் பிச்சைக்காரியைத் துரத்தி விட்டார்கள். துக்கமும் வெட்கமும் நெஞ்சை யடைக்க, நானும் உட் சென்றேன். என் வீட்டிலேயே பசிக்கு ஒரு பிடி பழைய சோறு போட எனக்குச் சுதந்தர மில்லாதது எனக்கு வருத்தமே. ஆனால் அதுமட்டுமல்ல. எங்கள் வீட்டில் என் நாத்தனார் இட்டதுதான் சட்டம். அது ஒன்றும் புதிதல்ல. நான் இவ்வளவு நேரமாக அந்தப் புத்த சரிதையை எடுத்துச் சொல்லி, ஜாதி மதங்களைக் கவனியாமல் எல்லா உயிரையும் தன்னுயிரைப்போல் பாவித்து இயன்றமட்டும் பரோபகாரம் செய்யவேண்டு மென்று சொல்லி வந்த பொழுது, அவர்களும் நான் சொல்வதெல்லாம் சரி சரி யென்று ஒப்பி, கவனமாய்க் கேட்டு வருகிறார்கள் என்று நான் சந்தோஷப் பட்டேன். அந்தச் சமயத்தில் அவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து, பசியால் வருந்தும் ஒரு குழந்தைக்கு ஒரு பிடி பழைய சாதம் கூடப் போட வொட்டாமல் துரத்தினார்களே என்பதுதான் எனக்கு மிகவும் மனக் கிலேசத்தை உண்டு பண்ணிற்று. இவ் வளவு நேரம் நான் எடுத்துச் சொல்லியதெல்லாம் விழலுக் கிறைத்த நீர் போலாயிற்றே! அவர்கள் இந்நேரம் பேசிக் கொண்டிருந்த தத்துவங்களெல்லாம் பறந்து போயினவே! வாயினால் சொல்லுவதெல்லாம் ஒரு விதமும், செய்வது வேறு விதமுமோ? ஆனால் இவர்களுக்குக் கல்வியறிவு இல்லாததனால் இப்படிச் செய்தார்கள் போலும். நன்றாய்க் கற்றறிந்தவர்களானால், ஒருகாலும் தர்மத்தைப் பற்றி இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் அதர்மத்தைச் செய்யமாட்டார்கள்.

இப்படி நான் எண்ணிக்கொண்டு, என் மனத்தைச் சமாதானம் செய்ய எத்தனிக்கும் பொழுது, சில வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவ மொன்று, அன்று தான் நடந்தது போல, என் ஞாபகத்திற்கு வந்தது. அது என்னவென்றால் :—அப்பொழுது நான் என் பிறந்தகத்தி

விருந்தேன். என் தகப்பனார் அயல் வீட்டிலிருந்த ஒரு 'பிரும்ம' மதக்காரருடன் சிநேகமா யிருந்தார். ஒரு நாள் காலையில் தங்கள் வீட்டில் நடக்கும் தேவ சேவைக்கு என் தகப்பனாரையும் எங்களையும் வரும்படி அவர் அழைத்தார். நானும் என் தகப்பனார்கூட தேவ சேவைக்குப் போனேன். அங்கே ப்ரும்ம சமாஜத்தைச் சேர்ந்த புருஷர்கள், ஸ்திரீகள், மொத்தம் முப்பது பேர் கூடி யிருந்தார்கள். பெண்களில் சிலர் தேவதா கீர்த்தனைகள் பாடினார்கள். அதன் பின்பு, அந்த வீட்டுக்காரர், ஒரு புஸ்தகத்திலிருந்து தேவப் பிரார்த்தனைகளை வாசிக்க ஆரம்பித்தார். வேதங்களி லிருந்தும், பைபிளி லிருந்தும், குரானி லிருந்தும் இது அது என்று தெய்வத்தின் பெயர் வித்தியாசமில்லாது; மொத்தத்தில் ஒரே கடவுளாகிய தேவனைக் குறிக்கும் ஸ்தோத்திரங்களை அவர் வாசிக்க, நாங்கள் எல்லோரும் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தோம். அதன் பின், அவர் கடவுளை எப்படிச் சேவை செய்ய வேண்டும் என்பதைப் பற்றி வாசித்தார். அதாவது, பரோபகாரம் செய்வதுதான் உண்மையிற் கடவுளைத் தொழும் வழி யென்பது. பசியால் வருந்துபவருக்கு உணவும், ஆடை யில்லாமல் வருந்துபவருக்கு உடையும் அளித்தால், அதுதான் கடவுளுக்கு மிகவும் பிரீதி யென்பதும், ஏழைகளுக்கு உதவி செய்தால் கடவுள் தாமே நேரில் ஏற்றுக்கொள்கிறார் என்பதும் தான். கடவுளே ஒரு பெரிய பிச்சைக்காரர்.

அச்சமயத்தில், திடீரென்று ஒரு பிச்சைக்காரன் அவர்கள் வீட்டுவாசலில் வந்து நின்று, பிச்சை கேட்டான். அவன் ஒரு குருட்டுக் கிழவன். வாரத்துக் கொரு முறை அந்தத் தெருவிற்குப் பிச்சைக்கு வருவான். அவர் வாசித்துக் கொண்டிருந்ததை ஒரு நிமிஷம் நிறுத்தி, பக்கத்திலிருந்த ஒருவர் எழுந்து போய், அப் பிச்சைக்காரனைச் சத்தம் போடாமல் போகும்படிச் சொல்லிவிட்டு வந்தார். உடனே மறுபடியும், அவர் வாசிக்க ஆரம்பித்தார். பிச்சைக்காரன் வாசலில் வந்தவுடன், 'இதோ நீங்கள் ஸ்தோத்திரம் செய்யும் கடவுளே எதிரே வந்து

விட்டார்!' என்று சொல்ல, நான் நினைத்தேன். அவர்கள் அப் பிச்சைக்காரனுக்கு ஒரு பிடி அரிசியையாவது, காலணாவாவது கொடாமல், அவனைப் போகச்சொல்லி விட்டு, மறுபடியும் பக்தியுடன் கடவுளை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தது எனக்கு ஒருவித வருத்தத்தையும் வெறுப்பையும் உண்டு பண்ணிற்று. முதலில், ஆவ லுடனும் கவனத்துடனும் அப்பிரார்த்தனைகளைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு, எப்பொழுது அது முடிந்து வீட்டிற்குத் திரும்புவோம் என்றாகி விட்டது. நன்று கற் றறிந்தோர் பலர் கூடிக் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண் டிருக்கையில், 'கடவுளை ஆராதிக்கும் முறை பரோபகாரம் செய்வது தான், கடவுள் நேரில் ஏற்றுக்கொள்வது அதுதான்' என்று சொல்லிக் கொண்டிருக்கையில், வாசலில் வந்த குருட்டுக் கிழவனுக்கு ஒருசிறிதும் பிச்சை போடாமல் விரட்டுவார்களேயானால், ஊர் வம்பை யளப்பதைத் தவிர வேறொன்றும் அறியாத பாட்டிமார், குறத்திக்குப் பிச்சை போடவொட்டாது தடுத்தது அதிசய மன்றே. ஆனால், நான் ஒருவரையும் குற்றங்கண்டு பிடிக்க எண்ணவில்லை. அவர்களைத் தப்பென்று சொல்ல எனக்கு நாவில்லை. என் வீட்டுவாசலில் வந்த பிச்சைக் காரிக்கு நான் பிச்சை போடவில்லையே! அதற்குக் காரணம் எதுவாயிருப்பினும், பிச்சை போடாத குற்ற மும் அதன் பாவமும் என்னைச் சேர்ந்ததுதானே. ஏனெனில், அவர்கள் அறியாமல் அப்படிச் செய்தார்கள்; நானோ, அறிந்திருந்தும், மனோ தைரியமில்லாமல் சும்மா இருந்தேன். குற்றம் என் மேலிருக்க, நான் பிறர் செய்தது தப்பென்று எண்ணுவது கூடச் சரியல்ல. எல்லாம் வல்ல கடவுளே நம் மனச்சாக்ஷிக்கு ஒப்ப நாம் நடக்கும்படி, நமக்குத் தைரியம் கொடுப்பாராக!

அறிவின்றரு ளெனவேண்டிலேம், அறிவுண்டுன தருளால்;
இறைவா! எம தறிவின்படி இயற்றும் மனவலியே
குறையிற் பெருங் குறையாம்; உளக் கொள்கைப்படி எதுவும்
நிறைவெய்திட நிகழ்த்தும்வலி நிமிருஞ்செயல் அருளே!

மலைப் பச்சிலை

அன்று கருடோற்சவம்; எங்கள் வீதிவழியாக சுவாமி புறப்பட்டு வரும்போழுது இரவு மணி பத்து அடித்தாய்விட்டது. வெகுநேரமாக நாங்கள் வாசலில் காத்திருந்தோம்; என் நாத்தனார் வஸந்தா மட்டும் காலில் கட்டுடன் மாடியிலிருந்தாள். நான்கு வீடுகளுக்கப்பால் ஊர்வலம் சில நிமிஷங்கள் நின்றது. இனி நிற்காது; வஸந்தா பார்க்கக் கொடுத்து வைத்தது ஒரு நிமிஷம்தான் என்று நினைத்தேன். மாடியிலிருந்து, தான் அதுவரை சேகரித்து வைத்திருந்த சில்லறை நாணயங்களையெல்லாம் வஸந்தா வீதியில் எறிந்தாள்; காசைப் பொறுக்கிக் கொண்டு கூட்டம் வாசலில் நின்றது; அவள், சாவகாசமாய், உற்சவத்தின் சிறப்பைப் பார்த்து, சுவாமி தரிசனஞ் செய்தாள். அப்பொழுது அவளுக்கு வயது பதினைன்கு; அவள் துணிச்சலை நான் வியந்தபொழுது கலகலவென்று சிரித்தாள். "தன் வீம்பு வார்த்தையைக் காப்பாற்ற ஒரு பையன் சிவப்புக் கொடி காட்டி எக்ஸ்பிரஸை நிறுத்தினான் என்ற கதையை அண்ணா சொல்லவில்லையா? திருநாளைப் போவார் சிதம்பரம் சேரவில்லையா? வேண்டுமானால் எதையும் சாதிக்கலாம்" என்றாள்.

என் மாமனார் சாந்த சுபாவமுடையவர்; என் இளைய மாமியார் மூத்தாள் குழந்தைகளான என் கணவரிடமும் வஸந்தாவிடமும் நிஜ அன்பு பாராட்டினாள்; அவளுடைய ஒரே குழந்தை மணி எங்கள் எல்லாருக்கும் கண்மணியாக விளங்கினான். நாள்முழுவதும் வீட்டில் ஒரு சுடுசொல், ஒரு கோபக்குரல் கேட்காது; வஸந்தா மணியை ஏதாவது குறும்புத்தனம் செய்யத் தூண்டுவதைத் தவிர வேறு சச்சரவு கிடையாது. பள்ளிக்கூடத்தில் மேல் வகுப்பில்லாமல், வஸந்தா படிப்பை நிறுத்த வேண்டி வந்தது. வீட்டில் ஸம்ஸ்கிருதமும் வீணையும் கற்றுக்கொண்டாள்; அவளுக்கு ஸங்கீதத்தில் நல்ல ஞானமிருந்தது. குறைப் பொழுதைக் கூடியமட்டில் என்னுடனேயே கழித்தாள்;

அவளும் நானும் உயிர்த்தோழிகளாய் விட்டோம். பிறந்தகத்தில் கூட எனக்கு அடிக்கடி அவள் நினைவாகவே யிருந்தது.

(2)

"அவளை நான் கவனித்துப் பார்த்ததில்லை; எப்படி யிருப்பாள், சொல்லேன்" என்று என் தமையன் ராஜு கேட்டான். "உன் மாப்பிள்ளை யவ்வளவு சிவப்பில்லை; அதே சாயல்; சுருட்டை மயிர்; கண்ணில் களையுண்டு; அழகுக்கொன்றும் குறைவில்லை"

"குணம்தான் குரங்குக் குணம் போலிருக்கிறது!"

"சற்றுப் பிடிவாதக்காரிதான்; அதனுலென்ன? ஒன்றுக்கு ஆசைப்பட்டால் அதைச் சாதித்துத் தீர்வாள்; ஆனால் அடிக்கடி தனக்கு ஏதாவது வேண்டுமென்று கேட்பதே யில்லை. தீபாவளிக்கு 'பனாரிஸ்' புடவை வேண்டுமென்று வாங்கிக்கொண்டாள். அவள் ஒரு தடவையும் நான் ஐந்தாறு தடவையுமாக அதைக் கட்டியாய்விட்டது, இன்றை ஆசை இன்றையோடு தீர்ந்தது; தனக்கென்று நாளைக்கென்று, பத்திரப்படுத்திக்கொள்ளும் சுபாவம் அவளுக்கில்லை. வளையல், பூ, புஸ்தகங்கள் எல்லாவற்றையும் சிநேகிதிகளுக்குக் கொடுத்துவிடுவாள்."

"நீ புகழ்ச்சியாய்ச் சொல்லுகிறாய்; கேட்டாலே பயமாயிருக்கிறது, குபேரன்தான் அவளைக் கட்டிக்கொள்ள வேண்டும்."

"போடா போ, ஏதோ என் ஆசையைச் சொன்னேன். அவளைப்போல ஊக்கமும் உற்சாகமுமுள்ள பெண்ணை நான் கண்டதேயில்லை; ஒரு புஸ்தகத்தை ஒரு நாளில் முடித்து விடுவாள். விளையாட்டாய்ப் பேசுவாள்; ஆனால் பெருந்தன்மையும் உண்டு. புதிதில் எத்தனை தரம் நான் செய்த பிசகுகளை அவள் ஏற்றுக்கொண்டிருக்கிறாள், தெரியுமா? நான் அவளுக்கு நாத்தனாராக வாய்த்தால் அந்தக் கடனைத் தீர்க்கலாம்."

"இன்று சாயங்காலம் யோசித்துச் சொல்கிறேன்" என்று ராஜு சொன்னான். வெள்ளை வானத்தில் பளிச்

சென்று ஒளிரும் மின்னலையும், மலைநாட்டில் கற்களை அரித்துக்கொண்டு போகும் நீரோடையையும், காட்டுப் புதரில் அலரும் செந்நிறப்பூவையும் ஒரு பெண்ணுக்கு உவமைகளாகக்கற்பித்துத் தான் எழுதிய பாடல் ஒன்றைச் சிறிது நேரம் கழித்து, எனக்குப் படித்துக் காட்டினாள். ராஜுவின் சம்மதத்தைத் தெரிவித்து, என் கணவருக்கு உடனே எழுதினேன்; எங்கள் உத்தேசம் நிறைவேற வில்லை. சம்பந்தம் மாற்றிக்கொள்வது உசிதமில்லை யென்றும், நக்ஷத்திரப் பொருத்தம்கூட இல்லையென்றும் சொல்லி, இரண்டு குடும்பங்களிலும் பெரியவர்கள் இதை ஆமோதிக்கவில்லை. வேறு ஒரு பெண்ணையும் பார்க்கச் சம்மதிக்காமலே, ராஜு லாகூருக்குத் திரும்பிப் போய் விட்டான்.

(3)

என் மாமனார் என்ன தீவிரமாய்த் தேடியும் வஸந்தாவுக்கு வரன் அமையவில்லை. அவள் ஜாதகத்தில் தோஷமிருந்தது. அபூர்வமாய் ஜாதகம் சேர்ந்தால் மற்ற விவரங்கள் பிடிக்கவில்லை. நல்ல குடும்பத்தில் பிறந்து, அழகும் படிப்பும் சங்கீதத் தேர்ச்சியுமுள்ள பதினேழு வயதுப் பெண்ணை, சீரோடும் சிறப்போடும் கன்னிகா தானமாகப் பெறுவதற்கு ஏனோ வரன்கள் தாமாக முன் வரவில்லை யென்று எனக்கும் என் கணவருக்கும் ஆச்சரியமாயிருந்தது. ஒரு நாள் தபாலில் என் கணவருக்கு இங்கிலீஷில் ஒரு கடிதம் வந்தது. அதில் எங்கள் குடும்பத்தையும் என் கணவரையும் வெகுவாய்ப் புகழ்ந்திருந்தது. 'உங்களுக்கு அருமைச் சகோதரி ஒருத்தி இருக்கிறாளாம். தமையனுக்கேற்ற தங்கை என்று சொன்னால் நான் அவளை வேறு விதமாய் மெச்ச வேண்டியதில்லை, எல்லா விதங்களிலும் அவளுக்கேற்றவள் இந்த நாட்டிலேயே இல்லை என்பது நிச்சயம். அதனால்தான் நான் துணிந்து முன் வருகிறேன். வேறு யோக்கியதைகளில் குறைவு பட்டாலும் உங்கள் குடும்பத்தின் அருமை பெருமைகளை நான் நன்கு அறிவேன். இன்று மாலை ஆறு மணிக்கு உங்கள் வீட்டுக்கு வருவேன்" என்று லக்ஷ்மணன் என்றவன் எழுதியிருந்தான். அவன் யாரா யிருக்கலாமென்று

வெகு நேரம் யோசித்தோம். "யாரோ காலிப்பயல், ராமு, வஸந்தாவைத் தான் காதலிப்பதாக எண்ணி இம்மாதிரி எழுதியிருப்பான். அவனுக்கு இடம் கொடுக்காமல் வெளியில் இறக்கிவிடவேண்டும்" என்றார் என் மாமனார். அவனைப் பாராமல் ஒரு முடிவுக்கும் வரக்கூடாதென்று என் கணவர் கூறினார். என்னைத் தேநீர் தயாராக வைத்திருக்கச் சொல்லி, அந்தக் கடிதத்தால் தனக்கேற்பட்ட ஆவலை வெளியிட்டார். இருட்டுமட்டும் ஒருவரும் வரவில்லை. இனிக் காத்திருக்கப் போவதில்லை என்று என் கணவர் மாடிக்கு வேறு உடுத்திக்கொள்ளப் போனார். அவர் இறங்கி வந்தபோது படிக்கட்டின்கீழ் வெகு டாம்பீகமாக உடைதரித்த ஒரு வாலிபன் நின்றான். அவன் யாரென்பது எனக்கு அந்த நிமிஷம்தான் தெரியும். "மிஸ்டர் ராமமூர்த்தி, நான்தான் லக்ஷ்மணன். என் கடிதம் கிடைத்திருக்குமே. மன்னிக்கவேண்டும், சற்று நேரமாய்விட்டது" என்று இங்கிலீஷில் சட்டைக்காரர் பேசும் குரலில் சொன்னான். "பரவாயில்லை, வாருங்கள்" என்று கைகுலுக்கி என் கணவர் அவனைத் தன் அறைக்குள் அழைத்தார். என்னால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. அன்றிரவு சாப்பாட்டு நேரம் வரை வஸந்தா தன் வேஷத்தைக் கலைக்கவில்லை. இரண்டு நிமிஷங்களுக்குத் தன் தமாஷ் பலித்தது. தமையன் தன்னைக் கண்டு கொள்ளவில்லை என்ற உற்சாகத்தால் அவளுக்குத் தலைகிறுங்கி விட்டது. ஐந்து வருஷங்களுக்கு முன் பள்ளிக்கூடத்தில் அவள் ஒரு குடிகார ஜமீன்தாராக வேஷம் போட்டிருந்தாளாம்; அந்த ஆடல் பாடல்களை எல்லாம் எங்களுக்கு நடித்துக் காட்டினாள். என் மாமனார், சித்தி, கணவர் எல்லாரும் அவளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தார்கள். மறுநாள் சித்தி "இதெல்லாம் குழந்தைத்தனம்; இனிமேல் எத்தனைநாள் செல்லும்" என்றாள். அவளை யார் கையிலாவது ஒப்புவிக்க வேண்டியதுதான். "பலவுறு நறுஞ் சாந்தம் படைப்பவர்க்கல்லதை, மலையிலே பிறப்பினும், மலைக்கவைதாம் என் செய்யும்?" என்று மாமனார் பெருமூச்சு விட்டார். ஆனால் அன்றிரவு அவள் களியாட்டத்தை யாரும் தடுக்கவில்லை.

(4)

ராஜு வஸந்தாவிடம் நேரில் பழகினதில்லை. எனினும், நான் சொல்லி இருவருக்கும் மற்றவரைப்பற்றி அநேக விவரங்கள் தெரியும். ராஜு கவி எழுதுகிறான் என்பது முதல், அவனுக்குக் கத்தரிக்காய் பிடிக்காது என்பது வரை வஸந்தாவுக்குத் தெரியும்; அவனுடைய செய்கைகள், வார்த்தைகள் பலவற்றை நான் அவளிடம் சொல்லியிருந்தேன். 'என் தமையன், அதனால் வேண்டியவன்' என்கிற சிநேக பாவத்தில்தான் வஸந்தா அவனைப் பற்றி விசாரிப்பாள்; அதுபோலவே ராஜு மனத்திலும் களங்கமில்லையென்பது எனக்கு நிச்சயமாய்ப் படவில்லை. அவன் நெஞ்சின் ஆழத்தை அறியவேண்டி அவனைத் தூண்டிக் கேள்வி கேட்டேன். "என் வேலைக்கும் குடித்தனத்துக்கும் சரிப்படாது. அதற்காகத்தான் கலியாணம் வேண்டாமென்கிறேன். நீங்கள் வஸந்தாவைத் தெரிந்த இடத்தில் கொடுங்கள். எதற்காக ராமு, 'பணம், பணம்' என்று அடித்துக் கொள்கிறான்? வஸந்தாவுக்கு நல்ல தேகக்கட்டு; நெல் குத்தினாலும் அவள் மேனி வாடாது. அவள் ஏன் பணக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டுப் பொம்மைக் குடித்தனம் செய்ய வேண்டும்? பணமும் கண்ணியமும் உயர உயர, அந்த வீட்டு நாட்டுப் பெண்களின் வாழ்க்கை சூனியம்தான். நகைகளையும் புடவைகளையும் எடுத்துக்காட்ட, கடையில் தூக்கி நிறுத்தும் பொம்மைகள்; பெரிய மனிதர் வீட்டில், தம்மையே சிங்காரித்துக் கொண்டு நடக்கத் தெரிந்த பொம்மைகள். ஏழை வீட்டில், பெண்கள் உழைத்தால் அதற்கு மகிமையுண்டு. பணக்கார வீடுகளில், மாமியாரையும் புருஷனையும் திருப்திப் படுத்துவதைத் தவிரப் புது மருமகளுக்கு வேறு என்ன வேலை? நான் சொல்வதைக் கேள், கமலா, இதுதான் அடிமைத்தனம்; பிறர் முகம் கோணாமல் நிற்பது நடப்பது, உண்பது. உடுப்பது. அவசியமிருந்தால் நான் ஒரு நாளில் இருபது மணி நேரம் வேலை செய்யத் தயார். ஆனால் துரைக்குச் சலாம் போடுவதற்காக, வேலையில்லாமல் காலையில் அரைமணி நேரம் முன்னாடிப் போவதென்றால் கஷ்டமாயிருக்கிறது. அதுதான் லீவில் வந்திருக்-

கிறேன். என் குணம் அப்படி; வஸந்தாவுக்கும் அந்தச் சுபாவம் உண்டு" என்று ஒரு பிரசங்கம் செய்தான்.

கடைசியில் நான் துணிந்து, "உன் மனத்தில் உனக்கு வஸந்தாவின் மேல் காதலா?" என்று கேட்டேன். அவன் சாவதானமாகவே பதில் சொன்னான்; "இல்லையென்று நினைக்கிறேன். உனக்கு ருசு வேண்டுமானால் இதைக் கேள். என் சிநேகிதன் கோபாலனுக்கு வஸந்தா நிச்சயமாவதாக வைத்துக்கொள். உன் மாமனார் கொடுக்க மாட்டார். அவனுக்கு வயதாய்விட்டது; சம்பளம் குறைவு; ஆனால் இதம் தெரிந்த மனிதன், அது நடக்காத காரியம்; நடந்தால் எனக்கு வருத்தமிராதென்று சொல்கிறேன். முக்கால்வாசிப் பெண்கள் விரும்புவது அலங்காரமும் பிரிய வசனங்களும்; முக்கால்வாசி ஆண்களும் கொடுக்கக் கூடியது அவ்வளவுதான். வஸந்தாவுக்கு வேண்டியது மலைக்காற்று; சுயேச்சை; நானால் அதைத் தடுக்க மாட்டேன்."

ராஜு வஸந்தாவைத் தன் கவிதா நாயகியாகப் பாவித்துப் பேசுவதாகத் தோன்றிற்று. இம்மாதிரிப் பேச்சை வளர்ப்பதே அனர்த்தம் என்றெண்ணி, வார்த்தையை நிறுத்திவிட்டேன். வஸந்தாவின் கலியாணத்தைப் பற்றி, என் தாயாரும் எனக்கு வேறுவிதமாகப் புத்திமதி கூறினாள்; "என்றைக்காவது ஒருநாள் அவள் புக்ககம் போய்த் தீரவேண்டும்; மலையில் பிறந்தாலும் உரலில் மசியவேண்டும். இவ்வளவு தூரம் நீங்கள் ஒவ்வொருவரனாய் ஆராய்ந்து தள்ளுவது நன்றாயில்லை. ஏதோ, அவள் பிற்காலம் கஷ்டப்படாமலிருக்க, நல்ல ஸ்திதியில் உள்ளவனாய்ப் பாருங்கள்; அவன் கேட்ட விலையைக் கொடுத்துக் கலியாணத்தை நடத்துங்கள். மற்றதெல்லாம் தானாகச் சரிப்பட்டுவிடும்; அதுதான் சகஜம்" என்றாள்.

(5)

பதினாயிரம் ரூபாய் வரதக்ஷிணையுடன் வஸந்தாவுக்குக் கலியாணம் நிச்சயமாயிற்று. எல்லாச் செலவையும்

சேர்த்து மொத்தம் பதினாயிரம் செலவழிக்கவே மாமனார் உத்தேசித்திருந்தார். ஆனால் பங்குனியில், ஒருமாதம் அவர் வியாதியாய்ப் படுத்துவிட்டார். அப்பொழுது வஸந்தாவுக்கு வயது பத்தொன்பது நிறைந்தது. உடம்பு குணமானவுடன், மாமனார் செலவைப் பாராமல் வரன் நிச்சயம் செய்துவிட்டார். சம்பந்தம் சிலாக்கியமான இடம்தான். மாப்பிள்ளையின் தகப்பனார் இஞ்சினீயரா யிருந்து இரண்டு மூன்று லக்ஷம் சேர்த்துவிட்டுப் பென்ஷன் வாங்கிக்கொண்டிருந்தார்; அவருடைய இரண்டு பெண்களையும் இன்னும் பெரிய இடங்களில் கொடுத்திருந்தார். துரைசாமி அவருக்கு ஒரே பிள்ளை; வயது இருபத்துநான்குதான்; அதற்குள் ரேடியோ இஞ்சினீயராய்ப் பட்டணத்தில் முந்நூறு ரூபாய் சம்பளத்திலிருந்தான்: அவன் இனத்தாரெல்லாம் உயர்ந்த பட்டதாரிகளாகவும் உத்தியோகஸ்தர்களாகவும் விளங்கினார்கள்.

கலியாணம் விமரிசையாய் நிறைவேறிற்று; விருந்து, பாட்டுக்கச்சேரிகள் சிறப்பாய் நடந்தன; சில்லறைக் கலகம் ஒன்றும் ஏற்படவில்லை. வஸந்தாவுக்குப் புக்கத்துப் பரிசாக ஏழு புடவைகளும் ஒரு ஜோடி வைர வளையல்களும் கிடைத்தன. வளையலுக்கு இசைவாக வைர அட்டிகை இல்லாவிட்டாலும் நாங்கள் அவளுக்கு ஒரு 'நெக்லெஸா'வது வாங்கிப் போடவேண்டுமென்று துரைசாமியின் தாயார் தன் ஆசையை வற்புறுத்திச் சொன்னாள். அப்படியே செய்தோம்; அதற்கு வேறு ஆயிரத்தைந்நூறு ரூபாய் பிடித்தது. வஸந்தாவுக்கு அவள் தாயாருடைய நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் இருந்தன. அவை தவிரப் புதுச் செலவு ரூபாய் இருபதினாயிரம் என்று கணக்குப் பார்த்தவுடன் எங்கள் எல்லாருக்கும் சற்றுச் சலிப்புத் தட்டியது, இவ்வளவு செலவானது தனக்கு அவமானமாய்த் தோன்றியதென்று வஸந்தா சொன்னாள். அவளுடைய தாயார் நகை சரலட்டிகை ஒன்றுண்டு: அதைத்தான் இதுவரை விசேஷங்களுக்கு வஸந்தா அணிந்து கொள்வாள். புதிதாக வைர 'நெக்லெஸ்' வாங்கியாய் விட்டதால், இனிமேல்

தனக்கு அது வேண்டாமென்றும், அதை நானாவது சித்தியாவது வைத்துக் கொள்ள வேண்டு மென்றும் வஸந்தா பிடிவாதமாய்ச் சொன்னாள். அது கனத்த நகை; முப்பது பவுன். அவள் தகப்பனாரும் அவள் சொன்னதை ஒப்பி, அட்டிகை வீட்டிலிருக்கட்டும் என்று பூட்டி வைத்தார். மற்ற நகை, புடவைகள், சீருடன் அவளைப் பட்டணத்தில் கொண்டுபோய் விட்டோம்; அவளில்லாமல் விடெங்கும் வெறிச்சென்றிருந்தது.

வஸந்தாவைப் புக்ககத்தில் கொண்டாடி வைத்துக் கொள்வதாகவே தோன்றிற்று. ஒவ்வொரு கடிதத்திலும் அவள் தன் மாமியாரோடும் துரைசாமியோடும் போய்ப் பார்த்த இடங்களையும், அவர்கள் அவளுக்கு வாங்கிக் கொடுத்த சாமான்களையும் வர்ணித்திருந்தாள். புக்ககத்து உறவினரைப் பற்றிச் சிலவேளை குறும்புத்தனமாய் எழுதுவாள். கண்டது கேட்டதை யெல்லாம் பிறர் ரஸிக்கும்படி எழுதும் சக்தி அவளுக்கு உண்டென்று எனக்கு அதுவரை தெரியாது. ஒருதரம், அவளுடைய மாமியாரின் தாயார், காபி தவிரப் பழவகைகள், ஹல்வா, வாதாம்கொட்டை, பால் முதலியவற்றை இரண்டு வேளை சாப்பிட்டு ஏகாதசிப் பட்டினியிருந்து, மறுநாள் அதிகாலையில் பாரணை முடித்து ஆசுவாசப்பட்டதை வேடிக்கையாய் ஒரு நாடகம் போல் எழுதியிருந்தாள். அவளுடைய நகைச்சுவையை மெச்சிப் பதிலெழுதினேன். அதற்கடுத்த கடிதங்களில் உபயகுசலோபரி தவிர வேறு விசேஷமில்லை; அவளுடைய நடையே மாறியிருந்தது. கடைசியில் இதன் அர்த்தம் விளங்கிற்று; அவளுடைய கடித வரத்துப்போக்கு துரைசாமியின் கண்காணிக்கையில் நடப்பதாக ஓரிடத்தில் குறித்திருந்தாள். இதன் பின் விஷயமில்லாமற் போகவே, தபாற் செலவை வீணாக்காமல் அநேகமாய்க் கார்டுகள் எழுதியே க்ஷேமம் விசாரித்துக் கொண்டோம். அவளைப் பார்க்க வேண்டுமென்ற அவா மேலிட்டது; சமயம் வாய்க்கவில்லை. தீபாவளிக்குத் துரைசாமியால் வர முடியவில்லை; வஸந்தாவும் வரவில்லை. அவள் ஒரு தடவை வந்துபோனபோது, நான்

அயலூருக்கு என் தமக்கை குழந்தையின் ஆண்டு நிறைவுக்குப் போயிருந்தேன். நான் திரும்பி வந்தவுடன் சித்தி அவளைப் பற்றிப் பேசியது எனக்கு ஆச்சரியமா யிருந்தது. "உடம்பு நன்றா யிருக்கிறாள்; சிவந்திருக் கிறாள். துரைசாமியுடன் தான் வந்தாள். இங்கே என்னவோ, முள்ளின்மேல் இருப்பவள் போல் இருந்து விட்டு அவனுடன் போய்விட்டாள். நீ வந்த பின் கொண்டு விடுவதாக, ராமு, உன் மாமனார், எல்லாரும் சொல்லிப் பார்த்தார்கள்; அவள் கேட்கவில்லை" என்றாள். "துரைசாமி சம்மதிக்க வில்லையோ, என்னவோ?" என் றேன். "அவன் ஒன்றும் தடை சொல்லவில்லை; அவள் தான் உன்னைப் பார்க்கப் பிரியப்படவில்லை" என்றார் என் கணவர். அதை நான் நம்பவில்லை; அப்படியே சொன் னேன். "நீ நம்பாவிட்டால் போ; துரைசாமி உன்னைப் பார்ப்பதற்காக அவளை இங்கே இருக்கச் சொன்னான். அவள் அவசியமில்லை என்றாள்.' 'என்னைப் பார்க்க வேண்டி மன்னி இருந்திருக்கலாமே' என்று கேட்டாள்." 'ஜன்ம நக்ஷத்திரத்தைப் பத்து நாள் கழித்து வரச் செய்யாதது உன்மேல் தப்பு!' என்று சித்தி சொன்னாள். என்னுடன் வந்திருந்த ராஜு, 'தப்புத்தான் கமலா; குழந்தையின் ஆண்டு நிறைவு ஒரு சடங்கு; நீ யில்லா மலும் நடக்கும். வஸந்தா உன் தோழியல்லவா? அவள் ஜயில் தப்பிவந்த சமயம் நீ அவளை எதிர்கொள்ள வேண்டாமா?' என்றாள். "பிதற்றுதே, ராஜு" என்றார் என் கணவர். ஆனால் அவர் முகத்திலும் மலர்ச்சி யில்லை. சித்தி மேலும் சொன்னாள்: "அவள் வைத்து விட்டுப் போன சில்லறை நகை, இனமல் வளையல், லோலக்கு எல்லாவற்றையும் கொண்டுபோய் விட்டாள்; சரலட்டிகை எங்கே என்று கேட்டாள்."

என் சங்கிலி ஒடிந்திருந்ததால் ஆண்டு நிறைவுக்குச் சரலட்டிகையை அணிந்து கொண்டு போயிருந்தேன். அது வஸந்தா கழுத்தில் பழகின நகை; அவளுக்குப் பிரியமானது. கலியாணத்துக்குப் பின் தனக்கு அது வேண்டாமென்று சொன்னபோது, நான் கூட அவளைக்

தடுத்தேன். ஒரே பிடிவாதமாக, தான் அதை ஒருநாளும் அணியப் போவதில்லை யென்று அவள் சபதம் செய்தாள். இப்பொழுது அவள் அதைத் திரும்பி விரும்பினால் அவளுக்கே அதைக் கொடுத்துவிட வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. அதைப்பற்றி எழுதிக் கேட்டேன்; அவளிடமிருந்து மறு தபாலிலேயே பதில் வந்தது; "சரஸ்வட்டிகையை இங்கே அனுப்பாதே; அது என்னுடையதில்லை; எனக்கு வேண்டாம். நீ அனுப்பினால், உடனே அதைப் பத்திரமாய்த் திருப்பி யனுப்பும் சிரமம் எனக்கு நேரும்; அல்லது அதை நான் தெருவில் எறியவேண்டி வரும். அட்டிகைப் பேச்சு வேண்டாமென்று நான் உன்னைப் பார்க்காமல் வந்தேன், என் கணவர் பார்க்காத கடிதங்களை நான் எழுதும்படி வைத்துக்கொள்ளாதே."

இதற்கு மேல் விஷயங்கள் என் மாமனார் காதுக்கு எட்டின. "அவளுடைய தாயார் நகைகளை யெல்லாம் அவளுக்குப் போடுவதாகப் பொதுவாகச் சொன்னேன். அவர்கள் நிர்ப்பந்திக்கிறார்கள் போலிருக்கிறது" என்று அவர் வருத்தப்பட்டுச் சொன்னார். வஸந்தாவைப் பட்டணத்தில் போய்ப் பார்த்துவர என் கணவர் சென்றார்; அவளையும் கூடவே அழைத்து வந்தார்.

(6)

"துரைசாமிக்குச் சற்றுக் கழுதைப் புத்தி; மற்றைப்படி மாப்பிள்ளை குணசாலிதான்" என்று என் கணவர் அலக்ஷ்யமாகப் பேசினார். கேவலம் ஆயிரம் ரூபாய் பெறுமான நகையைத் தான் மதிக்கவில்லை யென்றும், ஆனால் வஸந்தா தன் மனைவியானதால் அவள் உரிமைகளைக் காப்பது தன் கடமையென்றும் அவன் சொன்னானும். யார் உரிமைகளை யாரிடமிருந்து காப்பதென்ற தாரதம்யம்கூட அவனுக்குப் படவில்லை. "நகை என்னுடையதில்லை; என்னுடையதானாலும் அதை நான் கொடுத்தாய்விட்டது; கொடுத்ததை வாங்கமாட்டேன்" என்று வஸந்தா சாதித்தாள். எங்களிடம் பேசுவதில் அவளுடைய பழைய முரண்டு மாறவில்லை. துரைசாமியின் நிர்ப்பந்தப்படி நகையைக் கொண்டு போவதை விட,

புக்ககத்தையே உதறித் தள்ளிவிட்டு வாழாப் பெண்ணு யிருந்து விடுவதாகச் சொன்னுள். விவாதம் என் அறையில் நடந்தது. "நீ சொல்வது சரிதான், வஸந்தா. உன் புக்ககத்தார் ஏழையில்லே. ஆனுல் நாம் மட்டும் ஏழைகளா? எனக்குப் பத்துப் பன்னிரண்டாயிரம்; மணிக்கும் அந்தப்பங்கு; நமக்குச் சொத்தில்லையா? இப் பொழுது நான் சம்பாதிக்கிறபடி, நாளைக்கு மணியும் சம்பாதிக்க மாட்டாஞ? உன் கலியாணச் செலவு நியாயமாய் உனக்குள்ள பங்குதான். தவிரவும், யாரும் உன்னைக் கேட்டுச் செலவழிக்கவில்லே. இந்தக் கணக் கெல்லாம் உன் கவலையில்லே" என்று என் கணவர் அவளேச் சமாதானப்படுத்த முயன்ருர்.

"என் பங்காஞல் எனக்கு அதில் உரிமை யில்லேயா? என் நகையாவது என்னுடையதுதாஞ? எனக்கு இஷ்ட மானதைக் கழற்றி நான் மன்னிக்குப் பரிசு கொடுக்க லாமா?" என்று வஸந்தா கேட்டாள்.

"நகை உன்னுடைய சொத்து; நீயே பிறருடைய சொத்துத்தானே" என்ருர் என் கணவர். வஸந்தாவிற்கு அழுகை பொங்கிற்று. "அழாதே, வஸந்தா! நீ வீண் முரண்டுக்காக அழுகிருய். புக்ககத்தில் உன்னே யாரும் படுத்தவில்லே. துரைசாமி உன்னேப் பிரிந்திருக்க மாட்டான்; உனக்கும் அவன்மேல் பாசமிருக்கிறது. அன்புக்கு அறிகுறியாக இப்பொழுது நீ அவன் சொன்ன படியெல்லாம் கேட்க வேண்டும் என்கிருன். அப்படியே இருக்கட்டுமே; உன் இஷ்டப்படி நீ அவன் சொத்து முழுவதையும் ஆளப் போகிருய்; உன்னேக் கேட்டு அவன் கைச் செலவுக்குப் பணம் வாங்கிக் கொள்வான்; நீ சொன்னபடியெல்லாம் ஆடுவான்; அப்படியும் ஒரு காலம் வரும்."

நான் பேசி முடிக்குமுன் வஸந்தா பேய்ச் சிரிப்புச் சிரித்தாள். "பாம்பாட்டியா, பாம்பா? நீயும் அண்ணுவும் எப்படி? ஆடு பாம்பே, கூத்தாடு பாம்பே, ஆணையை ஒரு நாளும் மீறமாட்டேனென்று ஆடு பாம்பே!" என்று

பாடினாள். என்னை வெளியே போகும்படி ஜாடை காட்டி விட்டு என் கணவர் வெகு நேரம் ஹிதோபதேசம் செய்தார். பிறகு வஸந்தா கதவைத் திறந்து, "உள்ளே வா; மன்னி, படுத்துக்கொள்ள வேண்டாமா?" என்று சலிப்பாய்ச் சொன்னாள். "எனக்கு அவசரமில்லை; நீங்கள் பேசி முடிந்தாய்விட்டதா?" "நான் ஒன்றும் பேசவில்லை; அண்ணாதான் ஹிந்து ஸ்திரீகளின் பதிவிரதா தர்மத்தைப்பற்றி ஜோராய் ஒரு பிரசங்கம் செய்தான். நீ கேட்காமற் போய் விட்டாயே. புக்ககத்தை விட்டவளுக்குப் பிறந்தகத்தில் இடம் கிடையாதாம். சகுந்தலையிடம் சிஷ்யன் அப்படித்தான் சொன்னான்; எனக்கு அந்தச் சாஸ்திரத்தில் நம்பிக்கை யில்லை!"

என் கணவர் கெஞ்சும் குரலில், "இந்நேரம் நான் சொன்னதையெல்லாம் ஒப்புக் கொண்டாயே, வஸந்தா? மறுபடியும் தான் சொன்னதையே சொல்கிறாயே" என்றார்.

"உன் வழக்கில் ஒரு நியாயம் எனக்கும் தெரிகிறது; அதாவது, ஆயிர ரூபாய்க்காக இருபதினாயிரம் ரூபாய் பேரத்தை நாசமடிப்பது உங்களுக்கு நஷ்டமென்பது. ஆனால், இதை நீ அற்ப விஷயம் என்கிறாயே, அது தப்பு; இது கனத்த காரியம்; இதில் விட்டுக்கொடுப்பது எனக்கு உயிரை விடுவதைப் போலிருக்கிறது. அதனால் வந்தது வரட்டும் என்று உனக்குத் தைரியமிருந்தால், சரி" என்றாள். அவளைத் தேற்றி அன்றிரவே அவள் பெட்டியில் அட்டிகையை வைத்தோம்.

தன் கக்ஷி தோற்று விட்டாலும், மனத்தில் போராட்டம் ஓய்ந்ததால் வஸந்தா சற்று நிம்மதியடைந்தாள். என்னிடம் முன்போல அந்தரங்க நட்புடன் பழகினாள். துரைசாமியைப் பற்றி அவள் அதிகம் பேசவில்லை; எனினும் சில விஷயங்களை ஊகித்தறிந்து கொண்டேன். அவனுடைய அன்பு அவளை முற்றிலும் தன் வசமாக்கப் பார்த்தது. தாயில்லாப் பெண்ணுக்குப் பிறந்தகத்தில் அதிக வாஞ்சையும் சலுகையுமிருக்கா

தென்றெண்ணி அவன் மகிழ்ந்தானும். எந்த அற்ப விஷயத்திலும் அவன் எண்ணப்படி அவள் நடக்கா விட்டால் அதை அலக்ஷியம், பிரியக் குறைவு என்று அவன் பாராட்டிச் சோர்வடைவதும், அவன் தாயார் அவனைத் தேற்றி வஸந்தாவின் அசட்டுத் தனத்தைத் திருத்தப் பார்ப்பதும் அந்த வீட்டில் சகஜமான நிகழ்ச்சிகள்; இவைகளைப் பற்றித் துரைசாமியின் தாயார் சொல்லக் கேட்டேன். அவள் வஸந்தாவை அழைத்துப் போக வந்திருந்தாள்; பிரியமான பாவனையிலேயே அடிக்கடி, "வஸந்தா வெள்ளேடு, இனிமேல் தான் கிரந்தம் எழுத வேண்டும்" என்று சொன்னாள்; அவள் கருத்துப்படி அந்தக் காவியம் துரைசாமியின் அருமை பெருமைகளைக் கொண்டாடுவதாக இருக்க வேண்டுமென்று நினைத்தேன். துரைசாமிக்குச் சங்கீதம் பிடிக்காததால் இனிமேல் வஸந்தாவுக்கு வீணை அவசியமில்லை யென்று ஏற்பாடாயிற்று. "வீணையை ரயிலில் கொண்டு போவது கஷ்டம்; அதை ஸாதகம் செய்யும் நேரத்தில் 'டைபிங்' கற்றுக் கொண்டாலும் அவனுக்கு எப்பொழுதாவது பிரயோசனப் படும்" என்றாள். அவ்வாறே வீணையை வைத்து விட்டு அட்டிகையைக் கொண்டு வஸந்தா திரும்பவும் பட்டணம் போய்விட்டாள்.

(7)

ராஜுவுடைய வேலை ராணுவ இலாகாவுடன் தொடர்புடையது. அவன் ஆஸ்ஸாம் பக்கம் மாற்றிப் போகுமுன், பட்டணத்தில் ஒரே நாள் தங்க முடியுமென்றும், அங்கு வந்து தன்னைச் சந்திக்கும்படியும் எழுதினான். என் கணவரும் நானும் இரண்டு நாள் முன்னதாகவே புறப்பட்டு, வஸந்தாவின் வீட்டுக்குப் போனோம். அவளைப் பார்த்து ஒரு வருஷத்துக்கு மேலாயிருந்தது; அவளிடம் நேரில் பேச ஆவலாயிருந்தது. நாங்கள் உள்ளே நுழைந்த போது வஸந்தாவும் அவள் மாமியாரும் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தார்கள். மாந்துளிர் வர்ணப் புதுப் புடவையும், தலையில் அணிந்த கனகாம்பரங்களும் வஸந்தாவின் நிறத்துக்கு ஒத்து அவள் அழகை எடுத்துக் காட்டின. எங்களைக் கண்டதும் அவள் எழுந்து

ஊஞ்சற் சங்கிலியைப் பிடித்து நின்றாள்; அவள் முகத்தில் சந்தோஷமோ, ஆவலோ தென்படவில்லை. அவள் மாமியார் ராஜு எப்போது வருவான், நாங்கள் எத்தனை நாள் இருப்போம் என்று முதல் வசனங்களிலேயே கேட்டாள்.

ராஜு வரத் தாமதமாயிற்று; வேண்டா விருந்தினராக நாங்கள் அங்கே ஐந்து நாள் இருந்தோம். வஸந்தா தன்னை யறியாமலே முற்றிலும் மாறியிருந்தாள்; எங்களுடன் தனிமையில் பேசுவதை அவள் நாடவில்லை; அந்தச் சமயங்களிலும் அவளிடம் முன் போலப் பழக முடியவில்லை. துரைசாமியிடமும் அவன் தாயாரிடமும் அவள் பேசுவதில் ஒருவித பயம், பிரியம், முகஸ்துதியான உபசரணை இவ்வளவும் கலந்திருந்தன. ஆனால், அவர்களிடம் நெருங்கிப் பேசும் முறையில் கூட அவள் எங்களிடம் பேசவில்லை. அவளுடைய பழைய வாஞ்சையும் சுதந்திரமும் குதூகலமும் எங்கோ மறைந்து போய் விட்டன. எங்கள் வீட்டுச் செய்தி ஒன்றிலும் அவளுக்கு ஸாரமில்லை; நாங்கள் விரும்பியபடி எங்களுடன் ஊருக்கு வரக் 'காரணமில்லை' யென்று அவளே மறுத்துவிட்டாள். தன்னை அலங்கரித்துக் கொள்ளவும், துரைசாமிக்கு உபசரணை செய்யவும், மாமியார் கீழ் வேலைக்காரரை மேற்பார்க்கவும் அவளுக்குப் பொழுது சரியா யிருந்தது.

ராஜு சில மணி நேரமே பட்டணத்தில் தங்கினான். அவனை வழியனுப்பி விட்டு அன்றிரவே நாங்களும் ஊருக்குப் போவதாக ஏற்பாடு. நாங்கள் ஸ்டேஷனுக்குப் புறப்படுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பே வஸந்தாவும் துரைசாமியும் எங்களிடம் சொல்லிக் கொண்டு ஸினிமாவுக்குப் போய்விட்டார்கள். வழி நெடுக, வஸந்தாவின் அன்பை இழந்து விட்டதாக என் கணவர் பட்ட கிலேசம் கொஞ்சமில்லை. விளக்குகளுக்கெல்லாம் குடை மாட்டி, ஸ்டேஷன் இருண்டு கிடந்தது. கூலியாள்களும் பிரயாணிகளும் ஒருவரையொருவர் நெருக்கித் தள்ளினார்கள். ராஜுவுக்கு இரண்டாம் வகுப்பு 'பாஸ்'

இருந்தது ; அந்த வண்டியிலும் தலை சாய்க்க இடமில்லை. தோற்பெட்டியைத் தன் இடத்தைக் காக்க வைத்து, அவன் என்னுடன் கீழே நின்றான். என் கணவர் எங்களுக்கு 'டிக்கெட்' வாங்கப் போயிருந்தார். பிரியும் சமயம் நெருங்கவே, எனக்கு ராஜூவிடம் பேசமுடியாமல் நெஞ்சை அடைத்தது. அதை மாற்ற அவன் ஊர்ச் செய்தி யெல்லாம் விசாரிக்க ஆரம்பித்தான் ; யார் யாரைப் பற்றியோ கேட்டான். "வஸந்தா எப்படி இருக்கிறாள் ?" "நன்றாய்த்தான் இருக்கிறாள் ; ஒரு குறைவுமில்லை. இப்பொழுது அவள் புக்ககத்தில் பொருந்திப் போய் விட்டாள். அவள் குணமே மாறிவிட்டது ; தகப்பனார், தமையன் என்கிற பாசத்தை விட்டுவிட்டாள் ; அவர்களுக்கு இசைவாக இருக்கிறாள்."

வஸந்தாவைப் பற்றிச் சிறிது நேரம் பேசினோம் ; அதற்குள் என் கணவர் வந்தார் : வெகு சீக்கிரத்தில் ராஜூவும் நாங்களும் வெவ்வேறு திக்கை நோக்கிப் பிரயாணம் செய்தோம். அவன் மறுநாள் ரயிலில் எழுதிப் போட்ட கடிதம் எனக்கு நான்கு நாள் கழித்து ஊரில் கிடைத்தது. அதில் ஒரு பாகம் பின் வருமாறு : "வஸந்தாவைப் பற்றி நான் எழுதிய முதற்பாடல் உனக்கு நினைவிருக்கிறதா ? அந்தப் பழைய வஸந்தா இறந்துவிட்டாளென்று ஓர் இரங்கற்பா எழுதினேன் ; இன்னும் திருத்தவில்லை.

முழுமதி தேய்வதும் மூத்தோர் சாவதும்
எழிலார் மலாவிழ்ந் திதழ்பல சிதைவும்
உலகிற் புகழ்வளர்ந் துயர்ந்தன யாவும்
நிலையாப் பெற்றியால் நீர்மை அழிதலும்
இன்று வென்றதென் னிளமைப் பேதைமை
அந்நா ளறியேன் அருந்துயர் வடிவம்
இமைவரைச் சாரலி லின்புற் றுலாவிய
உமையவள் நட்புக் குரிமை கொண்டவள்
கண்ணைக் கவர்வதோர் மின்னி னொளியும்
பண்ணோடு கலந்த பாவி னினிமையும்
கள்ளக் குறும்பும் காதற் பான்மையும்

உள்ளக் கிளர்ச்சியின் உவகையும் உற்றவள்
இனத்தோ ரன்றி ஏனையோர் அறியா
நலத்தின் பருவ நாள் முதிராமுன்
இளங்கொடி மாய்ந்தா ளென்ற சொற்கேட்டுக்
கலங்குமென் நெஞ்சம் காரிருள் போர்த்தே.

ராஜுவின் கடிதங்களை யெல்லாம் என் கணவர் படிப்பது வழக்கம்; இதை நான் அவரிடம் காட்டவில்லை.

சிபார்சு

"பூமண்டலத்தில் உடன்பிறந்து, பொருளும் புகழும் பொலிந்தோரா,
தாமும்மகிழ்ந்து, மற்றவரும் தம்மைமதிக்க, 'நல்லவர்' ஆம்
நாமம்சிறந்து, நலங்கள்பல நாளும்பெருகி, நாட்டியச்
சேமம்துலவித் திகழ்மாந்தர் சிலரோ செகத்தில்,
பலப் பலரே!"—அ. மா

ராவ்பகதூர் கணபதி ஐயரின் முன்முற்றம் விசாலமானது.. தரை சலவைக் கற்களினால் அமைந்தது போலிருக்கும்—உற்றுப் பார்த்தால்தான், அது சிமைச் சுண்ணும்புப் பூச்சு என்று தெரியவரும். முற்றத்தின் நடுவில் ஒரு சிறு மேஜை: இதன்மேல் பளபள வென்று துலக்கிய ஒரு வெண்கலக் கிண்ணியில் இரண்டு ரோஜாப் பூக்கள். சுவர்களில் 'ரவிவர்மா' படங்களும், அதிகமாக உடை தரிக்காத ஒரு பச்சை நிறச்சீமாட்டியின் உருவங்கொண்ட 'காலெண்டரு'ம் மாட்டப்பட்டிருந்தன. வந்தவர்கள் உட்காருவதற்கு ஓரமாய் ஒரு விசிப்பலகை. இதன் மீது ராவ்பகதூரைக் காணுவதற்காகக் காத்துக் கொண்டு நாங்களிருவரும் உட்கார்ந்திருந்தோம்.

அநேக வருஷங்களுக்கு முன், கணபதி ஐயருக்குப் பட்டமும் பதவியும் கிடைக்கு முன், அவர் என் தகப்பனு

ருடன் மிக்க சிநேகம் பாராட்டி வந்தார். என் தகப்பனார் ஒரு கலாசாலையில் அற்பச் சம்பளத்தில் தமிழ்ப் பண்டித ராக இருந்தார். அப்பொழுது கணபதி ஐயர் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவதுண்டு. ஆங்கிலத்தில் தாம் எழுதிய கட்டுரைகளைக் கொண்டு வருவார்: பிறகு இவை களை ஓய்வு நேரத்தில் என் தகப்பனார் திருத்தி, தமிழில் மொழி பெயர்த்துத் தருவார். பிறகு, இவைகளைப் பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும், கணபதி ஐயர் வெளியிடுவார். தமிழில் தனக்கு அளவில்லாத பிரீதியுண் டென்று அவர் எப்பொழுதும் சொல்லிக்கொண்டே யிருப்பார். இதைக் கேட்டுக் கேட்டு எல்லாரும் இதை நம்பிவிட்டார்கள். மேலும் தன் பெயரில் வெளிவரும் புத்தகங்களிலிருந்தும், கட்டுரைகளிலிருந்தும் இவர் தமி ழில் அளவில்லாப் பாண்டித்யமும் உடையவரென்று பெயர் பெற்று விட்டார். பின் ஊரெங்கும் தமிழியக்கம் ஏற்பட்டபொழுது, தமிழ் மொழியை அழிதலினின்றும் காப்பாற்றி, அதற்குப் புத்துயிர் கொடுத்து உதவியவர் களில் முக்கியமானவராய் விளங்கி, ராவ்பகதூர்ப் பட் டத்தையும் அடைந்துவிட்டார். என் தகப்பனார் இறந்து போகவே, ராவ்பகதூர் கணபதி ஐயரின் சகவாசத்தை நாங்கள் இழந்துவிட்டோம்.

சில நாட்களுக்கு முன் தற்செயலாக ஒரு கடையில் என்னைக் கண்டபொழுது, பார்த்து ஏழெட்டு வருஷங்க ளான போதிலும், எப்படியோ யாரென்று தெரிந்து கொண்டு விட்டார். வீட்டில் யாவரும் சுகமா வென்று வினவினார். பிறகு "நீ என்ன செய்து கொண்டிருக் காய்?" என்று கேட்டார். வேலையில்லாது சும்மா இருக் கிறேனென்றும், வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிறே னென்றும் நான் சொன்னேன். காலத்தின் கொடுமை யைப் பற்றி ஏதோ முணுமுணுத்துக் கொண்டே கடையிலிருந்து வெளியேறி விட்டார். எனக்குக் கிடைக் கக்கூடிய வேலை யொன்று, கணபதி ஐயரின் சிபார்சிருந் தால் கட்டாயமாகக் கிடைக்குமென்று கேள்விப்பட்டே, அன்று நான் அவர் வீட்டைத் தேடி வந்திருந்தேன்.

கணபதி ஐயரைப் பார்க்க எனக்கு முன்னதாகவே வந்த ஒருவர் முன்முற்றத்தில் விசுப்பலகையின் மீது அமர்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவரை மூன்று முறை வினவினதின் பயனாக, ராவ்பகதூர் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து கொண்டிருப்பதாகவும், வரச் சற்று நாழிகையாகு மென்றும் தெரிந்து கொண்டேன். பிறகு அவர் என்னிடம் பேசவில்லை. நானும் அவர் சிந்தனையைக் கலைத்து எதுவும் கேட்கவில்லை.— அவர் பக்கத்தில் உட்கார்ந்து, சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு வெறுமென்றிருந்து விட்டேன்.

* * * *

இப்படியே சுமார் ஒருமணி நேரம் கழிந்தது. எனக்குத் தாகமெடுக்க ஆரம்பித்தது. நிமிஷத்திற்கு நிமிஷம் தாகம் அதிகரித்தது. பக்கத்திலிருக்கும் யோகியை "இந்த வீட்டில் தண்ணீர கப்படுமா ?" என்று கேட்க நினைத்தேன். ஆனால், அவரும் என்னைப்போல் கணபதி ஐயரைப் பார்க்க வந்தவராகையால் அவருக்குத் தெரிந்திருக்காதென்று கேட்கவில்லை. இதற்குள் ராவ்பகதூரே ஸ்நானத்திலிருந்து வந்துவிட்டார். அவர் பின் ஒரு வேலையாள் மெத்தையமைத்த பிரம்பு நாற்காலி யொன்றைத் தூக்கிக் கொண்டு வந்தான். நாங்கள் எழுந்து நின்றோம்.

தபஸியைக் கண்டவுடன் "வாங்கோ வாங்கோ! என்ன, வந்து ரொம்ப நேரமாச்சா? புதன் கிழமையேல் லையோ, அப்பியங்க ஸ்நானம்" என்று சொல்லிக் கொண்டே கணபதி ஐயர் நாற்காலியில் சாய்ந்தார்.

"இல்லை யில்லை, இப்பத்தான் வந்தேன்—கால்மணி நேரங்கூட இருக்காது" என்று அவர் பல்லைக் காட்டி இளித்துப் பொய் மொழிந்தார்.

நானிருப்பது ராவ்பகதூருக்கு அப்பொழுதுதான் தென்பட்டது. தன் புருவங்களைச் சுளித்து, சந்தேகந் தோன்றிய குரலில் 'ஹல்லோ' என்று சொன்னார். நான் இன்னாரென்று அவருக்குத் தெரியவில்லை போல் தோன் றிற்று. என்னையே நான் அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

"அட நீயா, வேற யாரோன்னுனு பார்த்தேன்! வாப்பா, வா" என்று வரவேற்று, உட்காரும்படி எதிரி லிருக்கும் விசுப்பலகையைக் காட்டினுர். யோகியின் பக்கத்தில் மறுபடியும் நான் அமர்ந்தேன். ராவ் பகதூர் எங்களை ஒருவருக்கொருவர் தெரிவித்து வைத்தார். என் பெயரை அவர் மறந்துவிட்டார். ஆனல் இந்த அற்ப விஷயத்திற்காக அவர் தயங்கவில்லை. இன்னருடைய புதல்வனுகிய சுப்பிரமணியன் என்று என்னைக் குறித்தார்; ஏழு தலைமுறைகளாக எங்கள் வீட்டில் 'சுப்பிரமணியன்' என்ற பெயர் கிடையாது. தபஸியின் பெயர் ராமானுஜாசாரியார் என்றும், அவர் ஒரு தமிழ்ப் பத்திரிகையைக் கையாளுபவர் என்றும் அறிந்து கொண்டேன். கணபதி ஐயர் பத்திராதிபரைச் சுட்டிக் காட்டி, "இவாளோட ஒரு சின்ன காரியம்—நீ அது மட்டும் ஏதாவது பேப்பர் பார்த் திண்டிரு" என்று சொல்லிவிட்டார். அவ்விடத்தில் 'ஏதாவது பேப்பர்' இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் எனக்குத் தாகம் பொறுக்க முடியவில்லை. இருந்தாலும் என்ன செய்வது? ஆசாரியாரும் ஐயரும் பேசுகையில் குறுக்கிட்டுத் தண்ணீர் கேட்க எனக்குத் துணிவில்லை, ஆசாரியார் சொல்லுகிறுர்:

"உங்கள் கையாலே ஒரு வியாஸமோ ஏதாவது நம்ம பத்திரிகைக்கு—"

"அதுக்கென்ன, க்ளாட்லி—ஆனுப்ப பாருங்கோ, ஆசார்யார்வாள், ஜஸ்ட் நவ் எனக்கு ஏகத்துக்கு பிஸினஸ். நேத்துக்கூட, ஸர். டி. பி. இங்க வந்திருந்தப்போ—"

ஆமாமாம், பெரிய மனுஷ்யாள்னு எவ்வளவோ அலுவல்! இருந்தாலும் ஒழிஞ்ச நேரத்திலே, ஏதாவது—

"அதுதான் நானுஞ் சொல்லறேன், நேத்து ஸர். டி. பி. வந்திருந்தப்போ அவர் கூடச் சொன்னுர், 'நீங்க இப்ப எழுதறத விட்டுட்டேளே, வாட் எ பிடி, வாட் எ பிட்டி' அப்படின்னு. ஆனுப் பாருங்கோ எழுதறதுன்னு இதுக் குன்னு உட்கார்ந்து எழுதணம்—நான் என்ன சொல்ல றேன்னு, இங்கிலிஷ்ல எழுதினது ஏற்கனவே ஒன்னிரண்டு

இருக்கு; உள்ள எங்கயோ கிடக்கிறது; நாளைக்குத் தேடிப் பார்த்து உங்களுக்கு அனுப்பறேன், அத நீங்க—"

பத்திராதிபர் இவைகளை மொழி பெயர்த்துப் பிரசுரிக்க ஒத்துக்கொண்டு, தன் நன்றியறிவை முறையே செலுத்திய பின், ஒருவாறுக விடைபெற்றுச் சென்றார்.

ராவ்பகதூர் என்னைப் பார்த்துத் திரும்பினார். 'வெல்' என்றார்.

எனக்கு மிகவும் தாகமாக இருப்பதாகவும் தண்ணீர் வேண்டுமென்றும் தெரிவித்துக் கொண்டேன்.

" அட அப்படவே சொல்லப்படாதா! தண்ணி என்ன தண்ணி, கொஞ்சம் காப்பி சாப்பிடு—எய் யாருடா அங்கே?" என்று வேலைக்காரனைக் கூப்பிட்டார்.

யாரும் வரவில்லை. ராவ்பகதூர் எழுந்து வீட்டினுள் சென்று வந்தார். நாற்காலியில் அமர்ந்து " இதோ வரது— என்ன, ஆத்திலே எல்லாரும் சௌக்கியமா?" என்றார். யோக க்ஷேம விசாரணை முடிந்தபின், நான் வந்த காரியத்தைத் தெரிவித்தேன் :

" தங்கள் சிபார்சிருந்தால், இது கட்டாயமாக எனக்குக் கிடைக்கும் " என்று முடித்தேன்.

" அது சரிதான், நீ என்ன பாஸ் பண்ணியிருக்காய்?" என்று அவர் கேட்டார். நான் தேறியுள்ள பரீக்ஷைகளையும், நான் பெற்ற பயனற்ற பட்டங்களையும் பற்றி விவரித்தெடுத்துரைத்தேன்.

" ஹூம், அது போராது, இந்த வேலைக்கு நன்னாத் தமிழ்த் தெரியணுமே, உனக்கென்ன தமிழில் ஏதாவது ஸ்பெஷல் க்வாலிபிகேஷன் இருக்கா?" என்று கேட்டார்.

"என் தகப்பனார் பண்டிதர், நானும் சொல்பம் படித்திருக்கேன். இதை எல்லாம் விட தங்கள் சிபார்சு தான் முக்கியம்" என்றேன்.

ராவ்பகதூர் ஒரு விதமாகச் சிரித்தார்.

"என்ன சுப்பிரமணியன், நான் சொல்லறதக் கேளு. நான் உன்னிடம் எதையும் மறைக்கவில்லை. நான் சிபார்சு

செய்தால் நிச்சயமாய் இந்த வேலை கிடைக்கும். ஆனால் எப்படி நான் செய்யறது? உனக்குத்தான் தெரியுமே தமிழ்ல எனக்கு என்ன ஆசைன்னு—தமிழ் விஷயத்தில் மட்டும் நான் பார்ஷியலா இருக்கமாட்டேன். உனக்கோ ஸ்பெஷல் க்வாலிபிகேஷன்ஸ் இல்லை. இதப்பாரு—" ராவ்.பகதூர் கணபதி ஐயர் தன் நாற்காலியை நகர்த்தி என்னருகில் இழுத்துப் போட்டுக்கொண்டார்.

"யாரண்டையும் சொல்லாதே; நேத்து ஸர். டி. பி. கூட இதே காரியமாத்தான் வந்தார், தன் மருமானுக்கு சிபார்சு செய்யச் சொல்லி" என்று என் காதில் ஓதினார். "முடியாதுன்னு சொல்லிவிட்டேன், க்வாலிபிகேஷன்ஸ் இல்லைன்னு. நான் என்ன சொல்லறேன்னா—".

யாரோ ஒரு சமையற்காரன் போல் ஒருவன் முற்றத்திற்கு வரவே பேச்சை நிறுத்தி அவனை நோக்கித் திரும்பினார். எனக்கு வந்த கோபமும் ஏமாற்றமும் சமையற்காரனைக் கண்டவுடன் எங்கேயோ போய்விட்டன. வேலைக்கு சிபார்சு கிடைக்காவிட்டாலும், இந்தப் பாழுந் தாகத்திற்கு ஏதாவது கிடைத்தால் போதுமென்று தோன்றிற்று.

"அம்மா சொல்லச் சொன்னா, எலை போட்டாச்சுன்னு" என்று அவன் சொன்னான்.

கணபதி ஐயர் நாற்காலியை விட்டெழுந்தார். 'வெல், குட் பை, சுப்பிரமணியன்—ஆத்திலே ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லு" என்று வீட்டினுள் மறைந்துவிட்டார்.

* * *

மறுநாள், வேலையைப்பற்றி என்னிடம் சொன்ன நண்பனைக் கண்ட பிறகுதான், நான் எவ்வளவு ஏமாந்து போனேன் என்று எனக்கே தெரியவந்தது. இந்த வேலைக்கு ராவ் பகதூர் கணபதி ஐயரின் சிபார்சு போதாதாம், அதனால்தான் இவர், தன்னால் முடியாது என்று ஒப்ப வெட்கி, வீண் சாக்குச் சொல்லி, சிபார்சு செய்ய மறுத்துவிட்டார். "ராவ் பகதூர் கணபதி ஐயர் [illegible] நான் அப்படிச் சொல்ல வில்லையே; இந்த வேலை அவர் கையிலில்லை" என்று என் நண்பன் சொன்னான். இது திவான் பகதூர் கணேசய்யர் கொடையிலிருக்கிறதாம்.

Printed at the Indian Express Branch Press, Mt. Rd., Madras.

மகாத்மா தம்பதிகள்

மகாத்மா காந்தி— நினைவு மாலை

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

உலக சிரேஷ்டரென்றும், இந்தியாவின் ஆத்மா வென்றும் போற்றப் பெறும் காந்தி அடிகளையும், காந்தியம் என்ற வாழ்க்கைத் தத்துவத்தையும் தெளிவாகக் காட்டும் இந்நூல் ஒவ்வொரு தமிழருக்கும் ஹஸ்த பூஷணமாகவும், ஹிருதய பூஷணமாகவும் இருக்கவேண்டியது அவசியம்.

96 பக்கங்கள் விலை அணு **8**

மகாத்மாவை அறிந்துகொள்வதற்கு இவரது வாழ்க்கைத் துணைவியாரையும் ஒருவாறு அறிந்து கொள்ள வேண்டும். இதற்காக ஸ்ரீ. ருக்மிணி பி. ஏ. எழுதியிருக்கும் அன்னை கஸ்தூரிபாவை வாசித்துப் பாருங்கள். இந்த நூலுக்கு ஸ்ரீ. அம்புஜம்மாள் எழுதியிருக்கும் முன்னுரையில், பின் வருமாறு குறிப்பிடுகிறார்:

"இவள் அன்னையின் சரித்திரத்திலும், குண சித்திரத்திலும் உள்ள சில ஆழ்ந்த உண்மைகளைக் கண்டுபிடித்து வெளியிட்டிருப்பது இச் சிறு நூலின் சிறப்பியல்பு."

அன்னை கஸ்தூரிபா

100 பக்கங்கள் விலை அணு **12**

கவியும் கர்ம வீரரும்

நோபெல் பரிசு பெற்றவரும், நிறத்திமிர் கொண்ட ஐரோப்பியர்களாலும் "ஆசியாவின் ஆஸ்தான கவி" என்று முடிசூட்டப் பெற்றவரும் வங்க நாட்டுக் கவீந்திரராகிய ரவீந்திரநாத டாகுர்தான் என்பது தமிழர்களாகிய நாமும் அறிந்ததே. இவரைக் குறித்துக் கட்டுரைகளும், சில சிறு நூல்களும் தமிழிலும் வெளிவந்திருக்கின்றன. எனினும் இவரது வாழ்க்கைக்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பை ஸ்ரீ. கி. சந்திரசேகரன், எம். ஏ. பி. எல்., விளக்கியிருப்பதுபோல் இதுவரையில் எவரும் தமிழில் விளக்கிக் காட்டியதில்லை.

ரவீந்திரநாத டாகுர்

அழகிய படங்கள் அடங்கியது   விலை அணா 8

எதிர் பாருங்கள்!

கவிகளின் வாழ்க்கைச் சித்திரம்போல் கர்ம வீரர்களின் வாழ்க்கைச் சித்திரமும் வசீகரமானது. கர்ம வீரர்களிலே முன்னணியில் நிற்பவர்கள், தேச விடுதலைக்காகப் போராடுவோர், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, பாபு ராஜேந்திரப் பிரசாத், மௌலானா அபுல்கலாம் ஆஜாத் முதலானவர்கள். தேச விடுதலையைக்காட்டிலும், தேசத்தைத் துண்டாடுவதே அவசரமான காரியமென்று சிலர் முஸ்லிம்களின் பெயரால் கிளர்ச்சி நடத்தும் இந்நாளிலே, முஸ்லிம்களின் தேச பக்திக்கும் தியாக புத்திக்கும் ஓர் இலக்கியமாக விளங்கும் மஹா புருஷர் மௌலானா ஆஜாத். இவரது திவ்ய சரித்திரம் மிஸ்டர் எம். எம். இஸ்மாயில் எம். ஏ. என்ற முஸ்லிம் இளைஞரால் எழுதப்பட்டிருக்கிறது. விரைவில் வெளிவரும்.

03:48

மௌலானா ஆஜாத்